விலை ரூபா: 15.00
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii
பக்கங்கள்: இருபது
சங்கு 12 வள்ளுவர் ஆண்டு 2042 சித்திரை 06 செவ்வாய்க்கிழமை (19.04.2011) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 121

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
SLS 107 தரம் கொண்டதும் 100 வீத சாதாரண போட்லான் சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

# ஐ.நாவின் அறிக்கைக்கு கூட்டமைப்பு வரவேற்பு

## ஆக்கபூர்வமான செயலில் ஈடுபட வலியுறுத்தல்



(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் சபையின் நிபுணர்கள் குழுவின் அறிக்கையை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வரவேற்றுள்ளது. ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் பான் கீ மூனால் நியமிக்கப்பட்ட நிபுணர்கள் குழுவின் அறிக்கை வரவேற்றப்பட வேண்டியது என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார். வன்னிப் போர் மேற்கொள்ளப்பட்ட முறையானது போர் மற்றும் சமாதானத்தின்போது தனிப்பட்ட கௌரவத்தைக் காப்பாற்றுவதற்காக வடிவமைக்கப்பட்ட சர்வதேசச் சட்டத்தின் முப்பரிமாணத்தின் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலாக தென்படுகிறது என்பதை நிபுணர்கள் குழு கண்டறிந்துள்ளதை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வரவேற்பதாக இவ் அறிக்கையில் இரா.சம்பந்தன் சுட்டிக் காட்டியுள்ளார். *அவ் அறிக்கையின் முழு வடிவத்தையும் இங்கு தருகின்றோம்.*

ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகத்திற்கான ஆலோசனைக் குழாம் சமர்ப்பித்த அறிக்கையின் நிறைவேற்றுச் சாராம்சம் எனத் தெரிவிக்கப்பட்ட செய்தியை ஊடகங்களில் வாசித்தோம்.

சமீபத்தில் முடிபடைந்த யுத்தத்தினால் மிக மோசமாகப் பாதிப்புற்ற வடக்கு- கிழக்கின் மக்களால் ஜனநாயக ரீதியாக தெரிவுசெய்யப்பட்ட பிரதிநிதிகள் என்ற முறையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இதற்கான பதிலுரையை வழங்கவேண்டியது எமது கடமை என்று எண்ணுகின்றோம். அதேவேளையில் பூரணமான அறிக்கை எமக்கு கிடைத்தபின்னர் அது குறித்து மேலும் பூரணமான வகையில் எமது பதிலுரையை வழங்குவதற்கான உரிமை எமக்கு உள்ளது.

### அரசியல் தீர்வின்மையே முரண்பாட்டுக்குக் காரணம்

கடந்த அரை நூற்றாண்டு காலத்திற்கு மேலாக நாட்டின் இனத்துவ தேசியவாத முரண்பாட்டுக்கும், அர்த்தமுள்ள ஆட்சிமுறை அதிகாரங்களிலிருந்து தமிழ் மக்கள் ஓரங்கட்டப்பட்டமைக்கான மூலகாரணங்களுக்கு, ஏற்றுக்கொள்ளக்கூடிய, நியாயமான தீர்வொன்றை வழங்கவேண்டும் என்று நாம் நிலைமாற்றமின்றி வலியுறுத்தி வந்துள்ளோம்.


அடுத்தடுத்து ஆட்சிக்கு வந்த இலங்கை அரசின் அரசாங்கங்கள், இத்தகைய அரசியற் தீர்வொன்றை வழங்கத் தவறியமையே முரண்பாடு தீவிரமடைவதற்கும், அதன் விளைவுகளுக்கும் முதனிலைக் காரணமாகும். பல வருட காலமாக இலங்கை அரசு நிராயுதபாணிகளான தமிழ் மக்களை *(20ஆம் பக்கம் பார்க்க)*

## நாய்களின் மூலம் எதிர்ப்பு நடவடிக்கை

(கொழும்பு)

உயர் கல்வி அமைச்சர் எஸ்.பி. திசாநாயக்க, றுகுணுப் பல்கலைக்கழகத்தின் புதிய கட்டிடமொன்றை திறந்துவைக்க சென்றபோது அப்பல்கலைக்கழக சுற்றுப்புறத்திலும் மற்றும் வெல்லமடம பகுதியிலும் எஸ், பி ஆகிய எழுத்துக்கள் பொறிக்கப்பட்ட பல கட்டாக்காலி நாய்கள் சுற்றித்திரிந்ததாக பல்கலைக்கழக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

அமைச்சரின் வருகையை ஒட்டி அப் பகுதியில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருந்ததாகவும் சிவிலுடை அணிந்திருந்த பொலிஸாரும் கடமையில் ஈடுபடுத்தப்பட்டிருந்ததாகவும் அவ் *(20ஆம் பக்கம் பார்க்க)*



பங்களாதேஷுக்கு இராஜாங்க விஜயம் ஒன்றை மேற்கொண்டுள்ள ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நேற்று திங்கட்கிழமை பங்களாதேஷ் பிரதமர் சேக் ஹசீனாவை பிரதமர் அலுவலகத்தில் வைத்துச் சந்தித்தார். இச் சந்திப்பின்போது வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ், நாடாளுமன்ற உறுப்பினர்களான சயின் வாஸ் குணவர்த்தன, ஏ.எச்.எம். அஸ்வர் மற்றும் ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க ஆகியோரும் கலந்துகொண்டனர்.

## யாழ். மீனவர்கள் மூவர் விடுதலை

(சென்னை)

இந்திய மீனவர்களால் சிறைப்பிடிக்கப்பட்ட யாழ்.வல்வெட்டித்துறை மீனவர்கள் மூவர் நேற்று விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த மாதம் வல்வெட்டித்துறை ஆதிகோவிலடியிலிருந்து கடலுக்கு மீன்பிடிக்கச் சென்ற இம் மீனவர்களை இந்திய மீனவர்கள் சிறைபிடித்திருந்தனர்.

மேற்படி மீனவர்கள் மூவரும் நேற்று இந்திய கடற்படையினரால் இலங்கை கடற்படையினரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

அவர்களை காங்கேசன்துறை பொலிஸாரிடம் கடற்படையினர் ஒப்படைத்தனர். (ச-5)

# ஐ.நாவின் அறிக்கை குறித்து ஐ.தே.கட்சி மாறுபட்ட கருத்து

## ஆதரவாகவும், எதிராகவும் அறிக்கை

(கொழும்பு)

ஐ.நா. சபையின் நிபுணர்கள் குழு வெளியிட்ட அறிக்கை குறித்து ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆதரவாகவும் எதிராகவும் அறிக்கைகளை வெளியிட்டு வருகின்றனர்.

ஐக்கிய நாடுகளின் நிபுணர் குழு பரிந்துரைகளை நிராகரிக்க முடியாது என ஐக்கிய தேசியக் கட்சியின் பதுளை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஹரீன் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் அமைப்பில் அங்கம் வகிக்கும் நாடு என்ற ரீதியில் இலங்கை அரசாங்கம் நிபுணர் குழுவின் பரிந்துரைகளையும் கண்காணிப்புகளையும் நிராகரிக்க முடியாது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எவ்வாறெனினும் ஐக்கிய நாடுகளின் நிபுணர் குழுவின் அறிக்கையில் பொய்யான தகவல்கள் காணப்பட்டால் அதனை ஐக்கிய தேசியக் கட்சி எதிர்ப்பதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

நிபுணர் குழு அறிக்கை தொடர்பில் விரிவான ஆய்வு நடத்தப்பட வேண்டியது அவசியமானது என அவர் தெரிவித்துள்ளார். கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாடொன்றில் கலந்து கொண்ட போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

எவ்வாறெனினும் ஐக்கிய நாடுகளின் நிபுணர் குழு அறிக்கைக்கு எதிராக போராட்டங்களையும் ஆர்ப்பாட்டங்களையும் நடத்துவது புத்திசாலித்தனமான நடவடிக்கையாக அமையாது என அவர் தெரிவித்துள்ளார். நாட்டை நேசிக்கும் கட்சி என்ற ரீதியில் எந்த சந்தர்ப்பத்திலும் நாட்டுக்கு ஆதரவான தீர்மானங்களையே மேற்கொள்ளும் என அவர் *(20ஆம் பக்கம் பார்க்க)*

# யாழில் அரசியல்வாதி ஒருவரை கைதுசெய்ய இராணுவத்தினர் திட்டம்?


## இணையத்தளச் செய்தியால் பரபரப்பு

(கொழும்பு)

யாழ்ப்பாணத்தில் மீண்டும் போரைத் தூண்டிவிடும் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ள தமிழ் அரசியல்வாதி ஒருவரை கைதுசெய்யவுள்ளதாக யாழ்.மாவட்ட கட்டளைத் தளபதி மேஜர் ஜெரல் மகிந்த ஹத்துருசிங்க தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் சில அரசியல்வாதிகள் மீண்டும் போரை ஆரம்பிக்க முயற்சிப்பதாக குற்றம் சுமத்தியுள்ள அவர், இத்தகைய அரசியல்வாதிகளின் பின்னணியிலேயே அண்மைக்காலங்களில் யாழ்ப்பாணத்தில் குற்றச் செயல்கள் அதிகரித்திருப்பதாகவும் கூறியுள்ளார்.

இது தொடர்பாக வெளியாகியுள்ள செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,



போரைத் தூண்டிவிடும் முயற்சியில் ஈடுபட்டுள்ள இந்த அரசியல்வாதி *(20ஆம் பக்கம் பார்க்க)*

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

**Study & Work in UK and Canada**



Hurry......for Jan-2011
Intake Get Register Now
இறுதிச் சந்தர்ப்பம் IELTS தேவையில்லை
Administration & Documentation

என்பன வெற்றிகரமான முறையில் எங்களால் செய்து தரப்படும்.
ஐரோப்பிய நாடுகளுக்கான வீசா பெறுவதற்கான Sponsorship பிரச்சினையா? உடனடியாக ஏற்பாடு செய்து தரப்படும்.
சகல தொடர்புகளுக்கும்: 0729994777
London City College
No.01, Deanston House, Deanston Place, Colombo-03
(C-2291)

# ஒருங்கிணைப்புக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தின் ஒருங்கிணைப்பு குழுக்கூட்டம் இன்று காலை 9.50 மணியளவில் யாழ்.மாவட்ட செயலகத்தின் கேட்போர் கூடத்தில் பாரம்பரிய கைத் தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா தலைமையில் இடம்பெறவுள்ளது.

இதில் யாழ்.குடாநாட்டில் முன்னெடுக்கப்பட வேண்டிய அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பாக கலந்துரையாடப்படவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (ச-6)

**வர்த்தகப் பெருமக்களே...**

பெறுமதிமிக்க உங்கள் வியாபார நிறுவனங்களை இலகுவாகப் பதிவு செய்து, அதற்குரிய கௌரவத்தையும் உத்தரவாதத்தையும் பெற்றுக் கொள்ளுங்கள்.

தொடர்புகளுக்கு:-0729994777
(C-2290)

# அரசின் கொள்கைகளுக்கு ஏற்பவே மனிதாபிமான பணிகள் நடைபெறவேண்டும்

## அமைச்சர் டக்ளஸ் வலியுறுத்தல்



அரச ஊழியர்கள் தமது அலுவலகக் கடமையுடன் சமூகக் கடமைகளையும் இணைந்து மேற்கொள்ள வேண்டும் என பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ்தேவானந்தாகேட்டுக்கொண்டார்.

யாழ்.மாவட்ட அரசசெயலகத்தில் நேற்று நடைபெற்ற அரச அதிபர், பிரதேசசெயலர்கள், அரசதிணைக்கள பிரதிநிதிகள், மக்கள் பிரதிநிதிகள் ஆகியோர் பங்கெடுத்த மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுக்கூட்டத்திலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், அரச ஊழியர்கள் தாம் பணிபுரிகின்ற சமூகத்தின் பிரதிநிதிகளாக மட்டுமல்லாது தமது அலுவலகக் கடமையுடன் சமூகக் கடமைகளையும் முன்னிறுத்தியே பணிபுரிய வேண்டும்.

தேசிய கீதம், தேசியக் கொடியேற்றல் தொடர்பிலும் அரச திணைக்களங்களின் துறைசார்ந்த அதிகாரிகள் கவனமெடுக்க வேண்டும். அரசின் கொள்கைத் திட்டங்களுக்கு அமையவே தேசிய, சர்வதேச அரசசார்பற்ற நிறுவனங்களினது மனிதாபிமானப் பணிகள் முன்னெடுக்கப்படுவதாகவும், எனவே அரசின் கொள்கைத் திட்டங்கள் தொடர்பிலும் மக்களுக்கு தெளிவூட்ட வேண்டிய பொறுப்பு அரச ஊழியர்களுக்கு உண்டெனவும் தெரிவித்தார்.

அத்துடன் குறிகாட்டுவானிலிருந்து நெடுந்தீவுக்கான குமுதினிப் படகுச் சேவையை நாளொன்றுக்கு இரு தடவைகள் நடத்தப்பட வேண்டுமெனவும் குமுதினிப் படகு நெடுந்தீவு பகுதியில் தரித்து நிற்பதற்கேற்ற நடவடிக்கையினை நாளை முதல் மேற்கொள்வதற்கும் தற்காலிக பணியாளர்களை நியமிக்கவும் துறைசார்ந்தோரிடம் அமைச்சர் பணிப்புரை விடுத்துள்ளார்.

தீவுப்பகுதியின் வரட்சி நிலை தொடர்பாக அதனைக் கருத்தில் கொண்டு அம்மக்களுக்கு நிவர்த்தி செய்வதற்கு உடனடியாக சிறப்பு நிதிவழங்கும் திட்ட நடவடிக்கையினை மேற்கொள்ளுமாறு அரச அதிகாரிகளிடம் கேட்டுக்கொண்டார்.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் நடைபெற்ற இக் கலந்துரையாடலில் ஈ.பி.டி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலன்ரின் (உதயன்), யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் இமெல்டா சுகுமார், வடமாகாண பொது நிர்வாக அமைச்சின் பிரதம செயலாளர் சிவசுவாமி யாழ். மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா மற்றும் ஈ.பி.டி.பியின் யாழ்.மாவட்ட அமைப்பாளர் கந்தசாமி கமலேந்திரன் (கமல்) உள்ளிட்ட மாவட்ட துறைசார்ந்த அரச திணைக்களங்களின் உயரதிகாரிகள் பலரும் கலந்து கொண்டனர். (எ-6)

# இலங்கைக்கு ஆதரவு வழங்கிய இந்திய அரசு மன்னிப்பு கேட்க வேண்டும்

## பழ.நெடுமாறன் வலியுறுத்தல்!

(சென்னை)

வன்னியில் இடம்பெற்ற இறுதிக் கட்டப் போரின் போது இலங்கைப் படைத்தரப்பினர் போர்க்குற்றங்களை மேற்கொண்டுள்ளதாக ஐக்கிய நாடுகள் சபையின் நிபுணர்கள் குழு உறுதிப்படுத்தியுள்ள நிலையில், இலங்கை அரசாங்கத்தின் தமிழினப் படுகொலைக்கு எல்லா வகையிலும் ஆதரவு வழங்கிய குற்றத்திற்காக இந்திய அரசாங்கம் மன்னிப்பு கேட்க வேண்டும் என இலங்கைத் தமிழர் பாதுகாப்பு இயக்கத்தின் ஒருங்கிணைப்பாளர் பழ.நெடுமாறன் வலியுறுத்தியுள்ளார்.

ஐக்கிய நாடுகள் சபையின் நிபுணர்கள் குழுவின் அறிக்கை மற்றும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ள பரிந்துரைகள் குறித்து அவர் நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இவ்வாறு வலியுறுத்தப்பட்டுள்ளது.

2010ஆம் ஆண்டின் ஜனவரி மாதத்தில் டப்ளினில் கூடிய மக்கள் தீர்ப்பாயம் இலங்கை படைத்தரப்பின் போர்க்குற்றவாளிகள் என தீர்ப்பளித்து சர்வதேச நீதிமன்றம் அவர்களை விசாரணை செய்ய வேண்டும் என்று கூறியது.

இப்போது ஐக்கிய நாடுகள் சபையும் மேற்கு நாடுகளும் இலங்கை அரசாங்கத்தின் தரப்பினர் போர்க்குற்றவாளிகள் என சுட்டிக் காட்டிய பின்னராவது இந்திய அரசு முன்வந்து பகிரங்கமாக இலங்கை அரசாங்கத்தை கண்டித்திருக்க வேண்டும்.

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமை ஆணையத்தில் இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மீது மனித உரிமை மீறல் குற்றச்சாட்டிலிருந்து அவரை காப்பாற்றியதன் மூலம் அவருடைய கொடுஞ் செயல்களை மூடி மறைக்க இந்தியா துணை நின்றது என அவர் தனது அறிக்கையில் கூறியுள்ளார். (ச-5)

## தங்கபாலுவை நீக்கக் கோரிக்கை

(சென்னை)

தமிழக காங்கிரஸ் தலைவர் பதவியிலிருந்து தங்கபாலுவை நீக்கக் கோரி மத்திய அமைச்சர்கள் சிதம்பரம், வாசன் ஆகியோர் காங்கிரஸ் கட்சியின் தலைவர் சோனியா காந்தியிடம் வலியுறுத்தியுள்ளனர்.

மத்திய அமைச்சர்கள் ஜி.கே வாசன் மற்றும் ப.சிதம்பரம் ஆகியோரின் ஆதரவாளர்களான எஸ்.வி.சேகர், கராத்தே தியாகராஜன் உட்பட இளைஞர் காங்கிரஸ் நிர்வாகிகள் என 19பேரை கட்சியை விட்டு தங்கபாலு நீக்கியிருந்தார்.

மலாப்பூரில் போட்டியிட்ட தனக்கு எதிராக செயற்பட்டதாகவும் தனக்குத் தொகுதி ஒதுக்கிக் கொண்டதை எதிர்த்தும் போராட்டம் நடத்தியதாகவும் இந் நடவடிக்கையை தங்கபாலு மேற்கொண்டிருந்தார்.

இதையடுத்து தங்கபாலுவுக்கு எதிராக வாசன், சிதம்பரம், இளங்கோவன் உள்ளிட்ட அனைத்து கோஸ்டித் தலைவர்களும் ஒன்று சேர்ந்து தமிழக காங்கிரஸ் தலைவர் பதவியிலிருந்து தங்கபாலுவை நீக்க வேண்டும் என வலியுத்தி வருகின்றனர். (ச-5)

# யாழ்ப்பாணம் மாநகரசபை

## குருநகர் சந்தைக்கடைகள் குத்தகைக்கு வழங்குவதற்கான மீள்கேள்வி அறிவித்தல் - 2011

குருநகர் சந்தைக்கடையில் அமைந்துள்ள கீழ்வரும் இலக்கங்களைக் கொண்ட கடைகளுக்கான விண்ணப்பங்கள் யாழ். மாநகரசபையால் கோரப்படுகின்றன.

| | | |
|---|---|---|
| **கேள்விப்படிவக்கட்டணம்** | - | **ரூபா 400.00 (வற்வரி நீங்கலாக)** |
| **கேள்விப்பிணைப்பணம்** | - | **ரூபா 3, 000.00** |
| **கேள்விப்படிவம் விநியோகித்தல்** | - | **21.04.2011– 04.05.2011 மு.ப. 10.00 மணிவரை** |
| **கேள்விப்படிவம் ஏற்றுக்கொள்ளல்** | - | **04.05.2011 நண்பகல் 12.00 மணிவரை** |
| **கேள்வி திறத்தல்** | - | **04.05.2011 பி.ப. 2.30 மணிக்கு** |

| **கடைகள் விபரம்** | | **ஏற்றுக் கொள்ளப்படும் ஆகக்குறைந்த கேள்வித்தொகை (தலா ஒரு கடைக்கு)** |
|---|---|---|
| **குருநகர் சந்தைக்கடைகள் (மேல்தளம்) (45)** | | |
| 25 தொடக்கம் 37 வரை | 13 கடைகள் | 25, 000.00 |
| 39, 40, 43 | 03 கடைகள் | 25, 000.00 |
| 52 தொடக்கம் 63 வரை | 12 கடைகள் | 25, 000.00 |
| 65 தொடக்கம் 70 வரை | 06 கடைகள் | 25, 000.00 |
| 72 தொடக்கம் 82 வரை | 11 கடைகள் | 25, 000.00 |

கேள்வி நடைமுறைகளும், நிபந்தனைகளும் முன்னையவை பொருந்தும். மேலதிக விபரங்கள் தேவைப்படின் மாநகரசபையின் இறைவரிப்பகுதியில் பெற்றுக் கொள்ளலாம்.

**திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா,**
**மாநகர முதல்வர்,**
**மாநகரசபை,**
**யாழ்ப்பாணம்.**

(சி-3030)

**பணியாளர் தேவை**

கரவெட்டி, நெல்லியடிப் பகுதியில் வசிக்கும் குடும்பம் ஒன்றிற்கு பகலில் மட்டும் வீட்டுப்பணிகளைச் செய்யக்கூடிய பெண் பணியாளர் தேவை.

விருப்பமுடையவர்கள் பின்வரும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

தொ.பே: 0776341216 (இ)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

### உயர்திரு. வே.தி.செல்வரத்தினம்



யாழ்.மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளராகக் கடமையாற்றி வடக்கு மாகாண கல்வி அமைச்சின் பிரதிச் செயலாளராக பதவியுயர்வு பெற்றுள்ள

உயர்திரு. வே.தி.செல்வரத்தினம் அவர்களைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள் .
யா/ வதிரி திரு இருதயக் கல்லூரி
கரவெட்டி.

(சி-3029)

# இன்று ஒரு தகவல்

## நிம்மதியைத் தேடி

ஒரு ஊரில் ஒரு குருவி இருந்தது. அந்தக் குருவி ஒரு நாள் கனவு கண்டது. அந்தக் கனவில் அதற்கு ஒரு அற்புதமான உலகம் தெரிந்தது. அந்த உலகத்தில் கவலை இல்லை– துன்பம் இல்லை– சுமைகள் எதுவும் இல்லை! மிகவும் சந்தோஷமான உலகம் அது.

அப்படி ஒரு உலகம் இருந்தால் யாருக்குத்தான் அங்கே போக ஆசை வராது?

இந்தக் குருவிக்கும் அப்படியொரு ஆசை வந்தது. சரி எப்படிப் போவது...?

இந்த குருவி ஜோதிடர் ஒருவரிடம் போயிற்று.

"ஐயா... இப்படி ஒரு சந்தோஷமான உலகத்தை நான் கனவில் பார்த்தேன் அங்கு போக வேண்டும் என்று எனக்கு மிகவும் ஆசையாய் உள்ளது. ஆனால் அதற்கு வழிதான் தெரியவில்லை. அங்கு எப்படி போவது என்ற விபரத்தை நீங்கள்தான் சொல்ல வேண்டும் என்று கேட்டுக் கொண்டது. அதற்கு அந்த ஜோதிடர், "அந்த உலகத்திற்குப் போக முழு வழியும் எனக்குத் தெரியாது. கொஞ்ச தூரம் வரையில் தெரியும். அதை மட்டும் வேண்டுமானால் உனக்குச் சொல்லிக் கொடுக்கிறேன். அதற்கு எனக்கு நீ தட்சணை தர வேண்டும்" என்றார்.

"சரி என்ன வேண்டும்? " என்று குருவி கேட்டது.

"எனக்குத் தட்சணையாக நீ உன் உடம்பில் இருக்கும் சிறகுகளில் ஒன்றைப் பிய்த்துத் தரவேண்டும்!" என்று ஜோதிடர் கேட்டார். சரி ஒரு இறகு தானே... கொடுத்துவிடுவோம். என்று நினைத்துக் குருவி தன் உடம்பிலிருந்து ஒரு இறகைப் பிய்த்து ஜோதிடரிடம் கொடுத்தது.

அதை வாங்கிக் கொண்ட ஜோதிடர் தனக்குத் தெரிந்த வரையில் வழி சொன்னார். வழியைக் கேட்டுக் கொண்டு குருவி பறந்து போயிற்று நீண்ட தூரம் பறந்தால் களைப்பாக இருந்தது. எனவே ஒரு மரத்தில் உட்கார்ந்தது.

அந்த மரத்தில் ஒரு பாம்பு இருந்தது அந்தப் பாம்பிடம் இந்தக் குருவி "சந்தோஷமான உலகத்தை தேடி நான் பறந்து கொண்டிருக்கிறேன் " என்று தன் கதையைக் கூறியது.

அதைக் கேட்ட பாம்பு "மீதி வழி எனக்குத்தெரியும்... அதை நான் உனக்கு சொல்லவேண்டுமானால் உன் இறகுகளில் ஒன்றை நீ எனக்குக் கொடுக்கவேண்டும்." என்று கூறியது.

உடனே குருவி இன்னோர் இறகைப் பிய்த்துப் பாம்பிடம் கொடுத்து... மேற்கொண்டு போக வேண்டிய வழியைக் கேட்டுத் தெரிந்து கொண்டது.

மறுபடியும் பறக்க ஆரம்பித்தது.

இப்படி இந்தக் குருவி பறந்து சென்று கொண்டே இருந்தது. அங்கங்கே ஒவ்வொருவரிடமும் வழி கேட்டுத் தெரிந்து கொண்டது. ஒவ்வொருவருக்கும் அது தன்னுடைய ஒவ்வோர். இறகைப் பிய்த்துக் கொடுக்கவேண்டிய தாயிற்று.! கடைசியில் ஒரு இடத்திற்கு வந்து சேர்ந்தது. அங்கிருந்து பார்த்தால் சிறிய தூரத்தில் அது கனவில் பார்த்த அந்த சந்தோஷ உலகம் தெரிந்தது. அந்த உலகத்தின் வாசல் கண்ணில் பட்டது.

ஆனால் அந்தக் குருவியால் மேற்கொண்டு பறக்க முடியவில்லை ஏனெனில் இப்போது அதன் உடம்பில் இறகுகளே இல்லை. எல்லாம் பறிபோயிருந்தது. அங்காங்கே வழி கேட்கும்போது எல்லாவற்றையும் பிய்த்துக் கொடுத்துவிட்டது. ஆதலால் இப்போது அதற்கு வெறும் உடம்பு மட்டும்தான் இருந்தது. அந்த நிலையில் குருவி நிமிர்ந்து பார்த்தது. இன்னும் சிறிது தூரம் சென்றால் அந்த உலகத்திற்குப் போய்ச் சேர்ந்துவிடலாம்.

ஆனால் பறப்பதற்கு இப்போது அதற்கு இறகு இல்லையே என்ன செய்வது.

கையைக் காலை உதறுவதுபோல் படபடவென்று அடித்துக் கொண்டது. பறக்க முடியவில்லை கதறிக் கதறிக் துடித்து சோர்ந்து போய் கீழே விழுந்தது. எட்டாத தூரத்தில் தெரியும் அந்த சந்தோஷமான உலகத்தின் வாசலைப் பார்த்தபடியே உயிர்ரை விட்டது.

இந்தக் கதையை குரு ஒருவர் தமது சீடனிடம் கூறி விட்டு "மனிதன் தன் நிலையான இன்பத்தை நிம்மதியை விரும்புகிறான். ஆனால் அதை அடையக் கூடிய முயற்சியில் அவன் தனது இறகுகளையே பிய்த்து எறிந்து விடுகிறான். இதுதான் அந்தக் கதைக்கு விளக்கம் " என்று தெரிவித்தார்.

இந்த உலகத்தில் எல்லோரும் சந்தோஷமாக இருக்க வேண்டும் என்று தான் பலரும் திருமணம் செய்து கொள்கிறார்கள். ஆனால் அந்த சந்தோஷத்துக்கு விலையாக நிம்மதியைக் கொடுக்க வேண்டியுள்ளதே!.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# மன்னார் பிரதேச செயலாளர் மீதான தாக்குதல் தொடர்பாக 8 பேர் கைது

மன்னார் பிரதேச செயலாளர் திருமதி ஸ்ரான்லிடி மேல் தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக இது வரை 8 பேர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளதாக மன்னார் மாவட்ட சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சர் கொடிதுவக்கு தெரிவித்துள்ளார்.

சம்பவம் இடம் பெற்ற கடந்த 13 ஆம் திகதி ஒரு சந்கேநபரும் மறு நாள் வியாழக்கிழமை 3 சந்தேக நபர்களும் கைது செய்யப்பட்டதுடன் தலைமறைவாகியிருந்த 4 சந்தேகநபர்கள் நேற்று திங்கட் கிழமையும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தற்போது மன்னார் பொலிஸ் நிலையத்தில் தடுத்துவைக்கப்பட்டுள்ள இவர்கள் விசாரணைகளையடுத்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படுவார்கள் என மன்னார் மாவட்ட சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர் கொடிதுவக்கு குறிப்பிட்டார்.

(ஸ்ரீ-2)

# திருநாவுக்கரசு நாயனார் குருபூசை

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்கா தேவி தேவஸ்தானத்தில் திருநாவுக்கரசு நாயனார் குருபூசை எதிர் வரும் 24 ஆம் திகதி நடை பெற வுள்ளது.

(ஸ்ரீ-2)

# போலி விசாமூலம் இத்தாலி செல்ல முயன்றோருக்கு பிணை

(கொழும்பு)

போலி விசாவை பயன்படுத்தி இத்தாலி செல்ல முற்பட்டு ஜோர்தானில் வைத்து அந்த மோசடி தொடர்பாக கண்டுபிடிக்கப்பட்டு இலங்கைக்கு திருப்பி அனுப்பப்பட்ட இரண்டு சந்தேக நபர்களை நீர்கொழும்பு பிரதான நீதிவான் தலா 15 ஆயிரம் ரூபா ரொக்கப் பிணையிலும் தலா இரண்டு இலட்சம் ரூபா சரீரபிணையிலும் விடுதலை செய்ய உத்தரவிட்டுள்ளார்.

கொழும்பு - 10 மற்றும் மாரவில பிரதேசத்தை சேர்ந்த இரு நபர்களே விளக்கமறியலில் இருந்து பிணையில் செல்ல உத்தரவிடப்பட்டவர்களாவர்.

சந்தேக நபர்கள் இருவரும் 2011 மார்ச் மாதம் 29 ஆம் திகதி ஜோர் தானிலிருந்து இலங்கைக்கு திருப்பி அனுப்பப்பட்ட போது கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளனர்.

(ஸ்ரீ-2)

# புதிய நிர்வாகசபை உறுப்பினர் தெரிவு

(யாழ்ப்பாணம்)

யா/செங்குந்தான் இந்துக்கல்லூரியின் பழைய மாணவர் சங்க புதிய நிர்வாகத்தெரிவு அண்மையில் அதிபர் இ.பாலகுமார் தலைமையில் இடம் பெற்றது.

இதில் தலைவாராக இ.பாலகுமார் உப தலைவர்களாக லயன் வ.பரமசிவம் ,சி.பேரின்பநாதன் செயலாளராக செ.குகதாசன் உப செயலாளராக சி.பத்மராஜா பொருளாளராக சி. இலட்சமிகாந்தன் ஆகியோர் தெரிவாகினர்.

(ஸ்ரீ-2)

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 70 | 80 | 80 |
| உருளைக்கிழங்கு | 75 | 70 | 90 |
| பச்சைமிளகாய் | 160 | 150 | 160 |
| தக்காளி | 70 | 60 | 90 |
| மரவள்ளிக்கிழங்கு | 55 | 60 | 60 |
| கோவா | 80 | 60 | 80 |
| கரட் | 110 | 200 | 180 |
| பூசணி | 40 | 50 | 60 |
| புடோல் | 40 | 50 | 70 |
| வாழைக்காய் | 40 | 30 | 60 |
| சின்ன வெங்காயம் | 150 | 130 | 150 |
| பெரிய வெங்காயம் | 50 | 80 | 60 |
| பாகற்காய் | 120 | 150 | 160 |
| வெண்டிக்காய் | 40 | 60 | 60 |
| கருணைக் கிழங்கு | - | 80 | - |
| பயற்றங்காய் | 70 | 100 | 100 |
| லீக்ஸ் | 100 | 140 | 100 |
| பீற்றூட் | 60 | 80 | 70 |
| கறிமிளகாய் | 110 | 150 | 140 |
| முருங்கைக்காய் | 650 | 500 | 500 |
| போஞ்சி | - | 120 | - |
| கத்தரிதம்புள்ள | - | 50 | 60 |
| கீரை - 1 பிடி | 12 | 20 | 30 |
| தேசிக்காய் | 150 | 120 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 30-60 | 50 | 60 |

# இராசி பலன்

*19.04.2011*
*(சித்திரை 6 செவ்வாய்க்கிழமை)*
*சூரியஉதயம்காலை 6.01 மணிக்கு*
*பிரதமை காலை 6.56 மணிவரை*
*துதியை பின்னிரவு 4.55 மணிவரை*
*சுவாதி பிற்பகல் 12.33 மணிவரை*
*இராகுகாலம் 3.02-4.32 மணிவரை*
*சுபநேரம் 10.32-12.02 மணிவரை*

**மேடம்** விருப்பங்கள் நிறைவேறும் நாள், விலகிச் சென்றவர்கள் விரும்பி வந்து இணைவர், வெளியூர்த் தொடர்புகள் விரிவடையும், சிந்தனை மிகுதியுண்டு.

**இடபம்** நோயிலிருந்து விடுதலை பெறுவீர்கள், தொழில் மாற்றம் பற்றிய சிந்தனை மேலோங்கும், தன்னம்பிக்கையும் தைரியமும் அதிகரிக்கும்.

**மிதுனம்** மனதில் இனம்புரியாத சந்தோசம் குடிகொள்ளும், அதிகாரிகள் அனுசரணையாக நடந்து கொள்வர், சுப செய்திகள் வந்து சேரலாம், உதவிகள் செய்த சிலரை சந்திக்கும் வாய்ப்புண்டு.

**கடகம்** எடுத்தகாரியம் கைகூடும், தொழிலில் புதிய திட்டங்களைத் தீட்டுவீர்கள், மனதில் நீண்டநாளாக இருந்த பாரம் குறையும்.

**சிங்கம்** எதிர்கால நன்மைக்கு நண்பர்களின் ஆலோசனைகள் பெரிதும் உதவிபுரியும், வெற்றிகரமான செய்திகள் வீடு வந்து சேரும், தேவைகள் நிறைவேறும்.

**கன்னி** தனவரவை உயர்த்த தகுந்த முயற்சி எடுப்பீர்கள், ஆதரவு தருவோரின் எண்ணிக்கை அதிகரிக்கும், வெளியுலகத்தொடர்பு விரிவடையும்.

**துலாம்** கொடுத்தவாக்கை காப்பாற்ற கொள்கையைக் கொஞ்சம் தளர்த்த வேண்டி வரலாம், யோசனைகள் அதிகமாக இருக்கும், பெரிய மனிதரின் சந்திப்பு இடம்பெறலாம்.

**விருச்சிகம்** வீட்டுப்பிரச்சினைகள் நல்ல முடிவுக்கு வரும், தொழில் ரீதியாக எடுத்த முயற்சிக்கு ஒத்துழைப்பு கிடைக்கும், சுப செய்தி வந்து சேரலாம்.

**தனுசு** செய்தொழில் வருமானம் அதிகரிக்கும், உறவினர்கள் உதவிக்கரம் நீட்டுவர், எடுத்தகாரியம் எளிதில் நிறைவேறும், அம்பிகை வழிபாடு ஆனந்தம் தரும்.

**மகரம்** உற்சாகமான நாள், பிறரிடம் ஒப்படைத்த பொறுப்புக்கள் உங்களிடம் வந்து சேரும், ஆரோக்கிய நன்மை கருதி சிறு தொகையை செலவு செய்வீர்.

**கும்பம்** ஆரோக்கியத்தில் அதிக கவனம் செலுத்த வேண்டியநாள், தொழில் ரீதியாக எடுத்த முயற்சியில் சிறு தாமதம் ஏற்படலாம், குடி இருக்கும் வீட்டால் ஏற்பட்ட பிரச்சினைகள் குறையும்.

**மீனம்** எதிர்பாராத வகையில் சில மனஸ்தாபங்கள் ஏற்படலாம், பிரயாணங்களில் கூடிய கவனம்மெடுக்க வேண்டிய நாள், தொழிலில் உற்சாகம் குறைவாக காணப்படலாம்.

வளவன்

# இலங்கை அரசை தண்டிக்காவிட்டால்
# ஐ.நாவிற்கு எதிராக பொங்கி எழுவோம்

## சீமான் ஆக்ரோசமான அறிக்கை

(சென்னை)

**தமிழின அழிப்புக்கு காரணமான இலங்கை அரசை தண்டிக்க வேண்டும். அவ்வாறு எதுவும் நடைபெறாவிட்டால் ஐ.நாவிற்கு எதிராக உலகத் தமிழினம் பொங்கி எழும் என சீமான் எச்சரித்துள்ளார்.**

ஐ.நா. நிபுணர் குழு, ஐ.நா பொதுச் செயலர் பான் கீ மூனிடம் அளித்துள்ள பரிந்துரைகள் குறித்து நாம் தமிழர் இயக்கத்தின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் அறிக்கை ஒன்றை விடுத்துள்ளார்.

இலங்கையில் நடந்த உள்நாட்டுப் போரில் அரசுப் படைகள் நிகழ்த்திய போர்க் குற்றங்கள் வன்னி முள்வேலி முகாம்களில் நடந்த மனித உரிமை மீறல்கள் ஆகியவற்றின் மீது பன்னாட்டு சட்டங்களின் கீழ் இலங்கை அரசே விசாரிக்க வேண்டும் என்றும் அதனை கண்காணிக்க பன்னாட்டு குழு ஒன்றை நியமிக்க வேண்டும் என்றும் ஐ.நா. நிபுணர் குழு அளித்த பரிந்துரை நியாயமற்றது-முறையற்றது.

மார்சுகி தாருஸ்மான் தலைவராகவும் யாஷ்மின் சூக்கா, ஸ்டீவன் ராட்னர் ஆகியோரை உறுப்பினர்களாகவும் கொண்ட ஐ.நா நிபுணர் குழு பொதுச் செயலர் பான் கீ மூனிடம் அளித்துள்ள அறிக்கை உலகத் தமிழினத்தை அதிர்ச்சியடையச் செய்துள்ளது.

தமிழர்களுக்கு எதிராக திட்டமிடப்பட்ட இனப்படுகொலைப் போரை நடத்திய இலங்கை அரசிடமே விசாரணை பொறுப்பை ஒப்படைப்பது, கொலைகாரனிடமே வழக்கு விசாரணையை ஒப்படைப்பதற்கு நிகரான கேலிக்கூத்தாகும்.

அரசு செய்த மிக பெரிய போர்க் குற்றம் தங்களோடு இருந்த மக்களைக் காப்பாற்றிக் கரைசேர்க்க துப்பாக்கிகளை மௌனிக்கின்றோம் என்று அறிவித்துவிட்டு வெள்ளைக் கொடிகளுடன் சரணடைய வந்த புலிகளின் அரசியல் பிரிவுத் தலைவர் நடேசன், அமைதி செயலகத் தலைவர் புலித்தேவன் உள்ளிட்ட 300 பேரை சித்திரவதை செய்து படுகொலை செய்ததும் அதன் பிறகு மே 18ஆம் திகதி ஒரே நாளில் முள்ளிவாய்க்காலிலும் வட்டுவாகலிலும் காயமுற்று உயிருக்குப் போராடிக் கொண்டிருந்த பல்லாயிரக்கணக்கான மக்களை கொன்று குவித்ததும்தான்.

இலங்கை இனப்பிரச்சினை தொடர்பில் அங்கு நடந்த தமிழின அழிப்பிற்குக் காரணமான இலங்கை அரசு தண்டிக்கப்பட வேண்டும். அதற்கு சுதந்திரமான பன்னாட்டு விசாரணை இன்றியமையாதது.

இரண்டாவது, ஈழத் தமிழினத்தின் தேச அரசியல் விடுதலையை உறுதிசெய்ய பன்னாட்டு கண்காணிப்பின் கீழ் வாக்கெடுப்பு நடத்த வேண்டும். இவை இரண்டையும் ஐ.நா. செய்யத் தவறுமானால் அது இலங்கை அரசு நடத்திய இனப்படுகொலையை மறைக்க முயற்சிக்கின்றது என்ற குற்றச் சாட்டுக்கு ஆளாகும் அப்படியொரு நிலை ஏற்பட்டால் ஐ.நா.விற்கு எதிராக உலகத் தமிழினம் பொங்கி எழும் என்று எச்சரிக்கின்றேன் என்றுள்ளது. (ச-5)

## கிளி., முல்லை மாவட்டங்களுக்கான
## மனித உரிமைகள் பாதுகாவலர் பயிற்சி நெறிக்கு விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

இலங்கை மனிதவுரிமைகள் ஆணைக் குழுவின் உள்ளக இடம்பெயர்ந்தோருக்கான தேசிய பாதுகாப்பிற்கும் நிரந்தர தீர்வுக்குமான விசேட செற்றிட்டமானது, கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் இடம்பெயர்ந்தோர் மற்றும் மீள்குடியேறிய இளைஞர், யுவதிகளிடமிருந்து மனிதவுரிமை பாதுகாவலர்- 2011 பயிற்சி நெறிக்கான விண்ணப்பங்கள் கோரியுள்ளது.

தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரிகளுக்கு ஒரு மாதத்தில் 02 முழுநாட்கள் (7 மாதங்கள்) கோட்பாடு செயன்முறை ரீதியான மனிதவுரிமைகள் பயிற்சி நெறி (அவர்களுக்குரிய மாவட்டங்களிலேயே) வழங்கப்படுவதோடு பயிற்சிக்காலத்திலும் அதன் பின்னரும் தமது பிரதேசங்களில் மக்களினது மனிதவுரிமைகளைப் பாதுகாப்பதிலும், மேம்படுத்துவதிலும் சமூகப் பொறுப்புடமையையும் தலைமைத்துவத்தையும் பொறுப்பேற்பவர்களாக இருக்கும்.

அதேநேரம் தன்னார்வ சமூகப் பாதுகாவலராகவும் இருப்பார்கள். மேலும் அவர்கள் ஊக்கமுள்ள இளைஞர், யுவதிகளாக இருப்பதோடு சமாதானமான முறையில் தனியாகவும், கூட்டாகவும் மற்றும் செயற்றிட்டத்தினும் இணைந்தும் மனிதவுரிமைகள் ஊடாக சமூக மாற்றத்திற்காக அர்ப்பணிப்புடன் செயற்படுபவர்களாகவும் இருப்பார்கள்.

**விண்ணப்பதாரிகள்**

18-40 இடைப்பட்ட வயதுடையவர்களாகவும், அர்ப்பணிப்பு படைக்கும் ஆற்றல், தொடர்பாடல் திறன் மற்றும் நற்பண்புகளை கொண்டவர்களாகவும் இருத்த வேண்டும்.

இதேவேளை இடம்பெயர்ந்த மற்றும் மீள் குடியேறிய மக்களுக்கு விசேட ஒதுக்கீடு செய்யப்படுவதுடன் பிரதேசம், பால், இனம் மற்றும் சமயம் கருத்தில் கொள்ளப்படும்.

விண்ணப்பதாரிகள் மனிதவுரிமை பாதுகாவலர் பயிற்சிநெறி-2011 (கிளிநொச்சி, முல்லைத்தீவு), இலங்கை மனிதவுரிமைகள் ஆணைக்குழு, 'இல-1 மூன்றாம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம். என்னும் முகவரிக்கு எதிர்வரும் 26ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக பதிவுத்தபாலில் அனுப்புதல் வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ச)

## அடகு நகைகளை திருடிய குற்றச்சாட்டு
## வங்கி அதிகாரிக்கு விளக்கமறியல்

(கொழும்பு)

அடகு நகைகள் வைக்கப்பட்டிருந்த 34 நகைப் பைகளிலிருந்து நகைகளைத் திருடியதான குற்றம் சாட்டப்பட்டுள்ள வங்கி அதிகாரியொருவரை எதிர்வரும் மார்ச் 2 ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு மாவட்ட நீதிவான் நேற்று உத்தரவு பிறப்பித்தார்.

இதேவேளை சங்கராஜ மாவத்தையில் அமைந்துள்ள மக்கள் வங்கி முகாமையாளரையும் பிராந்திய முகாமையாளரையும் விசாரிக்கவுள்ளதாக கொழும்பு பிரதான நீதிவான் ரஷ்மி சிங்கப்புலியிடம் புலனாய்வு பொலிஸார் நேற்று தெரிவித்தனர்.

அத்துடன் மேற்படி நகைகளுக்கு பொறுப்பாகவிருந்த வங்கிக்கிளையின் அதிகாரிகளையும் தாம் விசாரிக்கவுள்ளதாக அவர்கள் நீதிவானிடம் குறிப்பிட்டனர்.

சந்தேக நபரான பெடரிக் எட்வேட் டி சோம் என்பவர் நகைகள் வைக்கப்பட்டிருந்த இரும்புப் பெட்டியிலிருந்து 34 நகைப் பைகளைத் திருடியதாகவும் திருடிய நகைகளை இன்னொருவரூடாக அதே வங்கியில் அடகு வைத்ததாகவும் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளார்.

இந்த திருட்டுச் சம்பவத்தால் குறித்த வங்கிக்கு 7.2 மில்லியன் ரூபாய் நட்டம் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (ச-5)

## நாவலர் கலாசார மண்டபத்தில் முறைகேடு
## நடவடிக்கை எடுக்குமாறு கோரி
## இந்து கலாசாரத் திணைக்களம் கடிதம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் நாவலர் வீதியில் அமைந்துள்ள நாவலர் கலாசார மண்டபத்தில் அண்மைக்காலமாக பாரிய முறைகேடுகள் இடம்பெற்று வருவதாக ஆதாரங்களுடன் தமது திணைக்களத்தின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டுள்ளதாக இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் சாந்தி திருநாவுக்கரசு யாழ். மாநகரசபை ஆணையாளருக்கு கடிதம் அனுப்பி வைத்துள்ளார். அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமானின் சீரிய சிந்தனைகளை செயல் உருவாக்குவதற்காக 1985ஆம் ஆண்டு அப்போதைய பிரதேச அபிவிருத்தி இந்துசமய அலுவல்கள் மற்றும் தமிழ் மொழி அமுலாக்கல் அமைச்சர் கௌரவ செல்லையா இராசதுரை அவர்களது பெரும் முயற்சியால் இம்மண்டபம் கட்டப்பட்டது. அந்நிலையில் அப்போதைய யாழ்.மாநகரசபையின் ஆணையாளர் சீ.வீ.கந்தையா சிவஞானம் அவர்களது கோரிக்கையின் பேரில் பின்வரும் நிபந்தனைகளுக்கமைய இம்மண்டபத்தினுடைய பாவனை, பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு என்பன தொடர்பான பொறுப்பு எமது திணைக்களத்தால் யாழ். மாநகரசபையிடம் ஒப்படைக்கப்பட்டது.

✹ மேற்படி மண்டபத்தினை உரிய முறையில் பராமரிப்பதும் பாதுகாப்பதும் யாழ்.மாநகரசபை ஆணையாளரின் பொறுப்பாகும்.

✹ இம்மண்டபம் சமூக கலாசார கல்வி மற்றும் சமய நிகழ்வுகளுக்காக மட்டுமே பயன்படுத்தப்படுதல் வேண்டும்.

✹ இம் மண்டபத்திற்குள்ளும் அதன் சுற்றுப்புற எல்லைக்குள்ளும் அசைவ உணவு மற்றும் மதுபானம் என்பன உட்கொள்ளக்கூடாது.

இந்நிபந்தனைகள் அப்பட்டமாக மீறப்பட்டுள்ளமையும் இந்து கலாசார நூலகம் இயங்கி வந்த இம் மண்டபத்தின் மேல்மாடி ஒரு தங்குமிடமாக பாவிக்கப்பட்டு வருகின்றமையையும் அறிந்து மிகவும் வேதனை அடைகிறோம்.

ஆதலால் இவ்வடிப்படை நிபந்தனைகளுக்கு அமைவாக உடனடி நடவடிக்கைகளை மேற்கொண்டு இவற்றை சீர்செய்யுமாறு விநயமுடன் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் நாவலர் பெருமான் சைவத்திற்கும் தமிழுக்கும் ஆற்றியிருக்கும் அளப்பரிய தொண்டுகளை நினைவு கூருவதுடன் அவரது புனித நோக்கத்தையும் நாமத்தையும் காப்பாற்றுவதற்குத் தங்களது பூரண ஒத்துழைப்பைக் கோருகிறேன்.

இவ்விடயம் சார்பாக தாங்கள் எடுக்கும் நடவடிக்கைகள் தொடர் பான அறிக்கையினை இயன்ற சீக்கிரத்தில் அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்கிறேன் என அதில் கூறப்பட் டுள்ளது. இக் கடிதத்தின் பிரதி யாழ்.மாநகர சபையின் முன்னாள் ஆணையாளர் சீ.வீ.கே. சிவஞானத்துக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (ச)

## கிளி. தமிழ்ச் சங்க பொதுக் கூட்டம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்ட தமிழ்ச் சங்கத்தின் பொதுக் கூட்டம் எதிர்வரும் 21ஆம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு கிளிநொச்சி மகாவித்தியாலய மண்டபத்தில் நடைபெறும்.

இதில் திருக்குறள் மாநாடு, முன்னாள் அரச அதிபர் பொன்னம்பலம் நினைவுக் கருத்தரங்கு, கலைத்திறன் போட்டிகள் என்பன நடக்கவிருப்பதால் சங்கத்தின் வாழ்நாள் உறுப்பினர்கள் அனைவரையும் தவறாது கலந்துகொண்டு கருத்துக்களைத் தெரிவிக்குமாறு தமிழ்ச் சங்கத்தின் தலைவர் தெரிவித்துள்ளார். (ச-6)

## சைக்கிள் திருடன் அகப்பட்டான்

(யாழ்ப்பாணம்)

ஆனைக்கோட்டைச் சந்தியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த பாடசாலை மாணவி ஒருவரின் துவிச்சக்கர வண்டியினை திருட முற்பட்ட சம்பவமொன்று நேற்று பிற்பகல் 4.45 மணியளவில் இப்பகுதியில் நடைபெற்றுள்ளது.

குறித்த திருடன் இத் துவிச்சக்கர வண்டியைத் திருடிக் கொண்டு செல்ல முற்பட்டபோது அதனை அவதானித்த இத் துவிச்சக்கர வண்டியின் உரிமையாளரான இம் மாணவி கூக்குரலிட்டு நபர்களை உதவிக்கு அழைத்தார்.

இச் சம்பவத்தை அவதானித்த அப்பகுதி இராணுவத்தினர் அத்திருடனை கையும் மெய்யுமாகப் பிடித்து களவாடப்பட்ட துவிச்சக்கர வண்டியினை மீட்டுள்ளதுடன் குறித்த நபரை மானிப்பாய் பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர். (ச-4-26)

# கொழும்பு கம்பன் கழகம் நடத்தும் கம்பன் விழா

(யாழ்ப்பாணம்)

கொழும்பு கம்பன் கழகம் நடத்தும் கம்பன் விழா-2011 நாளை மறுதினம் வியாழக்கிழமை தொடக்கம் எதிர்வரும் 24 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வரை காலை, மாலை என இரு அமர்வுகளாக கொழும்பு வெள்ளவத்தை இராமகிருஷ்ணமிஷன் மண்டபத்தில் கொழும்பு கம்பன் கழக பெருந்தலைவர் சி.வி.விக்னேஸ்வரன் தலைமையில் நடைபெறும்.

நாளை மறுதினம் வியாழக்கிழமை நடைபெறவுள்ள முதல் நாள் நிகழ்வில் கம்பன் படமானது வெள்ளவத்தை ஸ்ரீ ஐஸ்வர்ய லக்ஷ்மி திருக்கோவிலிலிருந்து ஊர்வலமாக எடுத்துவரப்படவுள்ளது.

இந்நிகழ்வில் மலேசியா கூட்டரசு பிரதேச மத்திய துணை அமைச்சர் டத்தோ எம்.சரவணன் சிறப்புரையாற்றவுள்ளார்.

மகா வித்துவான் சி.கணேசையர் எழுதிய 'கவிச்சக்கரவர்த்தி கம்பனே!', கலாநிதி மனோன் மணிசண்முகதாஸ் எழுதிய 'வாலி வதை' ஆகிய நூல்கள் வெளியிடப்படவுள்ளன.

நூலின் வெளியீட்டுரையை யாழ். பல்கலைக்கழக முன்னாள் தமிழ்த்துறை பேராசரியர் எஸ்.சிவலிங்கராஜா ஆற்றவுள்ளார். அத்துடன் அமரர் துரை.விஸ்வநாதன் நினைவுப் பேச்சு போட்டி, அமரர் பொன். பாலசுந்தரம் நினைவுக் கவிதைப் போட்டி ஆகியவற்றில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசில் வழங்கப்படவுள்ளது.

அத்துடன் பேராசரியர் சாலமன் பாப்பையா நிறுவிய 'ஏற்றமிகு இளைஞர்' விருதை மனநல மருத்துவ நிபுணர் டாக்டர் எஸ்.சிவதாஸ், கவிக்கோஅப்துல் ரகுமான் நிறுவிய 'மகரந்தச் சிறகு'க்கான விருதை கவிஞர் கல்வயல் வே.குமாரசாமி ஆகியோர் பெறவுள்ளனர்.

மேலும் 'பத்மபூஷண' கம்பன் புகழ்விருதை தமிழ்நாடு டாக்டர் பத்மா சுப்பிரமணியம், கௌரவம் பெறும் விருதாளர்களான பேராசிரியர் சி.க.சிற்றம்பலம் , கனகஈஸ்வரன், குமார் நடேசன் , பெ.இராதாகிருஷ்ணன், வி.ஏ.திருஞானசுந்தரம், திருமதி.சாந்தினி சிவநேசன் ஆகியோர் விருது வழங்கும் அரங்கில் வைத்து பெறவுள்ளனர்.

(ஸ்ரீ-2)

# குமுழமுனையில் மீள்குடியேற்றம் முல்லை. அரச அதிபர் அறிவிப்பு

முல்லைத்தீவு மாவட்ட கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட குமுழமுனை கிழக்கு, குமுழமுனை மத்தி கிராம சேவையாளர் பிரிவுகளில் இடம்பெயர்ந்த மக்கள் மீள்குடியேற்றப்படவுள்ளதாக முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் அ.பத்திநாதன் அறிவித்துள்ளார்.

எனவே மேற்படி கிராம சேவையாளர் பிரிவைச் சேர்ந்த மக்களில் நண்பர்கள், உறவினர்களின் வீடுகளில் தங்கியுள்ள மீள் குடியேற்றத்திற்காக சொந்த இடத்திற்கு செல்ல விரும்பும் மக்கள் நாளை மறுதினம் வியாழக்கிழமை காலை 9 மணிக்கு மு/குமுழமுனை மகா வித்தியாலயத்திற்கு மீள் குடியேறக்கூடிய ஆயத்தங்களுடன் சமுகமளிக்குமாறு அவர் மேலும் கேட்டுள்ளார்.(ஸ்ரீ-2)

# Calling for Tender - Teaching Hospital, Jaffna.

01.The Chairman of the Divisional Tender Board, Teaching Hospital, Jaffna will receive separate sealed tenders for the following works up to 10.00 am on 05.05.2011 Tender form may be collected from Director, Teaching Hospital, Jaffna up to 28.04.2011 on payment on non refundable deposit.

| N0. | Nature of Work | Grade | Non Refundable Deposit |
|---|---|---|---|
| 01 | Renovation of Ward-03 | C9 | Rs.1,000 |
| 02 | Renovation of Mortuary | C8 | Rs.1,000 |
| 03 | Renovation of Mental Health Unit | C8 | Rs.1,000 |

02.Tenders will be opened immediately after Closing at the office of the Director, Teaching Hospital, Jaffna. Tenders or their authorized representative are requested to be present at the opening Tenders.

03.Tender forms are issued only to the contractor who has valid registration in Grade 'C8,C9' and above in the field of Building Constructions and other institute of Constructions Training And Development (ICTAD) criteria and valid membership of National Construction of Contractors Association of SriLanka (NCCASL).

04.Sealed Tenders may be dispatched either by registered post or hand delivered to Director, Teaching Hospital, Jaffna or deposited in the Tender Box at Teaching Hospital, Jaffna on or before 10.00am on 05.05.2011.

05. Tender Documents may be inspected free of charge at the Residence Engineers Office, CECB,Jaffna.

06.For Further details please contact Hospital Secretary,Teaching Hospital, Jaffna.

**The Chairman,**
**Divisional Tender Board,**
**Teaching Hospital,**
**Jaffna.**

*(C-3017)*


காலத்தின் தேவையில்

# மாபெரும் கண்காட்சி

மிதிவெடிச் செயற்பாட்டின் விழிப்புணர்விற்கும் உதவிக்குமான
சர்வதேச தினத்தை முன்னிட்டு நடாத்தப்படும்

## கண்காட்சி நிகழ்வும் கலை மற்றும் விளையாட்டு நிகழ்வுகளும்

**இடம் : யாழ். இந்துக்கல்லூரி, யாழ்ப்பாணம்.**
**காலம்: 20.04.2011 புதன்கிழமை, 21.04.2011 வியாழக்கிழமை**
**நேரம் : காலை மு.ப 10.00 மணி தொடக்கம்- பி.ப 5.00 மணிவரை**

## நிகழ்ச்சிகள்

- பிராந்திய மிதிவெடிச் செயற்பாட்டு அலுவலகச் செயற்பாடுகளும் விளக்கங்களும்
- இராணுவ பொறியியல் படைப்பிரிவு , **Halo Trust, Danish Deming Group** ஆகியோரின் உலகத் தரம் வாய்ந்த கண்ணிவெடி அகற்றுதலுக்கான செயன்முறை விளக்கங்களும், பயன்படுத்தப்படும் எந்திரப் பொறிகளின் வகைகளும் காண்பிக்கப்படவுள்ளன.
- இராணுவப் பொறியியற் பிரிவினரின் பல்வேறு மிதிவெடிகள், வெடிபொருட்களின் வகைகளை மக்கள் விழிப்புணர்வுக்காகக் காட்சிப்படுத்த உள்ளனர்.
- மிதிவெடி விழிப்புணர்வு நிறுவனங்களின் பல்வேறு அரிய காட்சிப்படுத்தல்களும் இடம்பெற உள்ளன.

(சி-3028)

**கண்ணிவெடிகள்/ வெடிபொருட்களின் அரக்கப்பிடியில் இருந்து மக்கள் இன்னும் மீளவில்லை. இன்றும் விபத்துக்கள் தொடர்கின்றன...**

**அனைவரையும் அணிதிரண்டு வந்து கண்காட்சியைக் கண்டு பயன்பெற அன்புடன் அழைக்கிறோம்.**

**மிதிவெடி/வெடி பொருட்களின் ஆபத்தில் இருந்து எம்மையும் மற்றவரையும் பாதுகாப்போம்.**

**அனுமதி இலவசம்**

விழா ஏற்பாட்டாளர்கள்: பிராந்திய மிதிவெடி செயற்பாட்டு அலுவலகம், வடக்கு.

SOND Better World Movement
UNDP
unicef
EUROPEAN COMMISSION
Humanitarian Aid and Civil Protection

# கிராமமட்டத்திலுள்ள மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தவே பெண்களுக்கான தொழிற்பயிற்சிகள்

## வடமாகாண கிராம அபிவிருத்தி திணைக்கள பணிப்பாளர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

கிராமமட்டத்திலுள்ள மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தவே பெண்களுக்கான தொழிற்பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகிறது என வடமாகாண கிராம அபிவிருத்தி திணைக்களப் பணிப்பாளர் ஜே.ஜே.சி. பெலிசியன் தெரிவித்துள்ளார்.

வடமாகாண கிராம அபிவிருத்தி திணைக்களத்தால் யாழ்.மாவட்டத்தில் நடத்தப்படும் மகளிர் அபிவிருத்தி நிலைய தையல் , அழகியல் கண்காட்சி நேற்று யாழ். வேம்படி மகளிர் உயர்தர பாடசாலையில் இடம்பெற்றது.

இதில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ். மாவட்டத்தைப் பொறுத்தவரை கிராமமட்டத்தில் உள்ளவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த வேண்டியுள்ளது. குறிப்பாக பெண்களின் தொழில் நடவடிக்கைகளை அதிகரிக்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டியுள்ளது.

மேலும் பெண்களுக்கு தொழிற்பயிற்சிகள் வழங்குவதன் மூலம் சுயதொழில் வாய்ப்பினை அதிகரிக்க முடியும். அத்தகைய நடவடிக்கையே மகளிர் அபிவிருத்தி நிலையம் மேற்கொண்டு வருகின்றது.

அதுமட்டுமின்றி கிராமமட்டத்திலுள்ள பெண்களுக்கு தொழிற்பயிற்சிகள் வழங்குவதன் மூலம் தத்தம் கிராமங்களில் ஏனைய பெண்களுக்கும் தொழிற் பயிற்சிகளை வழங்க முடியும். இதன்மூலம் வேலையில்லா பிரச்சினையை தீர்க்கமுடியும்.

பெண்களின் சுய தொழிலை ஊக்கப்படுத்துவதன் மூலம் புதிய தொழில் வாய்ப்புக்களை அதிகரிக்க முடியும்.

உள்ளூர் உற்பத்திகளை தேசிய ரீதியில் சந்தைப்படுத்துவதன் மூலம் அதிக இலாபத்தையும் உற்பத்திகளையும் அதிகரிக்க முடியும்.

மேலும் கடந்த காலங்களில் இவ்வாறான சந்தர்ப்பங்கள் குறைவாகவே இருந்து வந்தது. இனி வரும் காலங்களில் இத்தகைய தொழிற்பயிற்சிகள் மற்றும் உற்பத்திகள் அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

உற்பத்தி செய்யப்படும் அழகு சாதனப் பொருட்களை வெளிநாடுகளிலும் சந்தைப்படுத்துவதன் மூலம் அதிக வருமானத்தை பெறமுடியும்.

குடா நாட்டைப் பொறுத்த மட்டில் அழகு சாதனப் பொருட்களை உருவாக்குவதற்கு மூலப்பொருட்கள் அதிகமாகவுள்ளது. குறிப்பாக கடற்கரையோரத்தில் காணப்படும் சிப்பிகளில் பல அழகு சாதனப் பொருட்களை உருவாக்க முடியும்.

எனவே கண்காட்சியில் சிறப்பாக வடிவமைக்கப்பட்ட பல பொருட்கள் காட்சிப்படுத்தப்பட்டிருந்தன.

அதற்கு அதில் ஆர்வத்துடன் பங்கு கொண்டவர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன் என அவர் மேலும் தெரிவித்தார். (ஶ்ரீ-4-6)

## பரிசுத்த வார வழிபாடுகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மரியன்னை பேராலயத்தில் நாளை மறுதினம் பெரியவியாழன் வழிபாடுகள் மாலை 5 மணிக்கும் இரவு ஆராதனை இரவு 10 மணிக்கும் மறுநாள் பெரிய வெள்ளி சிலுவைப்பாதை காலை 6.30 மணிக்கும் மாலை வழிபாடுகள் பிற்பகல் 4 மணிக்கும் நடைபெறவுள்ளது.

புனிதசனி ஏழு வார்த்தைகள் தியானம் காலை 6.30 மணிக்கும் திருவிழிப்பு வழிபாடுகள் இரவு 10.30 மணிக்கும் மறுநாள் உயிர்ப்பு ஞாயிறு முதல் திருப்பலி காலை 5.45 மணிக்கும் இரண்டாம் திருப்பலி காலை 7.15 மணிக்கும் நடைபெறவுள்ளது. (ஶ்ரீ-4)

## கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை வித்தகபுரம் கிராமத் தில் வீடமைப்புஅதிகாரசபையின் கடன் திட்டத்துடன்மானியம்வழங்குதல் தொடர்பானகலந்துரையாடல் இன்று செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு கிராம அலுவலர் காரியாலயத்தில் நடைபெறவுள்ளது.

இதில் அனைத்து மக்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு கிராம அபிவிருத்திச் சங்கத்தலைவர் அறிவித்துள்ளார். (ஶ்ரீ-4)

# அரச உத்தியோகத்தர்களுக்கான பஸ்சேவை புதிதாக ஆரம்பம்

(பருத்தித்துறை)

யாழ்ப்பாணத்திலிருந்து ஸ்கந்தபுரம் நோக்கி அரச உத்தியோகத்தர்களுக்கான பஸ் சேவை ஒன்று சங்குப்பிட்டி வீதியூடாக நடைபெற்று வருகின்றது.

யாழ்ப்பாணத்திலிருந்து காலை 6.30 மணிக்கு புறப்படும் இவ் பஸ் ஸ்கந்தபுரத்தினைச் சென்றடைகின்றது. பின்னர் இதே பஸ் கிளிநொச்சிக்கான போக்குவரத்தில் இரண்டு தடவைகள் ஈடுபடுகின்றது.

மேலும் இவ் பஸ் ஸ்கந்தபுரத்திலிருந்து அன்றையதினம் பிற்பகல் 2.30 மணிக்கு புறப்பட்டு சங்குப்பிட்டி வீதியூடாக யாழ்ப்பாணத்தை வந்தடைகின்றது.

இவ் பஸ் சேவையினால் அப்பகுதியில் அரச சேவையில் ஈடுபடும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த அரச உத்தியோகத்தர்கள் பெரிதும் நன்மை அடைவதாக தெரிவிக்கின்றனர். (ஶ்ரீ-4-10)

# இலவச கண்சிகிச்சை முகாம்

சவுதி அரேபியாவில் அல்பசார் சமூக சேவை நிறுவனத்தின் இலங்கை முஸ்லிம் வாலிபர் ஒன்றியத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டு இலங்கையின் பல பாகங்களிலும் கடந்த 8 ஆண்டுகளில் 9 ஆயிரம் பேருக்கு மேல் இலவச கண்பரிசோதனை முகாமும் கண் சிகிச்சையும் செய்யப்பட்டுள்ளது.

இவ்வமைப்பினர் தமது சேவையை யாழ். வணிகர் கழகத்தின் அனுசரணையுடன் எதிர்வரும் 22 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9 மணியிலிருந்து 12 மணிவரை நாவலர் வீதியில் உள்ள நாவலர் மணிமண்டபத்தில் இலவச கண்பரிசோதனை முகாமை நடத்தவுள்ளனர். இதன்போது கண்களில் வெள்ளை படர்தல் நோயுள்ளவர்கள் தெரிவு செய்யப்பட்டு அவர்களுக்கு இலவச கண் சிகிச்சை மேற்கொள்ள ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

பல்லாயிரக்கணக்கான ரூபாய்கள் செலவுள்ளதும் பல மாதங்கள் காத்திருக்க வேண்டியதுமான இச்சிகிச்சை முற்றிலும் இலவசமாக குறுகிய காலத்தில் செய்யப்படுவதே இச்சிகிச்சை முகாமின் பிரதான நோக்கமாகும்.

இச்சிகிச்சையினால் பயன்பெற விரும்பும் அனைவரும் இல-165, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் உள்ள யாழ்.வணிகர் கழக பணிமனையில் இன்று காலை 9 மணி தொடக்கம் நாளை மறுதினம் வியாழக் கிழமை வரை மாலை 4 மணிக்கு முன்பதாக தங்கள் பதிவுகளை மேற்கொள்ளுமாறு யாழ். வணிகர் கழகத் தலைவர் இ.ஜெயசேகரன் அறிவித்துள்ளார். (ஶ்ரீ-2)




‘கடவுள் வடித்த கண்ணீர்’

# திருப்பாடுகளின் காட்சியில் பெரும்பாலானோர் பங்கேற்பு

‘கடவுள் வடித்த கண்ணீர்’ திருப்பாடுகளின் காட்சியில் ஒரு இலட்சத்து 10 ஆயிரம் பேர் கலந்து கொண்டனர் என திருமறைக்கலாமன்ற ஊடகப் பிரிவுப் பொறுப்பாளர் சி.செல்மா எமில் தெரிவித்துள்ளார்.

திருப்பாடுகளின் காட்சி வருடந்தோறும் திருமறைக்கலாமன்றத்தினால் நடத்தப்பட்டு வருகின்றது. அதே தடத்தைப் பின்பற்றி இவ்வாண்டிலும் ‘கடவுள் வடித்த கண்ணீர்’ என்னும் பெயர் சூட்டப்பட்டு திருப்பாடுகளின் காட்சி காண்பிக்கப்பட்டது.

இக்காட்சியானது அருட்திரு மரியசேவியர் அடிகளாரினால் நெறியாள்மை செய்யப்பட்டு இத் தவக்காலத்தில் தொடர்ந்து ஐந்து நாட்கள்ஆற்றுகை செய்யப்பட்டது.

இதன் இறுதி நாள் திருப்பாடுகளின் காட்சி நேற்று முன்தினத்துடன் நிறைவு பெற்றது. மேற்படி நிகழ்வுகளிலேயே பெருந்தொகையானோர் கலந்து கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஶ்ரீ-4-51)

# வினைத்திறனாக செயலாற்றிய கிராம சேவையாளர்கள் கௌரவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் வினைத்திறனாக செயலாற்றிய கிராம அலுவலகர் மூவருக்கு சிறந்த விருதுகள் வழங்கி கௌரவிக்கப்படவுள்ளதாக யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் இமெல்டா சுகுமார் அறிவித்துள்ளார்.

இதில் உடுவில் பிரதேச செயலக கிராம அலுவலகர் இ.எயூஜின் மஸனட், கரவெட்டி பிரதேச செயலக கிராம அலுவலகர் பா.நளிட், தெல்லிப்பளை பிரதேச செயலக கிராம அலுவலகர் கெ.பூபாலசிங்கம் ஆகியோருக்கே விருதுகள் வழங்கி கௌரவிக்கப்படவுள்ளன.

இவர்களுக்கான விருதுகளும் சான்றிதழ்களும் எதிர்வரும் 26 ஆம் திகதி வழங்கி வைக்கப்படவுள்ளதாக அரசாங்க அதிபர் தெரிவித்தார். (ஶ்ரீ-2)




வடமாகாண முகாமைத்துவ அபிவிருத்தி பயிற்சி நிறுவனத்தால் நீதிமன்ற உத்தியோகத்தர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு நேற்று பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலக மண்டபத்தில் இடம்பெற்றது. இதில் மேலதிக சொலிசிற்றர் ஜெனரல் ஏ.ஞானதாசன், சாவகச்சேரி மாவட்ட நீதிபதி மா.கணேசராசா, பருத்தித்துறை மாவட்ட நீதிபதி ஶ்ரீநிதி நந்தசேகரம் ஆகியோர் உரையாற்றுவதையும் ஜெனரல் ஞானதாசன் நீதிமன்ற உத்தியோகத்தர்களுக்கு சான்றிதழை

# சட்டமா அதிபரின் நடவடிக்கைகள் குறித்து பிரதம நீதியரசர் விமர்சனம்

சட்டமா அதிபர் மொஹான் பீரிசின் நடவடிக்கைகளை பிரதம நீதியரசர் அசோக டி சில்வா விமர்சனம் செய்துள்ளார்.

ஆளும் கட்சி அரசியல் வாதிக்கு எதிரான குற்றச்சாட்டுக்கள் வாபஸ் பெற்றுக் கொள்ளப்பட்டமை தொடர்பில் பிரதம நீதியரசர் இந்தக் கருத்தை வெளியிட்டுள்ளார். வலுவான ஆதாரங்கள் காணப்படுமிடத்து சந்தேக நபர்களுக்கு எதிரான வழக்கு விசாரணைகளை வாபஸ் பெற்றுக் கொள்ளும் அதிகாரம் சட்ட மா அதிபருக்கு கிடையாது என அவர் தெரிவித்துள்ளார்.

ஆளும் கட்சி மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரான சந்தான கத்திரியாராச்சிக்கு எதிரான வழக்கு விசாரணைகளை சட்டமா அதிபர் இடை நடுவில் வாபஸ் பெற்றுக் கொண்டார்.

மற்றுமொரு ஆளும் கட்சி பாராளுமன்ற உறுப்பினரான ஆர். துமிந்த சில்வாவிற்கு எதிரான வழக்கு விசாரணைகளையும் அவர் வாபஸ் பெற்றுக் கொண்டார். சந்தேக நபர்களுக்கு எதிரான குற்றச்சாட்டுக்களை சட்ட மா அதிபர் வாபஸ் பெற்றுக்கொள்ளும் நடவடிக்கை தவறானதே என்பதே தமது கருத்தாகும் என பிரதம நீதியரசர் குறிப்பிட்டுள்ளார்.

எனினும் எதற்காக சட்டமா அதிபர் இவ்வாறான ஓர் தீர்மானத்தை எடுத்தார் என்பதனையும் தம்மால் குறிப்பிட முடியாது எனவும். அதற்கான விளக்கத்தை சட்டமா அதிபரே வழங்கவேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

சட்டமா அதிபர் மொஹான் பீரிசின் நடவடிக்கைகளை முன்னாள் பிரதம நீதியரசர் சரத் என் சில்வாவும் விமர்சனம் செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது. இவ்வாறு வழக்கு விசாரணைகளை இடைநடுவில் வாபஸ் பெற்றுக் கொள்வதன் மூலம் நீதிமன்றக் கட்டமைப்பின் மீதான நன்மதிப்பிற்கு களங்கம் ஏற்படும் என அவர் சுட்டிக்காட்டியிருந்தார். ஆதாரங்கள் இல்லையென்றால் வழக்கு தொடரக்கூடாது எனவும் தொடரப்பட்ட வழக்குகளை இடை நடுவில் வாபஸ் பெற்றுக்கொள்ள கூடாது எனவும் அவர் தெரிவித்திருந்தார்.

தற்போதைய பிரதம நீதியரசர் அசோக டி சில்வா எதிர்வரும் மே மாதம் ஓய்வு பெற்றுக்கொள்ள உள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது இந்த பதவிக்காக தற்போதைய சட்டமா அதிபர் மொஹான் பீரிஸ் நியமிக்கப்படலாம். என அரசியல் வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதே வேளை சேவை மூப்பு மற்றும் அனுபவம் தகுதி ஆகியன அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டால் உச்ச நீதிமன்றின் சிரேஸ்ட நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்க நியமிக்கப்பட வேண்டுமென தெரிவிக்கப்படுகிறது. (ஸ்ரீ-2)

## பல்கலை மாணவர்களுக்கான வகுப்புத் தடை நீக்கம்

(கொழும்பு)

சப்ரகமுவ பல்கலைக்கழகத்தில் வகுப்புத்தடை விதிக்கப்பட்டிருந்த மாணவர்களில் இருவருக்கான தடை நீக்கப்பட்டுள்ளது.

அத்துடன் வகுப்புத்தடை விதிக்கப்பட்டிருந்த மேலும் நான்கு மாணவர்களுக்கு பரீட்சைகளில் தோற்றுவதற்காக அனுமதி வழங்கப்பட்டுள்ளதாகவும் பல்கலைக்கழகத்தின் உபவேந்தர் பேராசிரியர் மஹிந்த எஸ் .ரூபசிங்க தெரிவித்தார்.

மேலும் 50 மாணவர்களின் வகுப்புத் தடை தொடர்ந்தும் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதாகவும் குறித்த மாணவர்கள் தொடர்பாக ஒழுக்காற்று குழுவின் ஊடாக நடவடிக்கை எடுப்பது குறித்து ஆராய்ந்து வருவதாக அவர் மேலும் குறிப்பிட்டார்.

பகிடிவதை சம்பவம் ஒன்று தொடர்பிலேயே இந்த மாணவர்களுக்கு வகுப்புத் தடை விதிக்கப்பட்டுள்ளது. (ஸ்ரீ-2)

## முன்னாள் புலி உறுப்பினர் 480 பேர் விடுவிப்பு

(கொழும்பு)

புனர்வாழ்வளிக்கப்பட்ட முன்னாள் விடுதலைப் புலி உறுப்பினர்கள் 480 பேர் எதிர்வரும் 23 ஆம் திகதி விடுவிக்கப்படவுள்ளதாக புனர்வாழ்வு ஆணையாளர் நாயகம் பிரிகேடியர் சுதந்தரணசிங்க தெரிவித்துள்ளார்.

புனர்வாழ்வளிக்கப்பட்ட இவர்கள் திருமணமாகி பிள்ளைகளுடன் உள்ளனர். சிங்கள, தமிழ் புத்தாண்டையொட்டியே இவர்கள் விடுவிக்கப்படவுள்ளனர் என அவர் கூறினார். வவுனியா கலாசார நிலையத்தில் வைத்து இவர்கள் விடுவிக்கப்படவுள்ளனர். அத்துடன் அனைத்து புனர்வாழ்வு நிலையங்களிலும் புதுவருடக் கொண்டாட்டங்கள் நடைபெற்றதாகவும் புனர்வாழ்வு ஆணையாளர் தெரிவித்தார்.

புனர்வாழ்வளிக்கப்பட்ட 7 ஆயிரம் முன்னாள் விடுதலைப் புலி உறுப்பினர்கள் இதுவரையில் விடுவிக்கப்பட்டுள்ளனர். இன்னும் 4 ஆயிரத்து 100 பேர் விடுதலை செய்யப்பட வேண்டியுள்ளனரெனவும் அவர் கூறினார்.

(ஸ்ரீ-2)

## பிரதேசவாத அரசியலால் நாட்டின் அபிவிருத்திக்கு தடை

### அமைச்சர் டளஸ் அழகப்பெரும தெரிவிப்பு

(கொழும்பு)

பிரதேசவாத அரசியல் காரணமான நாட்டின் அபிவிருத்திக்கு பாரிய தடை ஏற்பட்டுள்ளதாக அமைச்சர் டளஸ் அழகப்பெரும தெரிவித்துள்ளார்.

தேர்தல் காலத்தில் மட்டுமே அரசியல் பிரிவினைவாதம் காட்டப்பட வேண்டும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

மாத்தறை ஊருகமுவ பிரதேசத்தில் அண்மையில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்ட போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

வெட்டினாலும் நீல நிறம், பச்சை நிறம் மற்றும் சிகப்பு எனக் கூறிக்கொள்ளும் கடுமையான கட்சிவாத அரசியல் ஒட்டு மொத்த நாட்டு அபிவிருத்தியை பாதிப்பதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

(ஸ்ரீ-2)

## அம்பாந்தோட்டையில் சில இடங்களில் சிறியளவிலான நிலநடுக்கங்கள்

(கொழும்பு)

அம்பாந்தோட்டையில் சிறியளவிலான தொடர் நிலநடுக்க சம்பவங்கள் கடந்த 16 ஆம் திகதி இரவு நடைபெற்றுள்ளதாக பிரதேசவாசிகள் தெரிவித்துள்ளனர்.

கடந்த சனிக்கிழமை இரவு 10மணி தொடக்கம் 11மணிக்கும் இடைப்பட்ட நேரத்தில் அம்பாந்தோட்டை மாவட்டத்தின் சிற்சில இடங்களில் சிறியளவான நிலநடுக்கங்கள் உணரப்பட்டுள்ளன. அதன் காரணமாக தென்னிலங்கையில் கரையோரப்பகுதி மக்கள் பெரிதும் அச்சத்திற்குள்ளாகியுள்ளனர்.

இலங்கையில் சுனாமித் தாக்கம் ஏற்படலாம் என்று பேராதனை பல்கலைக்கழக பேராசிரியர் ஒருவர் எதிர்வு கூறியுள்ள நிலையில் அம்பாந்தோட்டையில் இடம்பெற்றுள்ள நிலநடுக்கமானது அங்குள்ள மக்களை பெரிதும் அச்சத்திற்குள்ளாக்கியுள்ளது.

அம்பாந்தோட்டையின் சிறியளவான நிலநடுக்கங்கள் குறித்து இலங்கை பூகற்பவியல் திணைக்களமும் உறுதி செய்துள்ளது. அது தொடர்பில் தமக்கு பல தொலைபேசி அழைப்புக்கள் கிடைத்துள்ளதாக திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

அதே நேரம் கடலின் அடியிலான கற்பாறைகள் மற்றும் துறைமுகப் பகுதியில் அமைந்திருந்த கற்பாறைகள் என்பவற்றை வெடி வைத்து தகர்த்தல் போன்று அம்பாந்தோட்டையில் மேற்கொள்ளப்பட்டு வரும் அபிவிருத்திப் பணிகளின் பிரதிவிளைவுச் செயற்பாடுகள் காரணமாகவே மேற்குறித் தவாறான சிறியளவு நில நடுக்கங்கள் ஏற்பட்டிருக்கலாம் என்று அம்பாந்தோட்டைப் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர். (ஸ்ரீ-2)

## கலை விளையாட்டு நிகழ்வுகள்


(யாழ்ப்பாணம்)

கோண்டாவில் கிழக்கு ஸ்ரீ நாராயணா சனசமூக நிலையம், கிராம அபிவிருத்திச் சங்கம், மறுமலர்ச்சி விளையாட்டுக்கழகம், பாலர் பாடசாலை ஆகியவை இணைந்து நடாத்தும் 59 ஆவது ஆண்டு நிறைவு விழாவும் இல்ல மெய்வல்லுநர் போட்டியும் பரிசளிப்பு விழாவும் கலை நிகழ்வுகளும் கடந்த 14 ஆம் திகதி தொடக்கம் ஆரம்பமாகி நாளை புதன்கிழமை வரை தினமும் மாலை 4 மணிக்கு ஸ்ரீ நாராயணா சனசமூக நிலையத் தலைவர் தெ.சுகிர்தன் தலைமையில் நடைபெறும்.

இன்றைய நாள் நிகழ்வாக விளையாட்டு நிகழ்வு இடம்பெறும்.

இந்நிகழ்வின் பிரதம விருந்தினராக பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே. என். டக்ளஸ் தேவானந்தா, சிறப்பு விருந்தினர்களாக யாழ். மாநகரசபை முதல்வர் திருமதி யோ. பற்குணராசா, ஈழ மக்கள் ஜனநாயக கட்சியின் யாழ். மாவட்ட அமைப்பாளர் க.கமலேந்திரன், ஈழமக்கள் ஜனநாயக்க் கட்சியின் நல்லூர் பிரதேச அமைப்பாளர் அ.ரவீந்திரதாசன், முத்துமாரி அம்மன் தேவஸ்தான தலைவர் ஐ.இராசரத்தினம், கைதடி தொழிற்துறை திணைக்கள நிகழ்ச்சித்திட்ட உதவியாளர் ப.விமல்ராஜ் ஆகியோர் கலந்துகொண்டு சிறப்பிக்கவுள்ளனர்.

(ஸ்ரீ-2)





வடமராட்சி வலயமட்ட கணித புதிர் போட்டி அண்மையில் யா/ கரணவாய் பொன்னம்பல வித்தியாலயத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் விருந்தினர்கள் அழைத்துவரப்படுவதையும் வடமராட்சி வலயக்கல்விப்பணிப்பாளர் வ.செல்வராசா வெற்றியீட்டிய மாணவிக்கு சான்றிதழ் வழங்குவதையும் விழாவில் சான்றிதழ் பெற்ற மாணவர்களையும் படங்களில் காணலாம்.

# கோடை காலமும், பழங்களின் மருத்துவ பண்பும்

### அன்னாசிப்பழம்

✦ கோடை காலத்தில் தாகத்தை தணிக்க நன்றாக பழுத்த அன்னாசிப் பழத்தை வாங்கி வந்து தோலைச் சீவி பழத்தை நறுக்கி வாய கன்ற கண்ணாடிச் சீசாவில் போட்டு பழம்




உள்ள அளவில் சரிபாதி சீனியும் சேர்த்து மொத்ததளவில் 3 பங்கு தண்ணீரையும் விட்டு சீசாவை ஓர் மணி நேரம் வெயிலில் மட்டும் வைத்துவிட வேண்டும். பின்பு நன்கு கலக்கி நீரை மட்டும் வடிகட்டி தேவையா னளவு சாப்பிட வாசனையாகவும் ருசியா கவும் இருக்கும். தாகத்தை தணிக்கும்.

✦ நன்றாகப் பழுத்த ஓர் பழத்தை வாங்கி அதன் மேல் தோல் சீவி அதை 1/2 சென்ரி மீற்றர் கனம் வைத்து குறுக்காக வட்ட வட்ட மாக நறுக்கி எடுத்து அதிலுள்ள விதைகளை நீக்கி சம துண்டாக வெட்டி ஒரு தட்டில் தனித் தனியே பரவலாக வைத்து அது வற்றலாகும் வரை காயவைத்து ஒரு வாயகன்ற சீசாவில் போட்டு நன்றாக மூடி வைக்க வேண்டும்.

✦ தினமும் இரவு ஆகாரம் முடித்து படுக்கப் போக ஒரு மணிநேரத்துக்கு முன் காய்ச்சிய பசுபாலில் ஒரு டம்ளர் எடுத்து உலர் அன் னாசிப்பழ வற்றலில் நான்கு துண்டுகளை எடுத்தப் போட்டு மூடி விட வேண்டும். படுக்க முன் பழத்துண்டுகளை சாப்பிட்டு அந்தப் பாலையும் குடித்துப் படுக்க வேண்டும். உடல் பலம் பெறும். உஷ்ண கோளாறு தீரும்.

**அன்னாசிப்பழம் (100கிராமில்) உள்ள சத்துக்கள்**

| | |
|---|---|
| புரதம் | 0.4 g |
| கொழுப்பு | 0.1 g |
| காபோவைதரேற்று | 10.8 g |
| கல்சியம் | 20 mg |
| பொஸ்பரஸ் | 9 mg |
| இரும்பு | 1.2 mg |
| கரேட்டின் | 18 mcg |
| தயமின் | 200 mcg |
| நியாசின் | 39 mg |
| றைபோபிளேவின் | 0.1 mcg |
| விற்றமின் சி | 0.5 mg |

### பேரீச்சம்பழம்

✦ தினமும் 2 பேரீச்சம்பழங்களை விதை நீக்கி 250 மில்லிலீற்றர் காய்ச்சிய பசுப்பா லில் குடித்து வந்தால் உடல் பலம் பெறும். புதிய இரத்தம் உண்டாகும். தோலை வழவழுப் பாக்கும். கண் சம்பந்தமான கோளாறுகள் நீங்கும். தொற்று நோய்கள் அணுகாது. பல் வியாதிகள் குணமாகும். பற்களை கெட்டி யாக்கும். பாலில் பேரீச்சம்பழங்களை போட்டு காய்ச்சி பருகலாம். உடலுக்கு குளிர்ச்சி தரும். சிறுநீரை அதிகப்படுத்தும். இப்பழச்சாறு, எலுமிச்சப்பழச்சாற்றுடன் கலந்து கொடுக்க உஷ்ண சம்பந்தமான வெள்ளைநோய், வயிறெரிவு, தேகளிவு குணமாகும்.

இதில் உயிர்ச்சத்து B,6mg அளவு 100 mgபழத்தில் காணப்படும்.


**பேரீச்சம்பழம்(உலர்ந்தது) (100கிராமில்) உள்ள சத்துக்கள்**

| | |
|---|---|
| புரதம் | 2.5g |
| கொழுப்பு | 0.4 g |
| காபோவைதரேற்று | 75.8 g |
| கல்சியம் | 120 mg |
| பொஸ்பரஸ் | 7.3 mg |
| இரும்பு | 26 mcg |
| βகரோட்டின் | 10 mcg |
| நியாசின் | 0.9 mg |
| றைபோபிளேவின் | 20 mcg |
| விற்றமின் சி | 3 mg |
| நார்ச்சத்து | 3.9 g |
| ஈரலிப்பு | 15.3 g |

### மாம்பழம்

✦ இப்பழமானது பங்குனி - ஆடி வரை கிடைக்கும். இதில் பலவகை இனம் உண்டு.

✦ மாம்பழசாறுடன் பாலும் தேனும் கலந்து சாப்பிடின் உடல்சக்தி, ஞாபகசக்தி என்பவ ற்றை வழங்கும்




✦ பசியை சீராக வைத்திருக்க உதவும்.

✦ மாம்பழசாறு அருந்துவதால் தோல் நோய், முகப்பரு என்பன தடுக்கப்படும்.

✦ நல்ல சதைப்பிடிப்பான பழங்களை தோல் சீவி எடுத்து காய்ச்சி சீனி சேர்ந்து Mixi இல் அடித்து மதிய நேரம் உண்ண மலச்சிக்கல் நீங்கும்.

**மாம்பழம் 100 கிராம் இல் உள்ள சத்துக் கள்.**

| | |
|---|---|
| புரதம் | 0.6g |
| கொழுப்பு | 0.4g |
| கல்சியம் | 14mg |
| பொஸ்பரஸ் | 16 mg |
| இரும்பு | 1.3mg |
| விற்றமின் சி | 16mg |
| நார் | 0.7g |
| ஈரலிப்பு | 81g |
| காபோவைதரேற் | 16.9g |
| βகரோட்டின் | 2743 mcg |
| தயமின் | 80 mcg |
| றைபோபிளேவின் | 90 mcg |
| நியாசின் | 0.9 mg |

### தக்காளிப்பழம்

✦ தோலின் விதையை நீக்கிசிறு துண்டாக்கி சீனிசேர்த்து Mixi இல் அடித்து 200-250 ml அளவு தினமும் சாப்பிட்டுவர நோய் எதிர்ப்பு சக்தியை கட்டி தோலை வழுவழுப் பாக்கும். ஆயுளைக் கூட்டும். கண்பார்வை தெளிவடையும்.

✦ தக்காளிச்சாறுடன் தேன்சேர்த்து அருந்த இரத்தம் நன்கு சுத்தியாகும். குழந்தை முதல் பெரியோர் வரை பயன்படுத்தலாம்.

✦ ஜாம் தயாரித்து பயன்படுத்தலாம்.

**தக்காளிப்பழம் (100கிராமில்) உள்ள சத்துக்கள்**

| | |
|---|---|
| புரதம் | 1.5g |
| கொழுப்பு | 0.2g |
| காபோவைதரேற் | 4.2g |
| கல்சியம் | 12mg |
| பொஸ்பரஸ் | 46mg |
| இரும்பு | 1mg |
| தயமின் | 11mg |
| நியாசின் | 2.1mg |
| நார் | 6.7. |

டாக்டர் திருமதி விவியன் சத்தியசீலன் (M.D.C.S.)
சிரேஷ்ட விரிவுரையாளர், சித்தமருத்துவத்துறை,
யாழ். பல்கலைக்கழகம், கைதடி.

(தொடரும்)

## ஐக்கிய தேசியக் கட்சி பழைமையான கொள்கைகளை பின்பற்றுகின்றது

### மல்வத்து பீடாதிபதி தெரிவிப்பு

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சி பழைமையான கொள்கைகளை பின்பற்றி வருவதாக மல் வத்து பீடாதிபதி திப்பட்டுவாவே ஸ்ரீ சித்தார்த்த தேரர் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்குழுவில் அங்கம் வகிக்கும் பலர் அறுபது வயதைக் கடந்தவர்கள் எனவும் அவர்களது எண் ணங்கள் பழைமையானவை எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

கட்சியின் மொனராகல மாவட்ட பாராளு மன்ற உறுப்பினர் ரஞ்சித் மத்தும பண்டார ஆசி பெற்றுக் கொள்ளச் சென்றிருந்த போது மல்வத்து பீடாதிபதி இந்தக் கருத்துக்களை வெளியிட்டுள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சி செல்வந்தர்களின் கட்சியாக காணப்பட்டதாகவும் முன்னாள் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாச இதனை மாற்றியமைத்ததாகவும் அவர் சுட்டிக்காட்டி யுள்ளார்.

எனினும் ரணசிங்க பிரேமதாசவின் மறை வின் பின்னர் கட்சியின் நடவடிக்கைகள் திருப்தி அடையக் கூடிய வகையில் அமை யப் பெறவில்லை என அவர் தெரிவித்து ள்ளார்.

நாட்டு மக்களுக்காக சேவையாற்றக் கூடி யவர்களுக்கு உரிய சந்தர்ப்பம் அளிக்கப்பட வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார்.

இதேவேளை அநேகமான அரசியல் வாதி கள் தேர்தல்களின் பின்னர் தமது ஆதர வாளர்களுக்கு எவ்வித சேவையும் ஆற்று வதில்லை என அஸ்கிரிய பீடாதிபதி உடுகம ஸ்ரீ புத்தரக்கித தேரர் தெரிவித்துள்ளார்.

எவ்வளவு வேலைப்பளு காணப்பட்டா லும் தமது பிரதேச மக்களை சந்தித்து அவர் களது பிரச்சினைகளுக்கு செவி மடுக்க வேண்டு மென அவர் வலியுறுத்தியுள்ளார். ரஞ்சித் மத்தும பண்டார கட்சியின் தேசிய அமைப் பாளர் பதவிக்காக போட்டியிடுகின்றார் என் பது குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-2)

## ஐ.நா.அறிக்கை இலங்கையின் சுயாதீனத்திற்கு எதிரானது

### அமைச்சர் திஸ்ஸ விதாரண தெரிவிப்பு

(கொழும்பு)

ஐ.நா.நிபுணர் குழுவால் இலங்கை தொடர் பில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள அறிக்கை இலங் கையின் சுயாதீனத்திற்கு எதிரானதென சிரே ஷ்ட அமைச்சர் பேராசிரியர் திஸ்ஸ விதாரண தெரிவித்துள்ளார்.

மிக நீண்ட காலமாக புலி ஆதரவாளர் கள் பரப்பி வரும் வதந்திகளை ஆதாரமாகக் கொண்டு குறித்த அறிக்கை தயாரிக்கப்பட் டுள்ளதென அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

யுத்தக் குற்றம் புரிந்ததாகக்கூறி சர்வதேச நீதிமன்றிற்கு இலங்கையை அழைத்துச் செல்வதே ஐ.நா.நிபுணர் குழு அறிக்கை யின் ஒரு நோக்கமென அமைச்சர் குற்றம் சுமத்தியுள்ளார்.

இதனால் குறித்த அறிக்கையை தாம் முற்றாக புறக்கணிப்பதாக அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (ஸ்ரீ-2)

## வீதி பெயர்ப்பலகைகளில் அரபு மொழியும் உள்ளடக்கம்

மட்டக்களப்பு மாவட்டம் காத்தான்குடியின் நகர சபையின் ஆளுமைக்கு உட்பட்ட வீதி கள் மற்றும் ஒழுங்கைகளின் பெயர்ப் பல கைகளில் அரபு மொழிக்கும் இடமளிக்கப் பட்டுள்ளது.

இலங்கையில் நூறு வீதம் முஸ்லிம்கள் மட்டும் வாழும் பிரதேசம் காத்தான்குடி பிர தேசமாகும்.

தமது பிரதேசத்திற்கு தப்லீக் ஜமாத் மற் றும் தஹ்வா அமைப்புகள் என வருகை தரும் அரேபியர்களின் எண்ணிக்கை தற் போது அதிகரித்துள்ளதாகவும், வீதிகளை இலகுவாக அவர்கள் அடையாளம் காண்ப தற்காகவே சிங்களம், தமிழ் மற்றும் ஆங் கிலம் ஆகிய மும்மொழிகளுக்கு மேலதிக மாக நான்காவது மொழியாக அரபு மொழி சேர்க்கப்பட்டுள்ளதாக நகர சபையின் தலைவர் எஸ்.எச்.மொகமட் அஸ்பர் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் அரசியல் யாப்பில் உள் ளடக்கப்படாத மொழியொன்று பெயர்ப் பல கையில் இடம்பெற்றிருப்பதை சர்ச்சைக்குரிய விடயமாக தான் கருதவில்லை என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

நான்காவது மொழியாக அரபு மொழி இடம்பெறுவதற்காக மத்திய மற்றும் மாகாண உள்ளூராட்சி அமைச்சுக்களிடமிருந்து எவ் வித அனுமதியையும் தான் கோரவில்லை என்றும் நகரசபைத் தலைவருக்குரிய அதி காரத்தை தான் பயன்படுத்தியதாகவும் தெரி விக்கும் அவர் காத்தான்குடி நுழைவாயிலில் அமைந்திருந்த வரவேற்பு வளைவில் கூட ஏற்கனவே அரபு மொழிக்கும் இடமளிக்கப்பட் டிருந்ததையும் சுட்டிக்காட்டியுள்ளார். (ஸ்ரீ-2)

## கல்விமாணி மாணவர்களுக்கான விசேட கூட்டம்

தேசிய கல்வி நிறுவகக் கல்வி மாணிப் பட்ட நெறி மூன்றாம் வருட மாணவர்களுக் கான விசேட கூட்டம் இன்று செவ்வாய்க் கிழமை காலை 9 மணிக்கு யாழ். தேசிய கல் வியியற் கல்லூரியில் நடைபெறும்.

இக்கூட்டத்திற்கு சகல மூன்றாம் வருட மாணவர்களையும் சமுகமளிக்குமாறு தேசிய கல்வி நிறுவக இணைப்பாளர் எஸ். ஆர். சத்தி யேந்திரம்பிள்ளை அறிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

# இலங்கைத் தமிழ்ச் சாசனங்கள் ②



ஆதன் ஆதன் என்ற பெயர்கள் அதன் அதன் என்று எழுதப்பட்டுள்ளமை கவனித்திற்குரியது. நெடிலைக் குறிலாக அமைத்துக்கொள்ளும் இயல்பு பிராகிருத மொழிச் செல்வாக்கினால் ஏற்பட்டதென்று கருதலாம். பிராமிச் சாசனங்களை எழுதியவர்கள் தமிழ், பிராகிருதம் ஆகிய இரண்டிலும் ஓரளவு பயிற்சியுடையோர் என்பதும் கவனித்தற்குரியது. இச்சாசனங்களில் வரும் வினைச் சொற்கள் எல்லாம் தமிழ்ச்சொற்கள்; பிராகிருதச் சொற்கள் அனைத்தும் பெயர்ச்சொற்கள்.

தமிழகத்திலே சாசனங்களை எழுதுவதற்கு மட்டுமின்றி முத்திரைகள், மோதிரங்கள், மட்கலங்கள், நாணயங்கள் என்பவற்றிலும் சொற்களை எழுதுவதற்குத் தமிழ்ப் பிராமி எழுத்துகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. சமகாலத்து இலங்கையிலும் இந்த வழமை ஏற்பட்டிருந்தமை குறிப்பி



உ...பஅன்
பேர்அவதன்
வேன்இ சாம்பன்
தித்தன்

டற்குரியது. எழுத்தறிவு சமுதாய மட்டத்திலே பல தரத்திலுள்ளோர் மத்தியிலும் பரவியிருந்தது என்பதற்கு எழுத்துப் பொறித்த தொல் பொருட் சின்னங்கள் உறுதியான ஆதாரங்களாகும்.

### பிராமிச் சாசனங்களும் பெருங்கற் படைக்கால பண்பாடும்

பெருங்கற்படைக்காலப் பண்பாடு, பழந்தமிழ் இலக்கியம் ஆகியவற்றோடு தமிழ்ப் பிராமிச் சாசனங்களின் மொழி வழக்கும் அது அடையாளப்படுத்தும் பண்பாட்டு மரபுகளும் நெருங்கிய தொடர்புடையவை. தென்னிந்தியப் பெருங்கற்படைக் காலத்தின் பிற்பகுதி பிராமிச் சாசனங்கள் எழுதப்பட்ட காலமாகும். பழந்தமிழ் நூல்களான தொகை நூல்களில் அடங்கிய பாடல்களும் பத்துப்பாட்டு நூல்களும் தோன் றிய காலமும் அதுவேயாகும். பெருங்கற்படைக்காலப் பண்பாடு தென்னிந்தியாவிலே திராவிட மொழிகள் வழங்கும் மாநிலங்களான தமிழ்நாடு, கர்நாடகம், கேரளம், ஆந்திரப் பிரதேசம் ஆகியவற்றிலே பரவியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

பெருங்கற்படைக்காலப் பண்பாடு பல சமூகங்களினதும் இனக்குழுக்களினதும் சங்கமத்தினாலும் அவற்றின் பண்பாட்டு மரபுகளின் கலப்பினாலும் உருவாகியது என்பது அதற்குரிய ஈமச்சின்னங்களாலும் அவற்றிலே காணப்படும் வேறு தொல் பொருட்கள் மூலமாகவும் உணரப்படுகின்றது. நுண்கற்காலப் பண்பாட்டுச் சமுதாயங்களும் இரும்பின் உபயோகத்தை அறிமுகப்படுத்திய ஒரு முன்னேற்றமான சமுதாயத்தோடு இணைந்து விட்டன. விவசாயமும் பிற தொழில்களும் புனங்


வெண்பள்இ அறுவை வணிகன் எ[ள்]ள அ.அடன்
தீயன் சாந்தன்
கணி நாகன் கணி நாதன் இருவர் அமகல்
கண்ணன் ஆதன் [கொடுமணல்]

களும் தோப்புக்களும் பெருமளவிலே உருவாக்கப்பட்டன. உற்பத்திப் பெருக்கத்தினாற் சனப்பெருக்கம் ஏற்பட்டது. கிராமிய வாழ்க்கையும் நாகரீகங் கங்களின் உற்பத்தியும் ஏற்பட்டன. அன்றாடத் தேவைக்கும் மட்டுப்பட்ட அளவிலான பயிர்ச்செய்கைக்கும் வேண்டிய மடு, வாவி, குளம் எனப் பலவாறு சொல்லப்படும் நீர் நிலைகளை உருவாக்க முடிந்தது. இரும்புக் கருவிகளின் துணைகொண்டு பாறைகளை உடைக்கவும் நிலத்தை ஆழமாக வெட்டிப் பண்படுத்தவும் காடுகளை அழித்துத் தேவைக்கேற்றவாறு பயன்படுத்தவும் முடிந்தது.


இப்பண்பாட்டிற்குரிய மக்கள் மட்கலங்களையும் தங்கள் பாவனைக்கு வேண்டியவாறு உற்பத்தி செய்தனர். மட்பாண்டங்களிலும் கறுப்பு, சிவப்பு மட்பாண்டங்கள் என்பன இப்பண்பாட்டிற்குச் சிறப்பான சின்னங்களில் ஒரு வகையினவாகும். இப்பண்பாட்டு மக்களின் ஈமச்சடங்குகளும் அவர்களுக்குச் சிறப்பானவை. ஈமத்தாழிகளிலும் தாழ்வைகளிலும் கல்லறைகளிலும் இறந்தோரின் சடலங்களைப் புதைக்கும் முறை அவர்களின் வழமையாகும். அவற்றைப் பற்றிய விபரங்கள் பழந்தமிழ் நூலிற் காணப்படுகின்றன. காலத்தாற் பிற்பட்டதான மணிமேகலை ஆறு வகையான ஈமச்சடங்குகள் பற்றிச் செப்புகின்றது.

பெருங்கற்படைக் காலப்பண்பாடு திராவிட மொழிகளோடு நெருங்கிய தொடர்புடையது என்பது கவனத்திற்குரியது. அது பரவியிருந்த நிலப்பகுதி திராவிடமொழிவழங்கும் பிரதேசமாகிய தென்னிந்தியத் தீபகற்பம். பெருங்கடற்படைக் காலத்து மக்களிடையே திராவிட மொழிகள் பேச்சுவழக்காக மொழிகளாகிவிட்டன. அக்காலத்தின் பிற்பகுதியில் கி.மு நான்காம் நூற்றாண்டளவில் அவை ஆதியான திராவிட மொழியின் கிளைமொழிகளாகி விட்டன போலத் தோன்றும். அக்காலகட்டம் தமிழ் மொழியின் வளர்ச்சிக் காலம் என்பதைச் சாசனத் தமிழ் வாயிலாக அறிய முடிகிறது. தமிழிலக்கிய மரபும் அக்காலத்தில் உருவாகிவிட்டது.

அந்தக் காலகட்டத்திலே பிராகிருதமும் தமிழகத்தில் அறிமுகமாகிவிடுகின்றது. பிராமித் தமிழ்ச் சாசனங்களில் வரும் பெயர்களில் சில தமிழ் பெயர்கள்; வேறுசில பெயர்கள் பிராகிருத மொழிப் பெயர்கள், இன்னும் சில பெயர்கள் தமிழாக்கம் பெற்ற பிராகிருத மொழிப்பெயர்கள் இச்சாசனங்கள் எழுதப்பட்ட காலத்தில் நாகர், பரதவர், பிராமணர் முதலான சமூகப் பிரிவுகளைச் சேர்ந்த எல்லோரிடையிலும் தமிழ் பேச்சுவழக்கு மொழியாகிவிட்டது. தமிழகத்துக் கரையோரங்களில் வாழ்ந்தவர்கள் கப்பற் பிரயாணங்களை மேற்கொள்ளத் தொடங்கிவிட்டனர். தூர தேசங்களோடு தொடர்புகளை ஏற்படுத்திக் கொண்டனர். ஈழம், தாய்லாந்து, எகிப்து ஆகிய தேசங்களிலே தமிழ்பிராமி எழுத்துக்கள் பொறித்த கலவோடுகளும் பிற சின்னங்களும் காணப்படுகின்றமை குறிப்பிடற்குரியது.

### இலங்கையிற் பெருங்கற்படைக் காலம்

கடல்சூழ் இலங்கையில் நிலவளனும் மலைவளமும் கடல்வளமும் தென்னிந்தியாவில் வாழ்ந்த பெருங்கற் பண்பாடு மக்களைக் கவர்ந்தன. கடலில் விளைந்த முத்தும் சங்கும் மலைகளில் கிடைத்த மணிகளும் பெறுமதிமிக்கவை. அவை வணிகரைப் பெரிதும் கவர்ந்தன. நெய்தல் நில மக்களாகிய பரதவரும் பிறரும் கடல்படு திரவியங்களைப் பெறுவதற்கு அங்கு சென்றனர். நீர் வளமும் நிலவளமும் அங்கு சிறந்து காணப்பட்டதால் அங்குள்ள கரையோரங்களில் தங்கி குடிகளாகி விட்டனர். அதற்கு முன்பு அங்கு நுண்கற்கால மக்களே வாழ்ந்தனர். புதிய கற்கால பண்பாட்டின் சுவடுகள்


பதூராற் கோதை [அழகன் குளம்]
[அ]ரிதிய் அய மலாய் அயை பா... [கரூர்]
மூலன்பேடு அந்தணன் உ...மண[ன்] உறையூர்

அங்கு கிடைக்கவில்லை. அவர்கள் வேடுவராக வாழ்ந்தனர். எலும்பிலும் மரத்துண்டுகளிலும் குறுங்கல்லாயுதங்களைப் பொருத்திக் கருவிகளாகப் பயன்படுத்தினார்கள்.

அக்கருவிகள் நிலத்தின் மணற்பாங்கான மேல் மட்டத்திலுள்ள கிழங்குகளைக் கிளறி எடுப்பதற்கும் ஆறுகளிலும் சிறு நீர்தேக்கங்களிலும் பிடிக்கும் மீன்களைத் துரத்திப் பிடிக்கக் கூடிய சிறு சிறுவிலங்குகளையும் வெட் டுவதற்கும் பயன்பட்டன. நிலங்களைப் பயன்படுத்துவதற்கோ பாறைகளை வெட்டுவதற்கோ மரங்களை வெட்டி வீடுகள் அமைப்பதற்கோ அவர்களால் முடியவில்லை. நுண்கற்கால மக்கள் மழை, குளிர், கொடிய விலங்குகள் ஆகியவற்றிலிருந்து தம்மைப் பாதுகாப்பதற்காகக் குகைகளில் வாழ்ந்தனர். அவை மலையடி வாரங்களிலும் மேட்டுநிங்களிலுமே பெரும்பாலும் காணப்பட்டன.

அம் மக்கள் நீர் வளமுள்ள இடங்களிலும் கடலோரங்களிலும் வாழ்ந்தனர். நுண்கற்கால மக்கள் யாழ்ப்பாணக் குடாநாட்டிலும் அதற்கு அண்மையில் உள்ள தீவுப்பற்றிலும் வாழ்ந்தமைக்கு இதுவரை எவ்விதமான சான்றும் கிடைக்கவில்லை.

இவ்வாறானவொரு சூழ்நிலையில் பெருங்கற்படைகாலப் பண்பாட்டினைத் தங்கள் வாழ்வியலின் பிரதான அம்சமாகக் கொண்ட மக்கள் தென்னிந்தியாவிலிருந்து இலங்கைக்குச் சென்றனர். அவர்களின் பண்பாட்டம்சங்களை குறிப்பாக இரும்பின் உபயோகம், மட்கல உற்பத்தி போன்றவற்றை இலங்கையிலுள்ள ஆதிவாசிகள் அறிந்து கொண்டனர். கி.மு ஏழாம் நூற்றாண்டு முதலாக இந்த மாற்றம் ஏற்பட்டது.

யாழ்ப்பாணம் தவிர்ந்த ஏனைய பகுதிகளில் நுண்கற்காலக் கருவிகளும் பெருங்கற்காலச் சின்னங்களும் கலந்திருப்பதைக் காணலாம். இந்தக் கலப்பு நுண்கற்கால மக்களும் பெருங்கற்காலப் பண்பாட்டை அனுசரித்த மக்களும் பலவிடங்களிலே கூடி வாழ்ந்தமைக்கான அடையாளமாகும்.

ஆதிவாசிகள் ஒரு புதிய, மிக முன்னேற்றமான பண்பாட்டு அம்சங்களை அறிந்து அவற்றை ஒப்புக்கொண்டதன் விளைவாக இலங்கை வரலாற்றில் ஒரு புதுயுகம் மலர்ந்தது. அந்தயுகம் ஆரம்பமாகியதும் வாணிபம் மூலமாக இலங்கைக்கும் வட இந்தியப் பிரதேசங்களுக்கும் இடையில் தொடர்புகள் ஏற்பட்டன. தாம்ரலிப்தி, பாருகச்சம் முதலான துறைமுகங்களினூடாக இந்திய வணிகர் இலங்கைக் கரையை அடைந்தனர்.

தென்னிந்திய வணிகரைப் போல அவர்களிற் சிலர் அங்கு தங்கிக் குகளாயினர். பிராகிருத மொழிச் செல்வாக்கும் வைதீகசமயச் செல்வாக்கும் அதன் மூலமாகவும் இலங்கையிலுள்ள ஆதிவாசிகளிடையே பரவின.

**பேராசிரியர் சி.பத்மநாதன், B.A, Ph.D, LFIBA**

இவ்வாறான காலப் பகுதியில் மோரியப் பேரரசின் மேலாதிக்கம் அநுராதபுரத்து அரசின்மேல் ஏற்பட்டது.

அவ்வாற்றல் இலங்கையிலே சமய, பண்பாட்டுத்துறைகளிற் பெரு மாற்றங்கள் ஏற்பட்டன. அந்த மாற்றங்களின் அடையாளங்களைச் சாசனங்களிற் காணலாம்.

(தொடரும்)

# ‘கர’ வருடம் உங்களுக்கு எப்படி?




( சித்திரை 3, 4 ஆம் பாதங்கள், சுவாதி, விசாகம்1,2,3 ஆம் பாதங்கள்)

**ஏழரைச்சனியின் ஆதிக்கம் இரண்டாம் சுற்றெனில் ஆனந்தம்!**

***நம்பியவர்களுக்கு கைகொடுத்து உதவும் நல்ல உள்ளம் படைத்த துலாம் இராசி நேயர்களே!***

உங்கள் இராசிநாதன் சுக்ரன் ஐந்தாமிடத்தில் சஞ்சரித்து ஆண்டு தொடங்குகிறது. இதுவரை விரயச்சனியின் பிடியில் சிக்கி யிருந்த நீங்கள் இனி இழப்புக்களை ஈடுசெய்யும் விதத்திலும் இனிய வாழ்க்கையை அமைத்துக் கொடுக்கும் விதத்திலும் கரவருடம் பிறந்துள்ளது.

வருடப்பிறப்பன்று தொழில் ஸ்தானாதிபதி சந்திரன் இலாப ஸ்தானத்தில் சஞ்சரித்து இராசிநாதனைப் பார்ப்பதால் ஆண்டு முழுவதும் வேண்டிய நற்பலன்கள் உங்களுக்கு கிடைக்கப் போகிறது.

இருப்பினும் ஏழரைச்சனியின் ஆதிக்கம் நடப்பதால் எதையும் திட்டமிட்டுச் செய்ய இயலாது. நினைத்தது ஒன்றும் நடந்தது ஒன்றுமாக கூட சில சமயங்களில் மாறலாம்.

வருடத் தொடக்கத்திலேயே சனியும் வக்ரம் பெறுகிறார். உங்கள் இராசிக்கு 4,5 க்கு அதிபதியான சனிபகவான் வக்ர நிலையை அடையும் பொழுது மீண்டும் பழைய பிரச்சினைகள் தலை தூக்கலாம். அந்நியோன்யமும் அனுசரிப்பும் குறையாமல் பார்த்துக் கொள்வது நல்லது.

பிள்ளைகள் வழியில் பிரச்சினைகளும் திடீர் விரயங்களும் ஏற்படாமல் இருக்க முன்கூட்டியே யோசித்து எதையும் செய்வது நல்லது. கல்வி வளர்ச்சியில் தடை, கட்டடப் பணியில் தொல்லை போன்றவற்றை சந்திக்காமல் இருக்க சனிபகவான் வழிபாட்டில் முழுக் கவனமும் செலுத்துவது நல்லது.

குரு உங்கள் இராசிக்கு பகைவனாக இருந்தாலும் கூட சகாய ஸ்தானத்திற்கும் அதிபதியாக அவர் விளங்கி வருகிறார். எனவே அவர் பார்வை பதியும் நேரங்களில் ஓரளவு நற்பலன்களும் உங்களுக்கு வந்து சேரும்.

அடுத்து வரும் இராகு-கேது பெயர்ச்சியில் தான் நீங்கள் கொஞ்சம் கூடுதல் விழிப்புணர்ச்சி காட்ட வேண்டிய நேரமாகும். அந்த நேரத்தில் முறையான சர்ப்ப சாந்திகளைச் செய்து கொண்டால் முன்னேற்றத்தில் வரும் தடைகள் உங்களை விட்டு அகலும். அஷ்டமத்தில் கேது அல்லவா சஞ்ரிக்கிறார்.?

ஆயுள் ஸ்தானம் என்றும் மாங்கல்ய ஸ்தானம் என்றும் இழப்புகள் ஸ்தானம் என்றும் வர்ணிக்கப்படும் எட்டாமிடத்தில் கேது சஞ்சரிக்கும் பொழுது ஆன்மீகத்தில் அதிக ஈடுபாடு செலுத்தினால் தான் அன்றாட வாழ்க்கை நன்றாக அமையும். பொதுவாக விநாயகப் பெருமான் உங்கள் வேதனைகளை எல்லாம் தீர்ப்பார்.

விரயச்சனி மாறிய பின்னால் ஜென்மச் சனியின் ஆதிக்கம். பின்னர் குடும்பச் சனியின் ஆதிக்கம் நடைபெறும்.குடும்பச் சனியில் ஆதிக்கம் நடைபெறும் பொழுது வீட்டில் மங்கல ஓசை கேட்பதற்கான அறிகுறிகளும் மழலையின் ஓசை கேட்பதற்கான அறிகுறிகளும் தோன்றும்.

**தளராத மனதிற்கு சொந்தக்காரர்!**

துயரங்களை பொடியாக்க துவளாத மனத்தோடு செயற்படுவர்கள் துலாம் இராசிக்காரர்கள் என்று சொல்வார்கள். தோற்றத்தில் கவர்ச்சியைப் பெற்றும் பேச்சினில் இனிமையைச் சேர்த்தும் நீங்கள் செயற்படுவதனால் தான் எதிரிகள் உங்களிடம் சரணடைகிறார்கள்.

புன்னகையை காட்டிலும் நீங்கள் பொன்நகைக்குத் தான் முக்கியத்துவம் கொடுப்பீர்கள். உங்கள் இராசிநாதன் சுக்ரன் களத்திரகாரகன் என்று வர்ணிக்கப்படுகிறார். குடும்ப ஸ்தானம் மற்றும் களஸ்திரத்தானத்திற்கு அதிபதியாக செவ்வாய் விளங்குகிறார்.எனவே நீங்கள் வாழ்க்கைத் துணையைத் தேர்ந்தெடுக்கும் பொழுது செவ்வாய் மற்றும் சுக்ரனின் ஆதிக்கம் உங்கள் ஜாதகத்திற்கு ஏற்ற விதத்தில் இருப்பவராக தேர்ந்தெடுத்தால்தான் இல்லறம் நல்லறமாக அமையும்.

**சப்தம குருவால் ஏற்படும் சந்தோஷங்கள்!**

கர வருடத் தொடக்கத்திலேயே 08.05.2011 அன்று குருப் பெயர்ச்சி நடைபெறப் போகின்றது. உங்கள் இராசிக்கு மூன்று, ஆறுக்கு அதிபதியான குரு பகவான் இதுவரை ஆறாமிடத்திலேயே சஞ்சரித்து வந்தார். சனி ஏழாமிடத்தில் சஞ்சரிக்கப்போகிறார்.

சப்தம ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் குரு உங்கள் இராசியை நேர் பார்வையாக பார்க்கிறார். பகை கிரகமாக இருந்தாலும் பார்க்கும் பார்வையால் பலன் கொடுக்கும் கிரகம் குரு ஒன்று தான். எனவே எதிர்காலத்தை இனிமையாக்க போட்ட திட்டங்கள் நிறைவேறும். தன்னம்பிக்கை கூடும். தக்க விதத்தில் உங்கள் உழைப்பிற்கேற்ற பலன் கிடைக்கும்.

**“ஏழில் குரு வந்தால்**
**எதிர்காலம் சிறப்படையும்**
**வாழ்வில் வசந்தம் வரும்**
**வருமானம் பெருகி விடும்**
**சூழும் பகை விலகும்**
**சுற்றமெல்லாம் பாராட்டும்!**
**கோள்கள் குறுக்கிட்டால்**
**குரு பார்வை தவிர்த்து விடும்!”**

என்று ஜோதிட சாஸ்திரம் சொல்கிறது.

அந்த அடிப்படையில் பார்க்கும் பொழுது ஏழில் சஞ்சரிக்கும் குருவின் பார்வை 1,3,11 ஆகிய இடங்களில் பதிகிறது. எனவே உடல் நலம் சீராகும். உற்சாகத்தோடு பணி புரிவீர்கள்.

படிப்படியாக கடன்சுமை குறையும். பல நாட்களாக தொழிலில் எதிர்பார்த்த இலாபம் வந்து சேரும். மேலதிக வருமானங்கள் பெருகும். இதைச் செய்வோமா? அதைச் செய்வோமா? என்ற சிந்தனை மேலோங்கும். கூட்டுத் தொழிலுக்கு நண்பர்கள் கைகொடுத்து உதவுவதாகச் சொல்வர். ஆனால், ஏழரைச் சனி ஆதிக்கம் நடை பெறுவதால் விரயத்தின் விளிம்பிற்கே செல்லக்கூடிய வாய்ப்பு உருவாகலாம். எனவே யோசித்து புதுமுயற்சியில் ஈடுபடுவது நல்லது.

**இராகு-கேது பெயர்ச்சிக் காலம்!**

இதுவரை உங்கள் இராசிக்கு மூன்றாமிடத்தில் இராகுவும் ஒன்பதாமிடத்தில் கேதுவும் சஞ்சரித்து வந்தார்கள். மே மாதம் 16 ஆம் திகதி இராகு- கேதுக்களின் மாற்றம் ஏற்படப் போகிறது.இரண்டில் இராகுவும் எட்டில் கேதுவும் சஞ்சரிக்கப் போகிறார்கள்.

தனஸ்தானத்தில் சஞ்ரிக்கும் இராகு, தனவரைவைப் பெருக்குவார். எனவே வீட்டிற்குத் தேவையான அத்தியாவசியப் பொருட்கள் முதல் ஆடம்பரப் பொருட்கள் வரை வாங்கி மகிழப் போகிறீர்கள். குடும்பத்தினர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்ய வாய்ப்பு கிட்டும்.

அதே சமயத்தில் அஷ்டமத்தில் சஞ்சரிக்கும் கேது திடீர் திடீரென விரயங்களை உருவாக்குவார். சேமிப்பு ஒரு பக்கம் சேர்ந்து கொண்டே இருந்தாலும் மற்றொரு பக்கம் கரைந்து கொண்டே இருக்கும். தெய்வத் திருப்பணிகளுக்குச் செலவிடும் சூழ்நிலையும் உருவாகும். பாம்பு கிரகங்கள் பலன் கொடுக்கவும் தேம்பும் வாழ்க்கை மாறி தேசம் போற்றும் வாழ்வமையவும் யோக பலம் பெற்ற நாளில் சர்ப்ப சாந்திகளை முறைப்படி செய்வது நல்லது.

**சஞ்சலம்தீர்க்கும்சனிப்பெயர்ச்சி!**

இதுவரை விரய ஸ்தானத்தில் சஞ்சரித்து வந்த சனிபகவான் 21.12.2011 முதல் ஜென்ம இராசியில் சஞ்சரிக்கப் போகிறார். அங்கிருந்து இரண்டரை ஆண்டுகாலம் தனது ஆட்சியைத் தொடருவார். அதன் பின்னர் இரண்டாமிடத்திற்கு வந்து அங்கும் இரண்டரை ஆண்டு காலம் தங்கியிருப்பார். இந்த ஏழரைச் சனி தான் எண்ணற்ற மாற்றங்களை உருவாக்கும். ஜென்மச்சனி உடல் ஆரோக்கியத்தில் அதிக கவனம் செலுத்த வேண்டிய சூழ்நிலை உருவாகும்.

பணிகளில் தொய்வு ஏற்படும் பலரையும் அனுசரித்து செல்ல வேண்டிய சூழ்நிலை உருவாகும். கனிவாகப் பேசியவர்கள் உரத்த குரலில் பேசுகிறார்களே என்று கவலைப்படுவீர்கள். கடிதம் மூலம் வந்த தகவல் மன அமைதியைக் குறைப்பதாக இருக்கும். எனவே சனிக் கிழமை தோறும் விரதமிருந்து எள் தீபமேற்றி சனிபகவானை வழிபடுவது நல்லது.

## சிவல்புரி சிங்காரம்

**அக்கறை செலுத்த வேண்டிய வக்ர காலங்கள்**

ஆண்டின் தொடக்கத்திலேயே சனி வக்ரம் பெறுகிறார். அதன் பின்னால் மீண்டும் இரண்டு முறை வக்ரம் பெறுகிறார். இந்த வக்ர காலத்தில் வாழ்க்கைப் பாதையில் திசை மாற்றம் ஏற்படலாம். தாய் வழி ஒத்துழைப்பு குறையலாம். பங்காளிப் பகை அதிகரிக்கலாம். உத்தியோகம், தொழிலில் இருப்பவர்களுக்கு ஊர் மாற்றம்,துறைகளில் மாற்றம் உருவாகலாம்.

பிள்ளைகளின் திருமணம் சம்பந்தமாக எடுத்த முயற்சிகளில் தாமதம் ஏற்படலாம். பூர்வீக சொத்துக்களை யோசித்து விற்பது நல்லது.

31.08.2011 முதல் 15.12.2011 வரை குரு வக்ரம் பெறுகிறார். அக்காலத்தில் உங்களுக்கு ஆச்சரியப்படத்தக்க விதத்தில் பலன்கள் நடைபெறும். எக்காலத்தில் இல்லாத அளவிற்கு நண்பர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும். வரவு திருப்தி தரும். குரு ப்ரீதியும் சுக்ர ப்ரீதியும் செய்வது நல்லது.

**பலன் தரும் பரிகாரம்**

வெள்ளிக்கிழமை தோறும் தெற்கு நோக்கிய அம்பிகையை வழிபட்டு வாருங்கள். யோக பலம் பெற்ற நாளில் அம்மன், நந்தி முனீஸ்வரரை வழிபட்டு வளர்ச்சியைக் கூட்டிக் கொள்ளுங்கள்.(தொடரும்)






வடமாகாண கிராம அபிவிருத்தித் திணைக்களத்தின் அனுசரணையுடன் யாழ். மாவட்டத்தில் மகளிர் அபிவிருத்தி நிலையத்தினால் நடத்தப்பட்ட தையல், அழகியல் காட்சி நிகழ்வு நேற்று யாழ். வேம்படி பெண்கள் உயர்தர பாடசாலையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட வடமாகாண கிராம அபிவிருத்தி திணைக்களப் பணிப்பாளர் ஜே.ஜே. சி.பெலிசியன் கண்காட்சியைப் பார்வையிடுவதையும் மணப்பெண் போட்டி தெரிவிற்கு

# நிபுணர் குழுவின் அறிக்கை முற்றிலும் அரசுக்கு எதிராக தயாரிக்கப்பட்டதொன்று

## அமைச்சர் வாசுதேவ தெரிவிப்பு



(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகத்தினால் நியமிக்கப்பட்ட நிபுணர் குழுவினால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கை தொடர்பில் பதிலளிப்பதற்கு எதுவுமில்லை என தேசிய மொழிகள் மற்றும் இன நல்லுறவு அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

நிபுணர் குழுவினால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் புதிய விடயங்கள் எதுவுமில்லை. ஏற்கனவே குறிப்பிடப்பட்ட விடயங்களே காணப்படுகின்றன. அதற்கு அரசதரப்பு ஏற்கனவே பதிலளித்து விட்டது. இனி அவ்வறிக்கை தொடர்பில் பதிலளிப்பதற்கு எதுவுமில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டின் எதிர்க்கட்சிகள் அரசாங்கத்தை நெருக்கடியில் தள்ளுவதற்காகவே சூழ்ச்சித் திட்டத்தை முன்வைத்து குற்றஞ்சுமத்துவதாக வாசுதேவ நாணயக்கார மேலும் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது, பான் கீ மூனின் ஆலோசனைக் குழு வெளியிட்டுள்ள அறிக்கை புதியது. ஆனால், அதில் முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் பழைமையானவை. ஏற்கனவே தெரிவிக்கப்பட்டவை. அதாவது பழைய மொத்தையில் புதிய கள் என்றே கூறவேண்டும். இக்குற்றச்சாட்டுக்களுக்கு ஏற்கனவே எமது அரசாங்கம் பதிலளித்துவிட்டது. எனவே, மேலும் மேலும் ஒரேமாதிரியான கேள்விகளுக்கு பதிலளிக்க வேண்டிய அவசியம் கிடையாது.

இவ்வறிக்கை முழுவதுமாக அரசாங்கத்திற்கு எதிராக தயாரிக்கப்பட்டவொன்று. உண்மையான ஆதாரங்கள், சாட்சியங்கள் எதுவுமில்லாது தயாரிக்கப்பட்டது. எனவே, அரசாங்கத்தின் பங்காளிக் கட்சி என்ற வகையிலும் பொறுப்புள்ள அமைச்சர் என்ற வகையிலும் இவ்வறிக்கையை வன்மையாகக் கண்டிக்கின்றேன்.

மேற்குலக நாடுகளுக்கு அடிபணியாது முற்போக்கு சக்திகளுடன் அரசாங்கம் இணைந்து செயற்படுவதை பொறுக்க முடியாததன் வெளிப்பாடே இவ்வறிக்கையாகும். இன்று எமது நாட்டில் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சிக்கும் பலம் கிடையாது.

எனவேதான் வெளிநாடுகளுக்கு சென்று பல்வேறு நிறுவனங்களிடமும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் அரசாங்கத்திற்கு எதிராக குற்றச்சாட்டுக்களை முன்வைக்கிறது. இதன் மூலம் அரசாங்கத்தை ஒரு போதும் கவிழ்த்து விட முடியாது என அவர் கூறியுள்ளார். (ஸ்ரீ-2)

# அறிக்கையை கசியவிட்டதற்கு அரசு மீது ஐ.நா. கடும் விசனம்

(கொழும்பு)

ஐ.நா. நிபுணர் குழுவின் அறிக்கையின் ஒரு பகுதி இலங்கை ஆங்கில ஊடகம் ஒன்றில் வெளியானது குறித்து ஐ.நா கடும் விசனம் அடைந்துள்ளது.

அரசுக்கு வழங்கப்பட்ட பிரதியே ஊடகங்களுக்கு கசிய விடப்பட்டுள்ளதாக ஐ.நா. கருதுகிறது.

இது குறித்து ஐ.நா. பொதுச் செயலரின் பேச்சாளர் பணியகம் வெளியிட்ட செய்திக் குறிப்பு ஒன்றில் கடும் விசனத்தை வெளிப் படுத்தியுள்ளது.

நிபுணர் குழு வழங்கிய அறிக்கையை ஐ.நா. பொதுச்செயலர் ஆராய்ந்து வருகிறார். இந்த அறிக்கைக்குப் பதிலளிக்கும் வாய்ப்பை வழங்கும் வகையில் ஜனாதிபதி மகிந்தவுக்கு இதன் பிரதி ஒன்று வழங்கப்பட்டுள்ளது.

நிபுணர் குழுவின் அறிக்கையை பகிரங்கப்படுத்தும் போது ஜனாதிபதி பதிலும் வெளியிடப்படும்.

ஆனால் ஊடகம் ஒன்றில் இந்த அறிக்கையின் சில பகுதிகள் முன்கூட்டியே வெளியானது மிகவும் விசனத்தை ஏற்படுத்தியுள்ளது. (ச-5)

# வெளிநாடு செல்வோரின் எண்ணிக்கையில் வீழ்ச்சி

(கொழும்பு)

கடந்த இருமாத காலப்பகுதியினுள் வெளிநாட்டு வேலைவாய்ப்பை பெற்றுச் செல்பவர்களின் எண்ணிக்கையில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாக வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர்களின் சங்கம் தெரிவித்துள்ளது.

இந்த விடயம் குறித்து சங்கத்தின் செயலாளர் மக்கீன் கருத்து தெரிவிக்கையில், வெளிநாட்டு வேலைவாய்ப்பினை பெற்றுச் செல்பவர்களின் எண்ணிக்கை சுமார் 50 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்துள்ளதாக குறிப் பிட்டுள்ளார்.

இதன் காரணமாக வெளிநாடுகளில் இருந்து கிடைக்கும் அந்நிய செலாவணி நூறு கோடி ரூபாவினால் குறைவடையலாம் எனவும் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

# விரிவுரையாளர்களின் சம்பளம் தொடர்பான பிரச்சினை ஜனாதிபதியின் கவனத்திற்கு

(கொழும்பு)

பல்கலைக்கழக விரிவுரையாளர்களின் சம்பளம் தொடர்பிலான பிரச்சினையை ஜனாதிபதியின் கவனத்துக்குக் கொண்டு வர உயர் கல்வி அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்க தீர்மானித்துள்ளார்.

நேற்று முன்தினமிரவு நடைபெற்ற பேச்சுவார்த்தை ஒன்றின் போது உயர்கல்வி அமைச்சர் இந்தத் தீர்மானத்தை மேற்கொண்டதாக பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் சங்கத்தின் ஊடகப் பேச்சாளர் கலாநிதி மஹீன் மெண்டிஸ் தெரிவித்தார்.

தமது தரப்பினரின் கோரிக்கைகளை செவிமடுத்த உயர் கல்வி அமைச்சர் எவ்வித உறுதிமொழியையும் வழங்கவில்லை என அவர் குறிப்பிட்டார்.

எவ்வாறாயினும் இந்தப் பிரச்சினையை ஜனாதிபதியின் கவனத்திற்கு கொண்டுவருவதாக அமைச்சர் தெரிவித்துக் கொண்டதாகவும் கலாநிதி மஹீன் மெண்டிஸ் தெரிவித்தார்.

இந்த நிலையில் அடுத்த மாதம் ஒன்பதாம் திகதியிலிருந்து பதவிகளைத் துறக்கும் தொழிற்சங்க நடவடிக்கையில் எதுவித மாற்றமும் ஏற்படாது என பல்கலைக்கழக விரிவுரையாளர் சங்கம் அறிவித்துள்ளது.

இதற்கமைய முதற்கட்டமாக ஒவ்வொரு துறைகளுக்குப் பொறுப்பான விரிவுரையாளர்கள் தமது இராஜினாமா கடிதத்தை குறிப்பிட்ட தினத்தில் கையளிப்பார்கள் என சங்கத்தின் ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார்.

உயர்தரப் பரீட்சை விடைத்தாள் மதிப்பீட்டு பணிகளில் இருந்து வெளியேறுவதற்கு எடுத்துள்ள தீர்மானத்திலும் மாற்றம் ஏற்படாது என கலாநிதி மஹீன் மெண்டிஸ் குறிப்பிட்டார். (ஸ்ரீ-2)




★ 1587- ஸ்பானிய போர்க் கப்பலை சேர் பிரான்சிஸ் டிரேக் மூழ்கடித்தார்.

★ 1775- அமெரிக்கப் புரட்சிப் போர் ஆரம்பித்தது.

★ 1810- வெனிசுவேலாவில் இராணுவ ஆட்சி நிறுவப்பட்டது.

★ 1861- அமெரிக்க உள்நாட்டுப் போர்: மேரிலாந்தின் பால்ட்டிமோர் நகரில் கூட்டமைப்பின் ஆதரவாளர்களினால் ஐக்கிய அமெரிக்கப் படைகள் தாக்கப்பட்டன. நான்கு படையினரும் 12 பொது மக்களும் கொல்லப்பட்டனர்.

★ 1892- ஐக்கிய அமெரிக்காவில் முதன் முதலில் தானுந்து ஒன்றை சார்ல்ஸ் டூரியா என்பவர் மசாசுசெட்சில் ஸ்ப்றிங்ஃபீல்ட் என்ற இடத்தில் செலுத்தினார்.

★ 1902- கௌதமாலாவில் 7.5 ரிக்டர் நிலநடுக்கம் தாக்கியதில் 2 ஆயிரம் பேர் இறந்தனர்.

★ 1904- கனடாவின் டொரொன்டோ நகரத்தின் பெரும் பகுதிகள் தீயினால் அழிந்தன.

★ 1928- ஒக்ஸ்போர்ட் ஆங்கில அகராதியின் 125 ஆவதும் கடைசியுமான தொகுதி வெளிவந்தது.

★ 1936- பாலஸ்தீனர்களின் ஆங்கிலேயர்களுக்கெதிரான முதலாவது கிளர்ச்சி ஆரம்பிக்கப்பட்டது.

★ 1954- உருது மற்றும் வங்காள மொழி ஆகியன பாகிஸ்தானின் தேசிய மொழிகளாக அறிவிக்கப்பட்டன.

★ 1971- முதலாவது விண்வெளி ஆய்வு கூடமான சோவியத் ஒன்றியத்தின் சல்யூட்-1 விண்ணுக்கு அனுப்பப்பட்டது.

★ 1975- இந்தியாவின் முதலாவது செய்மதி ஆரியப்பட்டா விண்ணுக்கு ஏவப்பட்டது.

★ 1989- அமெரிக்காவின் அயோவா என்ற கப்பலின் பீரங்கி மேடை ஒன்று வெடித்ததில் 47 கடற்படையினர் கொல்லப்பட்டனர்.

★ 1993- ஐக்கிய அமெரிக்கா டெக்சாசில் டாவீடியன் என்ற மதக்குழு ஒன்றின் கட்டடத்தை 51 நாட்களாக சுற்றி வளைத்த அமெரிக்க FBI இன் முற்றுகை கட்டடம் தீப்பற்றியதில் முடிவுக்கு வந்தது. 81 பேர் கொல்லப்பட்டனர்.

★ 1995- அமெரிக்காவின் ஒக்லகாமா நகரத்தில் நடுவண் அரசுக் கட்டடம் ஒன்று தீவிரவாதிகளின் குண்டுத் தாக்குதலுக்கு இலக்கானதில் 168 பேர் கொல்லப்பட்டனர்.

★ 1995- சந்திரிகா- விடுதலைப்புலிகள் பேச்சுவார்த்தை முறிவடைந்ததாக விடுதலைப் புலிகள் அறிவித்தனர். அதனையடுத்து திருகோணமலைத் துறைமுகத்தில் இரண்டு பீரங்கிக் கப்பல்கள் புலிகளால் மூழ்கடிக்கப்பட்டன.

★ 1999- ஜேர்மனியின் நாடாளுமன்றம் பெர்லின் நகருக்கு மாற்றப்பட்டது.

★ 2006- நேபாளத்தில் மன்னராட்சியை எதிர்த்து பொதுமக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

### பிறப்புக்கள்

★ 1832- ஜொசே ஐசாகிர், நோபல் பரிசு பெற்ற எழுத்தாளர் (இ.1916)

★ 1912- கிளென் சீபோர்க், நோபல் பரிசு பெற்ற அமெரிக்க வேதியியலாளர் (இ.1999)

★ 1957- முகேஷ் அம்பானி, இந்தியாவின் தொழிலதிபர்.


### இறப்புக்கள்

★ 1882- சார்ள்ஸ் டார்வின், பரிணாமக் கோட்பாட்டைக் கண்டுபிடித்தவர் (பி.1809)

★ 1909- பியரி கியூரி, நோபல் பரிசு பெற்றவர் (பி. 1859)

★ 1998- ஒக்டோவியா பாஸ், நோபல் பரிசு பெற்ற மெக்சிக்கோ எழுத்தாளர் (பி. 1914)

# ஆனந்த அலை



## ஆன்மீகம் 29

**அனைத்து அனுபவங்களும் உள்நிலையில்தான் நடக்கிறது**

நமக்கு நடக்கிற அனுபவங்கள் எல்லாமே நமக்குள்ளே தான் நடக்கின்றது. நீங்கள் என்னைப் பார்க்க முடிகிறதா? இப்போது நான் எங்கே இருக்கிறேன் சொல்லுங்கள்? இங்கே அப்படியில்லை, இந்த வெளிச்சம் என் மேல் வந்து விழுகிறது. இந்த வெளிச்சம் பிரதிபலித்து என்மேல் வந்து விழுகிறது. ஆக, உங்கள் மனத்தில் தானே பார்க்கிறீர்கள்? நான் எங்கே இருக்கிறேன் சொல்லுங்கள். இப்போது? உங்களுக்குள்ளே தானே இருக்கின்றேன்.

என்னுடைய பேச்சு எங்கே இருக்கிறது சொல்லுங்கள்? உங்களுக்குள்ளே தானே நடக்கின்றது? உலகம் எல்லாமே எங்கே நடக்கிறது? இந்த ஆகாயம் எங்கே இருக்கிறது? உங்களுக்குள் தானே இருக்கிறது? பிரபஞ்சமே உங்களுக்குள் தானே இருக்கிறது? உங்கள் உள்ளத்தை விட்டுவிட்டு வேறு ஏதாவது உணர்கிறீர்களா? வாழ்க்கையில்? உணர்ந்து இருக்கிறீர்களா? வெளியே ஏதும் உயர்ந்தீர்களா? நீங்கள் உணர்ந்தது எல்லாமே உள்ளே தானே நடந்தது? எல்லாமே உங்களுக்குள்ளேயே நடக்கிறபோது, நாம் சிறிது விழிப்புணர்வு கொண்டுவந்தால் உள்நிலையில் எப்படி வேண்டுமோ அப்படிச் செய்துகொள்ளலாம் இல்லையா? இந்த உலகம் எப்படி வேண்டுமோ அப்படி நம்மால் செய்ய முடியவில்லை, ஓரளவுக்குச் செய்ய முடிகிறது. ஆனால், உள்நிலையில் நமக்கு எப்படி வேண்டுமோ அப்படிச் செய்து கொள்ளலாமா?

**ஆனால் கனவு உண்மை**

நான் சில மாதங்கள் முன்னால் ஈசா ஹோம் ஸ்கூலுக்குப் போனேன். எட்டு, ஒன்பது வயதுச் சிறுவர்கள் என்னிடம் வந்து "சத்குரு இந்த வாழ்க்கை உண்மையா? கனவா?" என்றனர். அதற்கு நான் சொன்னேன், 'இது கனவு. ஆனால், இந்தக் கனவு உண்மை'. கனவு உண்மைதானே? இப்போது இது உங்கள் கனவு. எப்படி வேண்டுமானாலும் செய்துகொள்ளலாம். ஆனந்தமாகச் செய்துகொள்ளலாம். இல்லையென்றால் துன்பமாகச் செய்துகொள்ளலாம். போராட்டமாகச் செய்துகொள்ளலாம். இல்லை சாந்தமாகச் செய்துகொள்ளலாம். எப்படி இருந்தாலும் உங்களுக்குள் நடக்கிற விடயம்தானே? இதுவரைக்கும் நடந்த வாழ்க்கை எல்லாமே உங்களுக்குள் தானே நடக்கிறது. உங்களுக்குள் எப்படி வேண்டுமோ, அப்படி நடத்திக் கொள்ள வேண்டும்தானே? இதற்கு அடிப்படையான படியே நாம் எடுக்காமல், எங்கோ பார்த்துக் கொண்டிருக்கின்றோம்.

அதனால், யோகா என்பது இதற்கு அடிப்படையான ஒரு கருவி. நமக்குள்ளே நடப்பது நம் விருப்பத்திற்கு நடக்க வேண்டும். உலகமெல்லாமே உங்கள் விருப்பத்திற்கு நடக்கத் தேவையில்லை இல்லையா? உலகம் உங்கள் விருப்பத்திற்கு நடக்காது. ஆனால், உங்கள் உள்ளம் உங்கள் விருப்பத்திற்கு நடக்க வேண்டும்தானே? உங்கள் விருப்பத்திற்கு உங்கள் உள்ளம் நடந்தால், அதை ஆனந்தமாகத்தானே வைத்துக்கொள்ளப் போகிறீர்கள்? இப்போது நமது பிரச்சினை என்னவென்றால் வெளியிலிருந்து ஆனந்தம் கொண்டுவர முயற்சி செய்கிறோம்.

**ஆனந்தம் வெளியிலிருந்து வருவதில்லை**

அக்பர் சமஸ்தானத்தில் பீர்பால் ஆஸ்தான மந்திரி. ஆனால் இவர் அதிசயமான புத்திசாலி. ஒருநாள் வயதானவர் ஒருவர் வந்தார். மிகவும் ஏழை. அக்பரிடம் வந்து, "ஐயா! என் பெண்ணிற்குத் திருமணம் செய்ய வேண்டும். ஒரேயொரு பெண்ணாக இருப்பதாலே நான் அவளது திருமணத்தை நல்லபடியாகச் செய்ய வேண்டும் என்று ஆசைப்படுகின்றேன். ஆனால், என்னிடம் வசதி இல்லை. ஏதாவது கொடுத்தால் நான் திருமணம் செய்து வைப்பேன்" என்று சொன்னார். அதற்கு அக்பர், "சம்பாதிக்க முடியாதவனுக்கு வசதியாகக் திருமணம் செய்ய ஏன் ஆசை? ஏதாவது மரத்திற்குக் கீழே திருமணம் செய்து வை" என்றார். அதற்கு அந்த ஏழை "இல்லை ஐயா, ஒரே ஒரு குழந்தை. நல்லபடியாகக் திருமணம் செய்து வைக்க வேண்டும் ஏதாவது செய்யுங்கள்" என்றார்.

அக்பர் ஒரு மாதிரி மனநிலையில் இருந்தார். அக்பருடைய அரண்மனைக்கு முன்னால் ஒரு குளம் இருந்தது. அப்போது அவர் சொன்னார், "நீ போய் சூரிய அஸ்தமனத்திலிருந்து சூரிய உதயத்திற்குள் 12 மணி நேரம் கழுத்தளவு தண்ணீரில் நிற்கவேண்டும். அப்படி நின்றால் உன் பெண்ணின் திருமணத்திற்கு தேவையான பணத்தைக் கொடுக்கிறேன்" என்றார். மகளுக்குத் திருமணம் நல்லபடியாக செய்து வைக்க வேண்டும் என்ற ஆசையில் குளத்தில் போய் நின்று விட்டார். தண்ணீர் மிகவும் ஜில்லாக இருந்தது. ஆனால் அங்கேயே இரவு முழுவதும் நின்று விட்டார்.

காலையில் அந்தக் குளத்தில் இருந்து வெளியே வந்து ராஜாவின் காலில் விழுந்து நீங்கள் சொன்னது போல் தண்ணீரில் நின்றுவிட்டேன். ஏதாவது கொடுக்கவேண்டும் என்று சொன்னார். அக்பருக்கு மிகவும் ஆச்சரியமாக இருந்தது. எப்படி இரவு முழுவதும் குளிர் தண்ணீரில் நின்றாய் என்று கேட்டார். அதற்கு அவர் சொன்னார், உங்கள் அரண்மனைத் தீபம் எரிந்து கொண்டிருந்தது. அதையே பார்த்துக் கொண்டிருந்தேன். நேரம் போனதே தெரியவில்லை. அப்படியே நின்று விட்டேன்.

அதற்கு அக்பர் சொன்னார். "ஓ என் அரண்மனையில் இருக்கின்ற விளக்கிலிருந்து வெப்பம் எடுத்து நின்று விட்டாயா? அப்படியென்றால் பணத்தைக் கொடுக்க முடியாது. என்னுடைய அரண்மனையிலிருந்துதானே வெப்பம் எடுத்தாய் அதனால் நான் கொடுக்க முடியாது."

பீர்பாலுக்கு இது மிகவும் அநியாயமாக இருந்தது. ஆனால் அரசரிடம் அதிகம் பேச முடியாது. அதிகம் பேசினால் தலை போய்விடும். எனவே சும்மா இருந்து விட்டார். கொஞ்சநாளுக்குப் பின்னர் அக்பர் வேட்டைக்குச் சென்றார். பீர்பாலும் உடன் சென்றார். இரவு வேளை வந்தது. உணவு சமைக்க ஆரம்பித்தார்கள். அக்பருக்கு ரொம்பப் பசியாக இருந்தது. ரொம்ப விருப்பமான சமையல் எல்லாம் பரிமாறப்படும் என்றார்கள். அக்பர் எல்லாம் முடிந்து விட்டதா? என்று கேட்டார். பீர்பால், இன்னும் 10 நிமிடங்கள் என்று சொன்னார். சிறிது நேரத்திற்குப் பின்னர் அக்பர் மீண்டும் பசிக்கிறது உணவு தயாராகிவிட்டதா? என்று கேட்டார். இன்னொரு 10 நிமிடம் என்று சொன்னார்கள். இப்படிச் சொல்லிச் சொல்லியே நடுராத்திரி வந்து விட்டது.

ராஜாவிற்கு அகோர பசியாகிவிட்டது. அப்படி என்ன சமையல் செய்கிறார்கள் என்று பார்ப்பதற்காக அக்பர் வெளியே வந்தார். பாத்திரம் எல்லாமே ஒரு மரத்தில் 30 அடி மேலே தொங்க விடப்பட்டிருந்தது. கீழேஎல்லாம் கொஞ்சம் கொஞ்சம் தீவைத்து இருந்தார்கள். இதை பார்த்து "எந்தமுட்டாள் இப்படிச் செய்தது. இப்படிச்சமைக்க முடியுமா?" என்று கேட்டார். பீர்பால் சொன்னார், அப்படியெல்லாம் ஒன்றும் இல்லை, இந்த இராச்சியத்தில் இப்படியெல்லாம் நடக்கும். இங்கே தீ போட்டால் அப்கே வெப்பம் வரும். அந்தப் பிராமணனைப் பார்த்தீர்களா? அந்த அரண்மனையில் உள்ள விளக்கைப் பார்த்து வெப்பம் எடுக்கிறார். அப்படி இருக்கிறபோது இங்கேயும் சமையல் நடக்கவேண்டும் தானே என்று சொன்னார்.

**சத்குரு ஜக்கி வாசுதேவ்**

# சிறுவர் இலக்கியங்களின் இன்றைய போக்கு 02

தற்காலத்தில் சிறுவர்களுக்கு ஆறுதலாக இருந்து வாசிக்கும் நேரங்கள் படிப்பு, மேலதிக கல்விநிலைய வகுப்புகள் போன்றவற்றால் குறைந்து கொண்டு போவது கவலையை அளிப்பினும் இன்று நவீனத்துவத்தை உள்ளடக்கியதாக சிறுவர் இலக்கியப் படைப்புகள் வெளிவருவதையே பலர் வரவேற்கின்றனர்.

புதிய வண்ணங்களில் வெளிவருகின்ற இறுவட்டுகள், கார்டூன்களைப் பெற்று வீடுகளிலும் பாடசாலைகளிலும் கணனி, தொலைக்காட்சிப் பெட்டிகளில் போட்டுக் காட்டப்படுகிறது. இயற்கைக் காட்சிகள், உயிரினங்கள், வனவிலங்குகளின் வாழ்க்கை, மொழி, கணித எண்ணக்கருத்துகளை மேம்படுத்தும் விளக்கங்களுடனான கதைகள், பாடல்கள், ஆக்கங்களை வெளிப்படுத்தும் படங்கள், பழைமை வாய்ந்த இடங்கள், கதை, நாடகம், ஆறுகள், மலைகள், கடல்கள், மீன்கள், பொம்மலாட்டங்கள் என்பவற்றை இரசிக்கக்கூடிய வகையில் கதை, பாடல், நாடகங்கள் மூலம் காட்டப்படுகிறது. வெளிநாடுகளிலிருந்து தாராளமாக நம் நாட்டிற்கு இறக்குமதி செய்யப்பட்டுள்ளன.

அதுமட்டுமன்றி தற்காலத்தில் பாடசாலை பாடத்திட்டத்தின் ஓர் அங்கமாக சிறுவர் இலக்கியங்கள் புத்தாக்கப் படைப்பிலக்கியங்களாக கதை, பாடல், நாடகம் போன்றவை உடனடியாகத் தயாரிக்கப்பட்டு அளிக்கை செய்யப்படுகின்றது. ஆசிரியரின் உதவியுடன் திருத்தியமைக்கப்பட்டு சில நிமிடங்களில் தயாரிக்கப்படுகின்றன.

**"கொழும்பில் நடைபெற்ற சர்வதேச தமிழ் எழுத்தாளர் மாநாட்டில் சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வுக்கட்டுரை"**

முற்காலத்தில் குருகுல கல்வி முறைமை, தாத்தா, பாட்டி, பெரியோர்களினால் செவி வழியாகவும் ஏட்டுக் கல்வி முறையிலும் பரப்பப்பட்டு வந்த இவ்விலக்கியங்கள் நடுக்காலத்தில் எழுத்துருப் பெற்றும் தற்காலத்தில் நவீன விஞ்ஞான தொழினுட்ப முறைக்குள் சென்று விருத்தியடைந்தும் மாற்றமடைந்தும் செல்கிறது இலக்கியப் போக்கு.

இவற்றில் அனுகூலங்களும் பிரதிகூலங்களும் காணப்படுகின்றன. குழந்தைகள் வாழும் சூழ்நிலை, பரம்பரையின் ஊடாகப் புதிய அனுபவங்களைப் பெற்றுக்கொண்ட நிலை மாறி கதை, பாடல், நடிப்பாக்கங்களில் பங்குபற்றாத் தன்மைகள் வாசிப்புத் திறனைக் குறைத்துள்ளதுடன் இடைவினை பெறாத்தன்மைகள் காணப்பட்ட போதிலும் தற்கால நடைமுறைக்கு ஏற்ப போர் அனர்த்தம், இடப்பெயர்வுகள், இயற்கை அனர்த்தங்கள், புலம்பெயர்வுகள் போன்ற காரணங்களால் தன்னம்பிக்கை, விடாமுயற்சி, சவாலை எதிர் நோக்கும் திறமை, பொறுமை, சமா தானம், அமைதி என்பனவற்றை அடிப்படையாகக் கொண்டு சிறுவர் இலக்கியங்கள் பரந்துபட்ட அளவில் பயன்பாட்டுத் தொடர்பு சாதனங்கள் மூலம் இயங்குநிலையில் நவீனத்துவப்படுத்தப்பட்டிருப்பதும் வரவேற்கத்தக்கது.

எதிர்காலத்தில் சிறுவர் இலக்கியங்களை மேலும் மெருகூட்டும் இணையத்தளம் அமைக்கப்படுவதும் பலர் பயன்பெறத்தக்க நல்ல விளைவுகளை ஏற்படுத்தும் என்பதும் திண்ணமாகும்.

**சந்திரமதி வேதநாயகம்**

(முற்றும்)

# போராளித் தளபதிகள் சித்திரவதை

# அதிரவைக்கும் அதிர்வு

ஈழமண்ணில் இனப்படுகொலை நடந்து இரண்டு ஆண்டுகள் ஆகியும் அந்த துயரத்தின் வலியும் ரணமும் இன்னும் நீங்கவில்லை!

போரில் கொல்லப்பட்டவர்களின் குடும்பத்தின் தாங்க 'முடியாத துன்பம் ஒருபுறம் என்றால்... படையினரால் கைது செய்யப்பட்டுக் காணாமல் போனவர்களுடைய குடும்பத்தினரின் மன உளைச்சலோ சொல்லில் அடக்கமுடியாத சோகம்!

இப்படி காணாமல் போனவர்





கேணல் ரமேஷ்

படையினரின் பிடியில்

களைப் பற்றிய தகவல்களைப் பன்னாட்டு மனித உரிமை அமைப்புகள் வெளியிட்டு வருகின்றன. அமெரிக்காவைத் தலைமையிடமாகக் கொண்டு இயங்கும் 'மனித உரிமை கண்காணிப்பகம்' எனும் அமைப்பு புதிய ஆதாரங்களுடன் அறிக்கை ஒன்றை கடந்த வாரம் வெளியிட்டுள்ளது.

ஈழப்போர் முடிந்த காலகட்டமான மே 16 முதல் 18வரை வட்டுவால் எனும் இடத்தில் வைத்துதான், புலிகள் பகுதியில் இருந்து வந்தவர்களை இராணுவம் பிடித்துச் சென்றது. அவர்களின் பெரும்பாலோரின் கதி என்ன என்பதே தெரியவில்லை! காணாமல் போனவர்களைப் பற்றிய தகவல்களை அறிய, சம்பந்தப்பட்டவர்களின் உறவினர்கள், நண்பர்களைத் தேடிக் கண்டுபிடித்து, அவர்கள் மூலமாக 'மனித உரிமை கண்காணிப்பகம்' ஆதாரங்களைத் திரட்டியிருக்கிறது!

அந்த அமைப்பின் ஆசிய பிராந்திய இயக்குநர் பிராட் ஆடம்ஸ் இது பற்றி அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார். அதன்படி ஃபிரான்சிஸ் ஜோசப் என்ற கத்தோலிக்கப் பாதிரியார் தலைமையில், கணிசமான விடுதலைப்புலிகள், வட்டுவால் பாலத்தின் தென்புறத்தில் படையிடம் சரண் அடைந்துள்ளனர். அவர்கள் அனைவரையும் ஒரு பேருந்தில் ஏற்றிச் சென்றதை போராளி ஒருவரின் மனைவி பார்த்துள்ளார். அதன்பின்னர் அந்தப் பெண்ணின் கணவர் உட்பட பேருந்தில் சென்ற யாரைப் பற்றியும் இதுவரை ஒரு தகவலும் இல்லை.

இதுபோன்ற பலரின் தேடல் சோகங்களைத் தெரிவித்துள்ள மனித உரிமைக் கண்காணிப்பகம், போராளித் தளபதி கேணல் ரமேஷ் தொடர்பான வீடியோ காட்சிகளையும் வெளியிட்டுள்ளது. விடுதலைப் புலிகளின் தீவிரப் பற்றாளர்கள் அதைப் பார்த்தால், ரொம்பவும் மனம் பதறிப் போவார்கள். பிரபாகரனுடன் முரண்பட்டு கருணா தப்பிச் சென்றபோது கிழக்கு மாகாணத்தின் தலைமைப் பொறுப்பில் இருந்தவர் கேணல் ரமேஷ். கருணாவைத் திருத்த முயன்று, முடியாமல் போகவும் பின்னர் பாதுகாப்பாக வன்னிக்கு வந்துசேர்ந்தவர். எதிரியையும் துரோகியையும் தொடர்ந்து கவனித்து வந்தவர். அப்படி இருந்தவர் பிரபாகரனின் கட்டளைப்படி காயம்பட்ட மக்களைக் காப்பாற்றுவதற்காக சரண் அடைந்தார்.

'மக்களோடு மக்களாகச் சென்றவரை இவர்தான் கேணல் ரமேஷ் என்பதை முன்னாள் போராளிகள் இருவர் மூலமே கண்டுபிடித்துள்ளனர்' என்று ஒரு சாட்சி கூறியதாகச் சொல்கிறது மனித உரிமை



சடலமாக நடேசன்



நடேசன்


கண்காணிப்பகம்.

ரமேஷையும் மேலும் மூவரையும் தனியாகப் பிரித்த படையினர், அருகில் இருந்த ஒரு குடிசைக்குத் தனியாக அழைத்துச் சென்றுள்ளனர். அங்கு ரமேஷிடம் கடுமையாக விசாரணை நடத்தியுள்ளனர். அந்தக் 'காண்காணிப்பகத்தின் வீடியோவில் இது தெளிவாக விரிகிறது.

மட்டக்களப்பு மாவட்டத்துக்கே தளபதியாக இருந்தவரை, ஓலைக்கொட்டகையின் கீழ் உட்காரவைத்து, விசாரணையைத் தொடங்குகிறார்கள். இயற்பெயர் என்ன, சொந்த ஊர் எது, திருமணம் ஆகிவிட்டதா, மனைவி, குழந்தைகள் பெயர் என்ன, புலிகள் இயக்கத்தில் சேர்ந்தது எப்போது, இயக்கப் பெயர் என்ன, இயக்கத்தில் என்ன பொறுப்பு, முதலில் பொறுப்புவகித்த பகுதி எது, கடைசியாகப் பொறுப்பு வகித்த பிரதேசம் எது... இப்படி அடுத்தடுத்து விடாமல் கேட்டுக்கொண்டே போகிறார். எதிர்ப்புறம் உள்ளவர், திடீரென 'மட்டக்களப்பு பிரதேசத்தின் படை அதிகாரிகளின் பெயர் தெரியுமா?' என கேள்வியாளர் கேட்க, பதில் அளிக்கத் தடுமாறுகிறார் ரமேஷ். அந்தக் காட்சி முடியும் தறுவாய் அது... எதிர்த்தரப்பில் நின்றவர் என்ன செய்தாரோ.. பயந்துபோன கோழிக்குஞ்சு போல "ஐ அண்டர்ஸ்டுட் சேர் அண்டர்ஸ்டுட் சேர்" என கேணல் ரமேஷ் சொல்வதுடன் காட்சி முடிபடைகிறது.

இன்னொரு வீடியோவில், சாதாரண உடையுடன் படுக்கையில் கிடத்தப்பட்டு இருக்கிறார் ரமேஷ். சில விநாடிகளில் காட்சி மாறுகிறது. சுற்றிலும் படையினர் உட்கார்ந்து இருக்க, அவர்களுக்கு நடுவில் இருக்கிறார் ரமேஷ். பின்னணியில் ஒரு டிராக்டர் ஓடும் சத்தம் கேட்கிறது. அங்கும் கேள்வி மேல் கேள்வி கேட்கிறார்கள். ரமேஷிடம் 'இன்று 22ஆம் திகதி' எனச் சொல்லும் அவர்கள், 'பிரபாகரனின் மனைவி எங்கே இருக்கிறார்.?' என்றும் கேட்கிறார்கள். (மே 17ஆம் திகதி சரண் அடைந்ததாக ரமேஷ் சொல்கிறார். 17ஆம் திகதிதான் பிரபாகரனையும் அவரது குடும்பத்தினரையும் கொன்றதாக இராணுவம் சொல்கிறது. ஆனால் 22ஆம் திகதி பிரபாகரனின் மனைவி எங்கே என்று கேட்கிறார்கள். அடுத்து ரமேஷின் முதுகில் உள்ள குண்டு காயத்தின் வடுவைக் காட்டி 'எப்போது எந்த சண்டையில் இந்தக் காயம் பட்டது?' எனக் கேட்க, '1988இல் இந்திய இராணுவக் காலத்தில் பட்டது' என்கிறார் ரமேஷ்.

இப்படி எல்லாம் ரமேஷ் கடுமையாக விசாரிக்கப்பட்டு, சித்திரவதை செய்யப்பட்டுக் கொல்லப்பட்டு இருக்கலாம் எனக் கூறப்படுகிறது. ஆனால், போரில்



புலித்தேவன்



ரமேஷ் கொல்லப்பட்டார் என்றே இராணுவ அதிகாரிகள் தொடர்ந்து சொல்லிவருகிறார்கள். முதல் வீடியோ டிசம்பர் மாதமும் அடுத்த வீடியோ கடந்த வாரமும் வெளியே வந்துள்ளன. டிசம்பர் மாதம் வெளியானதை 'போலி வீடியோ' என்று படை சொன்னது. அதே பதிலைதான் இப்போதும் சொல்கிறார்கள்.

இந்த நிலையில்தான், நடேசன், புலித்தேவன் இருவரும் சுட்டுப் பொசுக்கப்பட்டு சடலங்களாக் கிடக்கும் புகைப்படங்கள் வெளியாகியுள்ளன. ஐரோப்பாவைத் தளமாகக் கொண்ட 'அதிர்வு' இணையத்தளம் இந்தப் படங்களை வெளியிட்டுள்ளது. 'நடேசனுடன் சேர்ந்து சரண் அடைந்த அவரின் மனைவி, முதலில் கொலை செய்யப்பட்டுள்ளார். பின்னர் நினைத்துப் பார்க்க முடியாத அளவுக்கு நடேசனும் புலித்தேவனும் கட்டிவைத்துச் சித்திரவை செய்யப்பட்டுப் படுகொலை செய்யப்பட்டனர்' என்றும் சொல்கிறது 'அதிர்வு' தகவல். அதற்கு ஆதாரமாக, இருவரின்

**ஜூனியர் விகடன்**

வயிற்றுப் பகுதியிலும் கை மணிக்கட்டிலும் காயங்கள் இருப்பதைக் காட்டுகின்றனர்.

"நடேசன், புலித்தேவன் ஆகிய இருவரும் சரண் அடைவது குறித்து 18 மணி நேரத்துக்கு முன்பே ஐ.நாவுக்குத் தெரியும்" என்று ஐ.நா.வில் பணியாற்றிய அதிகாரி ஒருவர் சொன்னதாகத் தகவல் இப்போது கசிந்துள்ளது.

"வன்னியில் நடந்த இறுதிப் போரில் விடுதலைப் புலிகளின் அரசியல் பிரிவுப் பொறுப்பாளர் நடேசன், புலித்தேவன் உட்பட முக்கியஸ்தர்கள் சரணடைவது குறித்த தகவல்கள் 18 மணி நேரத்துக்கு முன்பாக ஐ.நா.வுக்குத் தெரியும். ஆனால் சரண் அடைந்தவர்களை இலங்கை இராணுவம் படுகொலை செய்துள்ளது. சரணடைபவர்களின் விபரங்களும் ஐ.நா.வுக்கு அறிவிக்கப்பட்டு இருந்தது. ஐக்கிய நாடுகள் சபை சார்பாக அவர்களை வரவேற்பதற்கு கொழும்பில் பணியாற்றிய ஐ.நா. அதிகாரிகள் வவுனியாவுக்குச் செல்லவும் திட்டமிட்டு இருந்தனர்.

அப்போது (2009 மே) கொழும்பில் பணியாற்றிய ஐ.நா. அதிகாரிகளில் பலரும் தற்போது பணியில் இருந்து விலகி உள்ளனர். அல்லது இலங்கையை விட்டு வெளியேறி உள்ளனர். சரணடைவது தொடர்பான மாயைகளை உருவாக்கி, விடுதலைப் புலிகளைக் கொலை செய்யவே கொழும்பும் கொழும்புக்கு ஆதரவான சில அதிகாரிகளும் முயற்சிகள் மேற்கொண்டார்கள்..." என்றும் ஐ.நா. தொடர்பான ஒருவர் கூறியதாக இணையங்களில் தகவல் பரவி உள்ளது.

இதுவரை 'நடேசன், புலித்தேவன் சுட்டுக்கொல்லப்பட்டது கட்டுக்கதை' என்று சொன்ன படைத்தரப்பும் அவர்களுக்கு "ஆமாம் சாமி" போட்டவர்களும் இந்தப் புகைப்படங்களைப் பார்த்தபின் என்ன சொல்வார்களோ தெரியவில்லை.அடுத்தடுத்து ஆதாரங்கள் வந்து கொண்டே இருக்கின்றன. ஆனால், குற்றவாளிகள் மீது விசாரணை கூடத் தொடங்கவில்லை. இன்னும்! என்ன உலகமோ?

இரா.தமிழ்க்கனல்

# லிபியாவில் கடாபியின் படைகள் கொத்துக் குண்டுகள் வீசி தாக்குதல்

## மனித உரிமை கண்காணிப்பு அமைப்பு குற்றச்சாட்டு

(டிரிபோலி)


லிபியாவின் மிஸ்ரட்டா நகரில் உள்ள குடியிருப்புக்கள் மீது கடாபி ஆதரவுப் படைகள் கொத்து வெடி குண்டுகளை வீசி வருவதாக நியூயோர்க்கில் இயங்கி வரும் மனித உரிமை கண்காணிப்பு அமைப்பு குற்றம் சாட்டியுள்ளது. எனினும் இத்தகவலை லிபிய அரசு மறுத்துள்ளது.

லிபியாவின் மிஸ்ரட்டா நகரம் ஒன்றுதான் எதிர்த்தரப்பின் கையில் உள்ள ஒரே மேற்குப் பகுதி நகரம். அங்கு கடந்த பல நாட்களாக கடாபி மற்றும் எதிர்த்தரப்பு படைகளுக்கிடையில் கடும் மோதல் நடந்து வருகிறது.

நகரின் எல். ஷவாடா என்ற பகுதியில் கொத்துக் குண்டுகள் வெடித்ததாக அமெரிக்காவின் நியூயோர்க்கை மையமாகக் கொண்டு செயற்படும் மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு சில புகைப்படங்களை வெளியிட்டுள்ளது.

இந்தப் புகைப்படங்களை ஆய்வு செய்த மனித உரிமை கண்காணிப்பு அமைப்பின் ஆய்வாளர்கள் சிலர் கூறுகையில்,

கொத்துக் குண்டுகளை வீசி அவை ஒன்றின் மீது மோதும் போது அதிலுள்ள பல குண்டுகள் கடும் வேகத்தில் பிரிந்து வெடித்துச் சிதறி மக்களைத் தாக்கும். அதேநேரத்தில் குண்டுகளில் இருந்து உலோகம் உருகிய நிலையில் வீசப்படும். அதன்மூலம் இரும்புத் துண்டுகள் மனித உடல்களில் ஊடுருவும் என்றனர்.



மிஸ்ரட்டா நகரில் கண்டெடுக்கப்பட்ட கொத்து வெடிகுண்டுகள்

போரின் போது கொத்துக்குண்டுகளைப் பயன்படுத்தக் கூடாது என்று அயர்லாந்து தலைநகர் டப்ளினில் 2008 இல் நடந்த மாநாட்டில் தீர்மானம் ஒன்று கொண்டு வரப்பட்டது. அதில் 108 நாடுகள் கையெழுத்திட்டுள்ளன. ஆனாலும் அமெரிக்கா, சீனா, இஸ்ரேல், ரஷ்யா மற்றும் லிபியா ஆகிய நாடுகள் கையெழுத்திடவில்லை.

இந்தக் கொத்துக் குண்டுகள் 2007 இல் ஸ்பெயினில் தயாரானவை என்று தகவல்கள் தெரிவிக்கின்றன. இதுபற்றி ஸ்பெயின் தரப்பில் பதில் எதுவும் அளிக்கப்படவில்லை. அதேபோல் ரஷ்யத் தயாரிப்பு ரொக்கெட்டுகள் மூலமும் மிஸ்ரட்டா நகரின் மீது கடாபி



படைகள் தாக்குதல் நடத்தி வருகின்றன.

இந்நிலையில் லிபியா அரச செய்தித் தொடர்பாளர் மூசா இப்ராகிம் அளித்த பேட்டியில்,

லிபியப் படைகள் கொத்துக் குண்டுகளைப் பயன்படுத்தவில்லை. முடிந்தால் அவர்கள் அதை நிரூபிக்கட்டும் என்று நான் சவால் விடுகிறேன் என்றார்.

மிஸ்ரட்டா நகரில் நடத்தப்படும் தாக்குதல்களைப் பார்க்கும் போது அங்கு மிக அதிகளவிலான மக்கள் பலியாகியிருக்கக் கூடும் என்று தெரிகிறது. ஆனால், இதுவரை எவ்வளவு பேர் பலியாகினர் என்பது பற்றி தகவல்கள் எதுவும் வெளிவரவில்லை. (ஸ்ரீ-2)




## நைஜீரியா ஜனாதிபதியாக மீண்டும் ஜோனாதன் தெரிவு

நைஜீரியா ஜனாதிபதி தேர்தலில் தற்போதைய ஜனாதிபதி குட்லக்ஜோனாதன் மீண்டும் வெற்றி பெற்றுள்ளார். ஆபிரிக்க நாடான நைஜீரியாவில் ஜனாதிபதி தேர்தல் நடந்து முடிந்தது. இதில் தற்போதைய ஜனாதிபதியாக உள்ள குட்லக்ஜோனாதன் வெற்றி பெற்று மீண்டும் ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டுள்ளார். இவருக்கு 60.02 சதவீத வாக்குகள் கிடைத்தன.

இவரை எதிர்த்து போட்டியிட்ட காங்கிரஸ் முற்போக்கு முன்னணி கட்சியைச் சேர்ந்த முகமது பகூரியா(58) தோல்வியடைந்தார். (ஸ்ரீ)

# ஏமன் நாட்டு ஜனாதிபதி அலி அப்துல்லா முப்பது நாட்களுக்குள் பதவி விலகுவார்

## அமெரிக்காவின் சமரச திட்டம்

(சனா)

ஏமன் நாட்டின் ஜனாதிபதி அலி அப்துல்லா சலேக்கு எதிராக மக்கள் தொடர்ந்து போராட்டம் நடத்தி வருகின்றனர். இந்தப் பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்காக அமெரிக்கா,ஐரோப்பிய ஒன்றியத்துடன் சேர்ந்து ஒரு சமரச திட்டம் தயாரித்துள்ளது. ஜனாதிபதி தன் பதவியை தனக்கு விருப்பமான ஒருவரிடம் ஒப்படைத்து விட்டு 30 நாட்களுக்குள் பதவி விலக வேண்டும் என்பது அந்த சமரச திட்டத்தின் முக்கிய அம்சம் ஆகும்.

ஏமன் நாட்டில் பல ஆண்டுகளாக ஜனாதிபதியாக இருந்தவர் அலி அப்துல்லா சலே. இவர் ஜனாதிபதியாக நீடிப்பதற்கு அந்த நாட்டு இளைஞர்கள் எதிர்ப்பு தெரிவித்து போராட்டம் நடத்தி வருகிறார்கள். கடந்த பெப்ரவரி மாத மத்தியில் இருந்து இந்த போராட்டம் நடந்து வருகிறது.

ஆனால் ஜனாதிபதி சலே ஆண்டு இறுதி வரை பதவியில் நீடிப்பேன் என்றும் அதற்கு பின்னர் தான் பதவி விலகுவேன் என்றும் கூறி வருகிறார். இந்த நிலையில் இந்த பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்காக அமெரிக்கா ஐரோப்பிய ஒன்றிய நாடுகளுடன் சேர்ந்து ஒரு சமரச திட்டத்தை தயாரித்து உள்ளது. இந்த சமரச திட்டத்தை அமெரிக்க, ஐரோப்பிய ஒன்றியம் ஆகியவற்றின் தூதரங்கள் தாக்கல் செய்தன. இந்த திட்டத்தில் கூறப்பட்டிருப்பதாவது,

துணை ஜனாதிபதியாக ஒருவரை சலே நியமிக்க வேண்டும். அவரிடம் ஆட்சியை ஒப்படைத்து விட்டு சலே 30 நாட்களுக்குள் பதவி விலக வேண்டும். சலே தன் மகன்களுடன், தன் சகோதரர் மகன்களுடன் நாட்டை விட்டு வெளியேற வேண்டும். அவர் மீது எந்த விதமான வழக்கும் தொடரப்பட மாட்டாது என்ற உறுதி மொழியை அவருக்கு புதிய ஆட்சியாளர்கள் கொடுக்க வேண்டும். இவ்வாறு அந்த சமரச திட்டத்தில் கூறப்பட்டுள்ளது.



இதற்கிடையில் ஏமன் நாட்டு பத்திரிகை ஒன்று வெளியிட்டுள்ள செய்தியில்,

சலே தனக்கு பின் யார் ஆட்சிக்கு வர வேண்டும் என்பதை முடிவு செய்து விட்டார் என்று தெரிவித்துள்ளது.

பிரதமர் அலி முஜாவர் அல்லது துணை பிரதமர் ரஷாத் அல் அலிமி ஆகியோரில் ஒருவரை அவர் துணை ஜனாதிபதியாக நியமிப்பார் என்றும் அதன் பின்னர் 30 நாட்களுக்குள் அவர் ஆட்சியை அவரிடம் ஒப்படைத்து விட்டு அவர் பதவி விலகுவார் என்றும் அந்தப் பத்திரிகை செய்தி வெளியிட்டு உள்ளது.

(ஸ்ரீ-2)

# முபாரக்கின் கட்சி கலைப்பு; எகிப்து நீதிமன்றம் உத்தரவு

(கெய்ரோ)

எகிப்தின் முன்னாள் ஜனாதிபதி ஹோஸ்னி முபாரக்கின் தேசிய ஜனநாயகக் கட்சி கலைக்கப்பட்டதாக நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

கட்சியின் சொத்துக்களை அரசிடம் ஒப்படைக்க வேண்டும் என்று உத்தரவிடப்பட்டுள்ளது. எகிப்தில் ஜனாதிபதி ஹோஸ்னி முபாரக்கின் ஆட்சி நடைபெற்று வந்தது.

இந்த நிலையில் முபாரக்கின் ஆட்சியை எதிர்த்து மக்கள் அமைதிப் புரட்சியை நடத்தினர். 18 நாட்கள் நடந்து இந்த அமைதிப் புரட்சியைத் தொடர்ந்து ஹோஸ்னி முபாரக் பதவிவிலகினார்.

இந்த நிலையில் அவரை சட்டத்துறை அதிகாரிகள் கைது செய்தனர். அவருடைய இரு மகன்களான அலா முபாரக் , கமால் முபாரக் ஆகியோரும் கைது செய்யப்பட்டனர். உடல் நலக்குறைவால் அவதிப்பட்டு வரும் முபாரக்கை சட்டத்துறை அதிகாரிகள் வைத்தியசாலையில் அனுமதித்துள்ளனர்.

இந்த நிலையில் முபாரக்கின் தேசிய ஜனநாயகக் கட்சி கலைக்கப்பட்டதாக நீதிமன்றம் அறிவித்துள்ளது. அரசுக்கு எதிராக போராட்டம் நடத்தி வந்த எகிப்து மக்களின் முயற்சிக்கு கிடைத்த வெற்றி இது என்று அவர்கள் கொண்டாடி வருகின்றனர். இதற்கான உத்தரவை எகிப்திலுள்ள உச்ச நீதிமன்றம் பிறப்பித்துள்ளது. மேலும் கட்சிக்குத் சொந்தமான பணம், அதன் தலைமையகம் , கட்சிக்குச் சொந்தமான கட்டடங்கள் அனைத்தையும் அரசிடம் ஒப்படைக்க வேண்டும் என்றும் நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

இதன்மூலம் அமைதிப் புரட்சி நடத்திய எதிர்ப்பாளர்களின் கோரிக்கை நிறைவேறியுள்ளது. இத்தகவலை அல்ஜஸீரா தொலைக்காட்சி தெரிவித்துள்ளது. இந்தக் கட்சியைச் சேர்ந்த மூத்த தலைவர்கள் அனைவரும் ஊழல் வழக்குகள் தொடர்பாக விசாரிக்கப்பட்டு வருதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஸ்ரீ-2)

# நிபுணர் குழுவின் அறிக்கைக்கு எதிராக குரலெழுப்ப அனைவரும் அணிதிரளவேண்டும்

## சஜித் பிரேமதாஸ எம்.பி. தெரிவிப்பு



(கொழும்பு)

ஐக்கிய நாடுகளின் நிபுணர் குழு அறிக்கைக்கு எதிராக குரல் கொடுக்க அனைவரும் அணிதிரள வேண்டுமென ஐக்கிய தேசியக் கட்சியின் இணைப்பிரதித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

இலங்கை படையினர் சர்வதேச நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படுவதனை தடுத்து நிறுத்த அனைவரும் இணைந்து குரல் கொடுக்க வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார். ஐக்கிய நாடுகளின் நிபுணர் குழு அறிக்கை இலங்கைப் படைவீரர்களுக்கு எதிரான வகையில் காணப்படுவதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

சிறையில் தண்டனை அனுபவித்து வரும் ஜனநாயகத் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சரத் பொன்சேகாவை விடுதலை செய்ய வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார்.

சர்வதேச அழுத்தங்களுக்கு மத்தியில் இராணுவத்தினர் மீது அரசாங்கம் காட்டி வரும் ஆதரவினை இந்த நடவடிக்கை மூலம் வெளிப்படுத்த முடியும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஒருவரை ஒருவர் குற்றம் சுமத்திக் கொள்வதற்கு இது உரிய தருணமல்ல எனவும் அரசாங்கமும் எதிர்க்கட்சிகளும் வெளிநாட்டு அழுத்தங்களுக்கு எதிராக இணைந்து செயற்பட வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார்.

நிபுணர் குழு தொடர்பில் அரசாங்கம் குறுகிய கால அடிப்படையிலான வெளியுறவுக் கொள்கைகளை பின்பற்றியதாகவும் அதன் விளைவினை இன்று அனுபவிக்க நேரிட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

ஐக்கிய நாடுகளின் நிபுணர் குழு தொடர்பான அரசாங்கத்தின் நடவடிக்கைகள் கேள்விக்குறியாக அமைந்துள்ளதென அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஐக்கிய நாடுகளின் நிபுணர் குழு அமைப்பதனை தடுத்து நிறுத்துவதற்கு அணி சேரா நாடுகளின் ஒத்துழைப்பைப் பெற்றுக் கொள்ள அரசாங்கம் தவறியதாக அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

அரசாங்கத் தரப்பினரை சந்திக்க இடமளிக்கப்படமாட்டாது என பகிரங்கமாக அறிவித்து இரகசியமான முறையில் நிபுணர் குழுவிற்கும் அரசாங்கப் பிரதிநிதிகளுக்கும் இடையில் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

அரசியல் நோக்கங்களுக்காக படையினரை எந்தச் சந்தப்பத்திலும் தாம் காட்டிக் கொடுத்ததில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். இந்தக் கருத்துக்கள் தமது நிலைப்பாடு எனவும் கட்சியின் நிலைப்பாடாக கருத முடியாது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் மே மாதம் 3 ஆம் திகதி நடை பெறவுள்ள செயற்குழுக் கூட்டத்தில் இந்த விடயம் பற்றி பேசப்படலாம் என அவர் குறிப்பிட்டுள்ளார். (ஸ்ரீ-2)

# நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் முல்லை. மாவட்டத்திற்கு விஜயம்

(கொழும்பு)

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் புதல்வரும் நாடாளுமன்ற உறுப்பினருமான நாமல் ராஜபக்ஷ எதிர்வரும் 23 ஆம் திகதி முல்லைத்தீவு மாவட்டத்திற்கான விஜயமொன்றை மேற்கொள்ளவுள்ளார்.

தமிழ்,சிங்கள புத்தாண்டையொட்டி முல்லைத்தீவு மாவட்டத்தில் கலாசார போட்டி மற்றும் மாபெரும் இசை நிகழ்ச்சி நடைபெறவுள்ளது. இவற்றில் கலந்து கொள்ளும் முகமாகவே நாமல் ராஜபக்ஷ முல்லைத்தீவு மாவட்டத்திற்கான விஜயத்தை மேற்கொள்ளவுள்ளதாக மாவட்ட அரசாங்க அதிபர் ஏ.பத்தி நாதன் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷவின் ஏற்பாட்டில் நடைபெறவுள்ள மேற்படி நிகழ்வுகள் 23 ஆம் திகதி காலை 7.30 மணி முதல் மதியம் 1.30 மணி வரையும் இரவு 7.00 மணி முதல் நள்ளிரவு 12.00 மணிவரையும் நடைபெறவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை, முறிகண்டி இந்து மகா வித்தியாலயத்தின் மாடிக்கட்டடத்திற்கான அடிக்கல்லையும் அன்றைய தினம் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ நாட்டி வைக்கவுள்ளார்.

இதில் மீள்குடியேற்ற அமைச்சர் குணரத்ன வீரக்கோன் கலந்து கொள்ளவுள்ளதாகவும் அரசாங்க அதிபர் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

# இலங்கையின் அபிவிருத்தி குறித்து

## உலக வங்கி அவதானிப்பு

இலங்கையில் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற அபிவிருத்தி நடவடிக்கைகளை உலக வங்கி அவதானித்து வருவதாக அதன் முகாமைப் பணிப்பாளர் நகோசி மகன்ஜோ இவேலா தெரிவித்துள்ளார்.

சர்வதேச முதலீடுகள் தொடர்பான சிரேஷ்ட அமைச்சர் சரத் அமுனுகமவை வோஷிங்டனில் வைத்து சந்தித்த போது அவர் இதனை தெரிவித்துள்ளார்.

இலங்கையின் அபிவிருத்தி செயற்பாடுகள் குறித்த விடயங்களை ஏனைய நாடுகளுடன் பகிர்ந்து கொள்ள வேண்டும் எனவும் இலங்கையின் துரித அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு உலக வங்கியின் ஒத்துழைப்பு கிடைக்கும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, வோஷிங்டன்சென்றுள்ள சிரேஷ்ட அமைச்சர் சரத் அமுனுகம சீனாவின் நிதி அமைச்சரை சந்தித்து உரையாடியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (ஸ்ரீ-2)


யாழ்ப்பாணம் மாவட்டக் கூட்டுறவுச் சபை (வ-து)

கேள்விக் கோரல்கள்

யாழ்ப்பாணம் மாவட்டக் கூட்டுறவுச் சபை பின்வரும் பொருட்களுக்கான கேள்வி கோரல்களைக் கோருகின்றது.

1. பழைய அச்சக இயந்திரங்கள்
2. இரும்பு உதிரிப்பாகங்கள்
3. பழுதடைந்த மரத்தளபாடங்கள்

கேள்விப் பத்திரத்திற்கான மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா 50/- செலுத்தி இவற்றுக்கான விபரங்களையும், விண்ணப்பப் படிவத்தையும் சபை அலுவலக நேரத்தில் பெற்று 05.05.2011ற்கு முன்னதாக விண்ணப்பிக்கவும்.

தங்களிற்கு வசதியான நேரத்தை முன்னரே அறிவித்து பொருட்களை களஞ்சியத்தில் பார்வையிடலாம்.

செயலாளர்,
யாழ்ப்பாணம் மாவட்டக் கூட்டுறவுச் சபை,
வீரசிங்கம் கட்டடத் தொகுதி 2ஆம் மாடி,
இல.12, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.

(சி-3018)



கடின சேவையால் உயர்ந்தோனுக்கு
மகத்தான பணிதொடர வாழ்த்துகிறேன்

மும்மொழி ஆற்றலும், கடின உழைப்பும், சரியான சேவையை தேவையறிந்து தமது அன்பான சிரிப்பால் உதவி செய்யும் கல்விப்புல வித்தகர்

உயர் திரு.வே.தி.செல்வரத்தினம்



அவர்கள் (விஞ்ஞான ஆசிரியராக, அதிபராக, வலயக்கல்விப் பணிப்பாளராகச் சேவையாற்றி) கல்வித்துறையின் சிகரமாம் வடமாகாண கல்வித் துறையின் *பிரதிச் செயலாளராக* 18.04.2011 முதல் பதவியேற்றிருப்பதை அறிந்து உவகை கொள்வதோடு பல்லாண்டு வாழ்ந்து கல்விப் பணி தொடர வாழ்த்துகின்றேன்.

குகன் மாஸ்டர்,
இடைக்காடு ஆவரங்கால்.

(4618)


# மின்னல் தாக்குதல்களிலிருந்து பாதுகாத்துக் கொள்ள கோரிக்கை

(கொழும்பு)

நாட்டின் சகல பாகங்களிலும் மழையுடன் கூடிய காலநிலை நிலவும் என வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது. மழையுடன் கூடிய காலநிலையின் போது ஏற்படும் மின்னல் தாக்கத்திலிருந்து தம்மை பாதுகாத்துக் கொள்ளுமாறு ,வளிமண்டலவியல் திணைக்களத்தின் அதிகாரி சமிந்த டி சில்வா கேட்டுக் கொண்டுள்ளார்.

தம்புள்ள பிரதேசத்தில் நேற்று முன்தினம் பெய்த கடும் மழை காரணமாக பொருளாதார மத்திய நிலையம் மற்றும் தம்புள்ளை வைத்தியசாலை ஆகியவற்றில் வெள்ள நீர் புகுந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன் தம்புள்ளை - மாத்தளை மற்றும் கொழும்பு- குருநாகல் ஆகிய வீதிகளில் வெள்ளம் காரணமாக போக்குவரத்து நடவடிக்கைகளுக்கு தடை ஏற்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (ஸ்ரீ-2)

## க.பொ.த(சா/த)பெறுபேறு கிடைக்காத மாணவர்களுக்கு

(யாழ்ப்பாணம்)

க.பொ.த (சா/த) 2010 பெறுபேறு இதுவரை கிடைக்கப்பெறாத யாழ்ப்பாணம், தென்மராட்சி, தீவகக் கல்வி வலயங்களைச் சேர்ந்த பாடசாலை மற்றும் தனிப்பட்ட பரீட்சாத்திகளது அடையாளத்தை உறுதிப்படுத்தல் தொடர்பான விசாரணை அமர்வு பரீட்சைத் திணைக்கள அலுவலர்களால் எதிர்வரும் 29 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 8.30 மணிக்கு யா/இந்துமகளிர்கல்லூரி இடம் பெறவுள்ளது.

மேற்படி விடயம் தொடர்பான தனிப்பட்ட கடிதங்கள் பரீட்சாத்திகளிற்கு பரீட்சைத் திணைக்களத்தினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

எனவே கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்களுடன் சமூகமளிக்குமாறு யாழ்.வலய கல்விப் பணிப்பாளர் திருமதி. அ.வேதநாயகம் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-2)



பருத்தித்துறை ஸ்ரீ இராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமத்தினால் 8 ஆம் வாய்க்கால் உருத்திரபுரத்தில் அருட் சகோதரிகளால் நிர்வகிக்கப்படும் சிறுவர் இல்லத்திற்கு ஒரு மோட்டார் சைக்கிள் வழங்கப்பட்டுள்ளதைப் படத்தில் காணலாம்.

# கப்பம் கோரல் சம்பவங்களுக்கு அரசே பொறுப்புக் கூற வேண்டும்

## கரு ஜயசூரிய எம்.பி.தெரிவிப்பு



(கொழும்பு)

இலங்கையில் கப்பம் குழுக்கள் கோலோச்ச அரச ஆதரவே காரணம் என்பதாக ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் கரு ஜயசூரிய குற்றம்சாட்டியுள்ளார்.

இலங்கையில் நடைபெறும் கப்பம் கோரல் சம்பவங்களில் அமைச்சர்களின் ஆதரவு பெற்ற பாதாள உலகுக்கும் பல்களின் உறுப்பினர்களும் சட்டத்தையும் ஒழுங்கையும் பாதுகாக்க வேண்டிய பொலிஸாரும் இணைந்து கப்பம் கோரல் சம்பவங்களில் தொடர்புபட்டிருப்பதற்கு அவர்களுக்கு வழங்கப்படும் அரச ஆதரவே காரணம் என்று அவர் சுட்டிக்காட்டுகின்றார்.

இலங்கையில் கோலோச்சியுள்ள கப்பம் கோரல் சம்பவங்கள் தொடர்பாக ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித்தலைவர் கரு ஜயசூரிய விடுத்துள்ள செய்திக்குறிப்பிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அந்த வகையில் இலங்கையில் நடைபெறும் கப்பம் கோரல் சம்பவங்களுக்கு முற்றுமுழுதாக மஹிந்த ராஜபக்ஷவின் அரசாங்கமே பொறுப்புக் கூற வேண்டும். அதற்கான ஆதாரங்கள் இப்போது வெளிவரத் தொடங்கியிருக்கின்றன.

அண்மைக்காலமாக வெளிவரத் தொடங்கியிருக்கும் மீன்சந்தைக் கப்பம் கோரல்கள் கிராண்ட்பாஸ் கப்பம் கோரல் சம்பவம் என்பன அதற்கான சிறந்த எடுத்துக்காட்டுகளாகும் அவற்றில் சம்பந்தப்பட்டிருப்பவர்கள் அரசாங்கத்தின் ஆசியைப் பெற்ற குண்டர்கள் என்பதை முழு நாடுமே அறியும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ஸ்ரீ-2)

# அரசியல் அபிலாசைகளை நிறைவேற்ற ஐக்கிய நாடுகள் சபை முயற்சிக்கின்றது

## ஜே.வி.பி.தெரிவிப்பு

(கொழும்பு)

பல்வேறு நாடுகளின் மனித உரிமை பிரச்சினைகளை தீர்ப்பதை விட அரசியல் அபிலாஷைகளை நிறைவேற்றிக் கொள்ள ஐ.நா. முயற்சிப்பதாக ஜே.வி.பி தெரிவித்துள்ளது.

அதேவேளை ஐ.நா. செயலாளர் நாயகம் இலங்கை விவகாரத்தில் தலையிடுவதற்கு இலங்கை அரசாங்கம் வழியமைத்துள்ளதாகவும் ஜே.வி.பி.குற்றம் சுமத்தியுள்ளது.

யுத்தம் முடிவுற்ற பின்னர் ஜனநாயகத்தையும் மனித உரிமைகளையும் உறுதிப்படுத்துவதற்கு அரசாங்கம் தவறியுள்ளதாகவும் ராஜதந்திரரீதியிலும் அரசாங்கம் தோல்வியடைந்துள்ளதாகவும் அறிக்கையொன்றில் ஜே.வி.பி. தெரிவித்துள்ளது.

அதேவேளை வடக்கில் முழுமையான சிவில் நிர்வாகத்தை ஏற்படுத்துவதற்கு தவறியுள்ள அரசாங்கம் எதிரணியினர் மீது உத்தியோகபூர்வமற்ற வகையில் அடக்குமுறையை மேற்கொண்டு வருவதாகவும் அக்கட்சி விமர்சித்துள்ளது.(ஸ்ரீ-2)


# வெண்குஷ்டத்தை குணமாக்குவதில் முக்கிய பங்காற்றும் அத்திப்பழம்

## மருத்துவ ஆய்வில் தகவல்


அத்திப்பழம் வெண்குஷ்டத்தை குணமாக்குவதில் முக்கிய பங்கு வகிப்பது மருத்துவ ஆய்வில் தெரிய வந்துள்ளது. அத்திப்பழத்தை ஆராய்ச்சி செய்ததில் புரதம், சீனிச்சத்து, கல்சியம், பொஸ்பரஸ் மற்றும் இரும்புச்சத்து ஆகியவை அதிக அளவில் இருப்பது தெரியவந்துள்ளது. மற்ற பழங்களைவிட இதில் இந்த சத்துக்கள் 4 மடங்கு அதிகமாக இருப்பதாகவும் ஆய்வில் கூறியுள்ளனர். இதுதவிர விற்றமின் ஏ, விற்றமின் சி அதிக அளவில் இருப்பதாக கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

சீமை அத்திப்பழம் வெண்குஷ்ட நோயைக் குணப்படுத்துவதில் முக்கிய பங்கு வகிப்பதாக மருத்துவ நிபுணர்கள் கூறியுள்ளனர். அரை கிராம் காட்டு அத்திப் பழத்தை தினசரி ஒரு வேளை சாப்பிட்டு வந்தால் வெண் புள்ளிகள், வெண்குஷ்டம், தோலின் நிறமாற்றம் ஆகியவை குணமாகும் எனவும் நிரூபிக்கப்பட்டுள்ளது. மேலும் அதை தூளாக்கி பன்னீரில் கலந்து வெண்புள்ளிகள் மீது பூசலாம்.

பொதுவாக அத்திபழம் உணவை விரைவில் ஜீரணிக்கச் செய்து சுறுசுறுப்பைத் தருகிறது. மலச்சிக்கலைப் போக்கும். மேலும் இது கரும் பித்தத்தை வியர்வை மூலம் வெளியேற்ற ஈரல் நுரையீரலிலுள்ள தடுப்புக்களையும் நீக்குகிறது. கால் விரல்களில் உண்டாகும் ஒருவித நோயையும் வராமல் அத்திப்பழம் தடுக்கும் ஆற்றல் கொண்டது. வாய் நாற்றம் நீங்குவதுடன் தலை முடியும் நீளமாக வளரும் இரத்த உற்பத்தி அதிகரிக்கும். போதைப் பழக்கம் மற்றும்



இதர வியாதிகளால் ஏற்படும் கல்லீரல் வீக்கத்தை குணமாக்கும். (ஸ்ரீ-2)



நுவரெலியா நகரில் வசந்தகால கொண்டாட்டங்கள் சிறப்பாக நடைபெற்று வருகின்றன. சுற்றுலாப் பயணிகளை கவரும் விதத்தில் சீ பிளேன் சேவையும் இங்கு நடாத்தப்படுகின்றது. 20 நிமிடங்கள் வானத்தில் பறந்து நுவரெலியா நகரின் அழகினை ரசிப்பதற்கு இந்த சீ பிளேன் பயன்படுத்தப்படுகிறது. சிறுவர்கள் முதல் பெரியவர்கள் வரை இந்த சீ பிளேன் விநோதத்தை ரசிக்கின்றமை சிறப்பானதாகும். நுவரெலியா கிறகரி ஏரியில் சீ பிளேன் இறக்கப்படுவதை படத்தில் காண லாம்.


### யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை

### வெளிவாரிப்பட்டப் பதிவுகள் மற்றும் பரீட்சைகள் அலகு

## வெளிவாரிப் பரீட்சைகள் -2009

### பொது மற்றும் சிறப்புக்கலைமாணித் தேர்வு பகுதி-II-2008

### (வெளிவாரி)

மேற்படி பரீட்சையை 16.05.2011 (திங்கட்கிழமை) தொடக்கம் 31.05.2011 (செவ்வாய்க்கிழமை) வரை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலும், வவுனியா வளாகத்திலும் நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

பரீட்சை தொடர்பான நேர அட்டவணைகளையும், பரீட்சை அனுமதி அட்டைகளையும் 10.05.2011 (செவ்வாய்க்கிழமை) தொடக்கம் வெளிவாரிப் பட்டப் பதிவுகள் மற்றும் பரீட்சைகள் அலகிலும், வவுனியா வளாகத்திலும் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

மேலதிக விபரங்களுக்கு 021-222-3612 என்ற தொலைபேசி எண்ணுடன் தொடர்பு கொள்ளவும்.

பதிவாளர்
18.05.2011 (சி- 3000)


# 1800 மில்லியன் செலவில் புத்தளம் பகுதிக்கு குடிநீர்

## ஆசிய அபிவிருத்தி வங்கி நிதியுதவி

(கொழும்பு)

புத்தளம் நகர் மற்றும் அதனைச் சார்ந்த பிரதேசத்துக்கு ஆயிரத்து 800 மில்லியன் ரூபா செலவில் குடிநீர் விநியோகம் மேற்கொள்ளப் படவுள்ளது.

இதன் மூலம் அப்பிரதேசத்தில் வசிக்கின்ற சுமார் 25 ஆயிரம் குடும்பங்களுக்கு சுத்தமான குடிநீர் கிட்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஏற்பாட்டில் ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியுதவியுடன் செயற்படுத்தப்படவிருக்கும் இந்த குடிநீர் வழங்கல் திட்டத்தின் நிர்மாண வேலைகள் அடுத்துவரும் மூன்று வருடங்களில் பூர்த்தி செய்யப்படவுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் புத்தளத்திலிருந்து 30 கிலோ மீற்றர்களுக்கு அப்பாலுள்ள கலா ஓயாவின் நீர் சுத்திகரிக்கப்பட்டு குடிநீராக விநியோகிக்கப்படும். (ஸ்ரீ-2)

# பரந்தன் பிரதான வீதியிலிருந்து பூநகரி வரை மின்விநியோகம்

வடக்கின் வசந்தம் வேலைத் திட்டத்தின் கீழ் பரந்தன் பிரதான வீதியில் இருந்து பூநகரி வரையான பகுதி குடியிருப்பாளர்களுக்கான மின்விநியோகம் வழங்குவதற்கான சகல வேலைத்திட்டங்களும் பூர்த்தியடைந்துள்ளது.

இம் மின் விநியோகப்பணி பூர்த்தியடைந்ததைத் தொடர்ந்து புத்தாண்டு தினத்திலிருந்து இப்பகுதிக்கு மின்சாரம் வழங்கப்பட்டு வருகின்றது.

ஆயினும் தற்போது பூநகரி உள்ள அரச அலு வலகங்கள், பொலிஸ் நிலையம் மற்றும் இராணுவமுகாம் என்ப ன வற்றுக்கு மின்சாரம் வழங்கப்படவுள்ளன.

மின்சார விநியோகம் வழங்கப்படுவதற்காக பரந்தனில் மின்சார நிலையம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

எனவே, பிரதான வீதிக்கு அருகில் இருக்கும் குடியிருப்பாளர்களில் மின்சாரம் பெற விரும்பு வோர் இவ் அலு வலகத்துடன் தொடர்பு கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஸ்ரீ-4-84)


# மனமகிழ்ந்து வாழ்த்துகிறோம்

யாழ். வலயத்தின் கல்விப் பணிப்பாளராகவும் யாழ். மாவட்ட மேலதிக மாகாண கல்விப் பணிப்பாளராகவும் அரும்பணியாற்றி இன்று வடமாகாண கல்வி அமைச்சின் பிரதிச் செயலாளராகப் பதவி உயர்வு பெற்றிருக்கும் எமது அன்புக்கும் பெருமதிப்புக்குமுரிய



**உயர் திரு.வே.தி.செல்வரத்தினம்**

அவர்களை மனம் மகிழ்ந்து வாழ்த்துகிறோம்.

கோட்டக் கல்விப் பணிப்பாளரும்,
அதிபர் சங்கமும்,
கோப்பாய் கோட்டம்.

(சி-2998)

> அறிவினால் தவிர்க்க முடியாத ஒரு செயல் தாமதத்தால் நல்ல பலனை அளிக்கும் விதத்தில் முடிகின்றது. – செனேக்கா

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

# ஐ.நாவைச் சிக்கென பற்றிக் கொள்ளுங்கள்

திக்கற்றவனுக்குத் தெய்வமே துணை என்பார்கள். தெய்வம் நேரில் தோன்றி, மகனே! என்ன வேண்டும் என்று கேட்கமாட்டா.

இறைவன் வழிகாட்டுவான். அந்த வழியைப் பின்பற்ற வேண்டும் என்பதே அந்தப் பழமொழியின் முடிபு.

அதன் பிரகாரம் ஈழத்தமிழர்களாகிய நாமும் திக்கற்றவர்களே! இந்தியா பாதுகாக்கும்-தமிழகம் விடாது என்றெல்லாம் நினைத்து நம்பி எல்லாம் இழந்தாயிற்று.

எங்களுக்கு உதவ எவருமே இல்லை என்ற கையறு நிலையில், இப்போது ஒரு வழி பிறந்திருக்கின்றது.

இந்த வழி பிறப்பதற்கு உள்ளூர்த் தமிழ் அரசியல் தலைமைகள் காரணமன்று. மாறாக, சர்வதேச மனித உரிமை அமைப்புகள், மன்னிப்புச் சபை, சனல் 4, விக்கிலீக்ஸ் மற்றும் சர்வதேச ஊடகங்கள், புலம்பெயர் தமிழ் அமைப்புகள் என்பவற்றின் பகீரதப் பிரயத்தனம் என்பனவே ஐ.நா. சபையின் தலையீட்டுக்குக் காரணம் எனலாம்.

போர் நடந்து முடிந்த கையோடு ஐ.நா.செயலாளர் நாயகம் பான் கீ மூன் இலங்கைக்கு வந்திருந்தார்.

உலங்கு வானூர்தியில், போர் நடந்த வன்னியை பார்வையிட்டார். வன்னிப் பெரு நிலப்பரப்பில், ஏற்பட்ட அழிவுகளை போரை நடத்திய அரசின் உலங்கு வானூர்தியில் சென்று அவர்கள் காட்டிய இடத்தை பார்வையிட்ட ஐ.நா. செயலாளர் போரின் இறுதிக் கால வடுக்களை அப்படியே ஜீரணிப்புச் செய்யத் தலைப்பட்டார்.

பல சந்தர்ப்பங்களில், பான் கீ மூன், விஜய் நம்பியார் போன்றவர்கள் ஈழத்தமிழர்களுக்கு பாதகமாக நடந்து கொண்டனர்.

இருந்தும் சர்வதேச ஊடகங்கள் தங்கள் திறத்தை காட்டியதால்,ஐ.நா. செயலாளர் நாயகம் நடுங்கிப் போனார்.

இனியும் வன்னிப் போர் வடுக்களை மறைக்க-மறுக்க முற்படுவது தனது பதவிக்கு ஆபத்தானதென்ற நிலையிலேயே,ஐ.நா. செயலாளர் நாயகம் ஆலோசனைக் குழுவை நியமித்தார்.

அந்த ஆலோசனைக் குழு தனது அறிக்கையை வெளியிட்டுள்ளது. அந்த அறிக்கையில் அரசும், விடுதலைப்புலிகளும் நடந்து கொண்ட தவறான விடயங்கள் சுட்டிக்காட்டப்பட்டிருக்கும் அதே நேரம், வடக்குக் கிழக்கு தமிழ் மக்களுக்கு சர்வதேச கண்காணிப்பில் அதிகார அலகொன்று வழங்க வேண்டும் எனப் பரிந்துரை செய்துள்ளது.

அருமையான முன்மொழிவு. சர்வதேசத்தின் கண்காணிப்பு இருக்குமாயின் அது இலங்கை அரசுக்கும் அதிகாரத்தைப் பெறும் தமிழ்த்தரப்புக்கும் இடையே ஓர் சுமுகமான நிலையை பேணிக் கொள்ள முடியும்.

அத்துடன் தருவதாகக் கூறி பின் தர மறுக்கும் சந்தர்ப்பங்களும் இல்லாமல் போகும். எனவே ஐ.நா. நிபுணர் குழு முன்வைத்த ஆலோசனையை சிக்கெனப்பற்றிக் கொள்வோம். அதுவே உதவுகரம் இல்லாத ஈழத்தமிழினத்துக்கு தெய்வம் காட்டும் துணையாகும்.

# திரைப்படம் பார்க்கச் சலுகை

## பெண்கள், சிறார்கள், மாணவர்களுக்கு மே மாதம் முதல் அரைவாசிக் கட்டணம்

(கொழும்பு)

பெண்கள், சிறார்கள் மற்றும் பல்கலைக்கழக, தொழிற்பயிற்சி பெறும் மாணவர்களுக்கு அரைவாசிக் கட்டணத்தில் திரைப்படம் பார்ப்பதற்கு வாய்ப்பளிக்கும் திட்டம் ஒன்றை மே 2ஆம் திகதி முதல் தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனம் அமுல்படுத்தவுள்ளது.

சினிமா அரங்குகளை விட்டு விலகிச் சென்றவர்களை மீண்டும் உள்வாங்குதல், சிங்கள சினிமாவை உயிர்ப்பித்தல் ஆகிய நோக்கங்களுடன் இத் திட்டங்கள் அமுல்படுத்தவுள்ளதாக நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் தேசிய திரைப்பட கூட்டுத்தாபனத் தலைவர் அபேசிங்க தெரிவித்தார். இது தொடர்பாக அவர் மேலும் கூறுகையில்,

விசேடமாக சிங்கள சினிமாவின் எதிர்காலப் பயணம் தொடர்பாக பல்வேறு திட்டங்களை அமுல்படுத்தவுள்ளோம். முதற்கட்டமாக மூன்று திட்டங்கள் முதலில் அமுல்படுத்தப்படவுள்ளன. இதன்படி மே 02 ஆம் திகதியிலிருந்து ஒவ்வொரு வாரமும் திங்கட்கிழமை முதல் வெள்ளிக்கிழமை வரை சகல திரையரங்குகளிலும் மாலை 06.30 காட்சியை பார்வையிடச் செல்லும் பெண்களுக்கும், சிறுவர்களுக்கும், ஓ.டி.சி. மற்றும் பல்க்கனி வகுப்புக்களில் அரைவாசிக் கட்டணமே அறவிடப்படும். இதற்காக விசேட அனுமதிச் சீட்டுக்கள் அச்சிடப்படும் என்றார்.

அதேவேளை வார நாட்களில் பல்கலைக்கழக மற்றும் தொழிற் பயிற்சி நெறிகளைப் பயிலும் மாணவர்களுக்கு அவர்களின் பல்கலைக்கழக அல்லது தொழிற் கல்வி நிலைய அடையாள அட்டையை சமர்ப்பித்தால் திரைப் படங்களை பார்வையிடுவதற்கு ஓ.டி.சி. வகுப்பில் அரைவாசிக் கட்டணம் அறவிடப்படும் எனவும் அவர் கூறினார்.

அத்துடன் வடக்கு, கிழக்கு உட்பட நாட்டின் சகல பகுதிகளிலும் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் ஊடாக இளைஞர்கள் திரைப்படச் சங்கங்களை உருவாக்க திட்டமிட்டுள்ளதாகவும் திரைப்படக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் குமார் அபேசிங்க தெரிவித்தார்.

திரைப்படம் பார்ப்பதற்கான டிக்கெட்டுக்களை குலுக்கலுக்கு உட்படுத்தி இரசிகர்களுக்கு பரிசுகள் வழங்கப்படவுள்ளதாகவும் அவர் கூறினார்.

நடிகர்களான அர்ஜுன், கமலநாத், லால் வீரசிங்க மற்றும் பற்றிக் அந் தோனி ஆகியோரும் இச் செய்தியாளர் மாநாட்டில் பங்குபற்றினர். (ச-5)

# நிபுணர்குழு அறிக்கையில் உண்மைத்தன்மை காணப்பட்டால் பதிலளிக்கத்தயார்

## பேராசிரியர் ரஜீவ விஜேசிங்க தெரிவிப்பு

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் சபையின் நிபுணர் குழுவினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள அறிக்கையில் உள்ளடங்கும் விடயங்களில் உண்மைத் தன்மை காணப்பட்டால் அதற்கு பதிலளிக்க தயார் என ஆளுங்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் ரஜீவ விஜேசிங்க தெரிவித்துள்ளார்.

நிபுணர் குழுவின் அறிக்கை உண்மைக்கு புறம்பானவை எனின் அதற்கு எதி ராக நடவடிக்கை எடுக்கப்படும் என ஊடக மொன்றிற்கு கருத்து தெரிவிக்கையில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் 4 விடயங்கள் உள் ளடக்கப்பட்டுள்ளதுடன் இதில் முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் பொதுவான காரணங்களாகும். இவ்வாறான குற்றச் சாட்டுக்கள் இதற்கு முன்னரும் எழுந்துள் ளது.

அத்துடன் நிபுணர் குழுவின் அறிக்கையில் அரசியல் கருத்துக்கள் காணப்படுவதாகவும் இந்த நிபுணர் குழு நியமிக்கப்பட்டமை அவ்வாறான கருத்துக்களை வெளியிடுவதற்காக அல்ல. ஐ.நா.பொதுச் செயலாளருக்கு ஆலோசனை வழங்குவதற்காகவே இந்தக் குழு நியமிக்கப்பட்டுள்ளது என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

சாட்சிகளை விசாரணைக்கு உட்படுத்தும் போதும் தீவிரவாதிகளுக்கு எதிராக செயற்படும் போதும் இலங்கை படையினர் நேர்மை யான முறையில் நடந்து கொண்டுள்ளதாக ரஜீவ விஜேசிங்க தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

# சுவாமி விவேகானந்தரின் அறிவுரைகள்



எல்லாப் பெருமையையும் எல்லா ஆற்ற லையும் எல்லா தூய்மையையும் ஆன்மா தூண்டுகிறதே தவிர ஆன்மாவைத் தூண்டு வது எதுவும் இல்லை.

ஆன்மீக உணர்வை பெறாதவரை நமது நாடு மறுமலர்ச்சி அடையாது. ஆன்மீக வாழ்க்கையில் பேரின்பம் பெறாமல் போனால்,புலனின்ப வாழ்க்கையில் திருப்தியடைய முடியாது. அமுதம் கிடைக்காமல் போனால் அதற்காக சாக்கடை நீரை நாடி செல்ல முடியாது.

ஆயிரம் ஆண்டுகள் கங்கையில் நீரா டிய போதிலும் சரி, அல்லது ஆயிரம் ஆண்டுகள் காய்கறி உணவையே உண்டு வந்தாலும் சரி உன்னுள்ளே இருக்கும் ஆன்மீகம் விழிப்படையாவிட்டால் அதனால் ஒரு பயனும் இல்லை.

# ஆன்மீகத் தேடலை வழிப்படுத்தும் தவக்காலம்

## (புனித செவ்வாய்)

### "தவறை" உணராத யூதாசாகவல்ல, உணர்ந்து திருந்திய பேதுறுவாக வாழ்வோம் (யோ 13:21-33,36-38)

உண்மையிலே எம் இயேசு ஒரு வித்தியாசமான மனிதர்.மனிதன் வாழவேண்டும்.அதிலும் நலிந்தோர், நலமற்றோர், நசுக்கப்பட்டோர், வாழ வேண்டும் என்பதில் தணியாத தாகம் கொண்டவர். பாவிகள் மனம்மாறி புதுவாழ்வு பெற்று வாழவேண்டும் என்பதில் அப்படி ஒரு வெறி அவருக்கு. அதற்கான வாய்ப்புக்களை வழங்கி வந்த வள்ளல் தேவன் அவர். அப்படி ஒரு அடுக்கடுக்கான வாய்ப்பினைத் தன்னைக் காட்டிக்கொடுக்க இருக்கும் யூதாசுக்கு வழங்கவும் இயேசு தயங்கவில்லை.

"நான் உங்களோடு என்றும் இருக்கப்போவதில்லை" (யோ 12:8) என்று மறைமுகமாக யூதாசுக்கு உணர்த்துகிறார். மீண்டும் 'உங்களுள் ஒருவன் என்னைக் காட்டிக்கொடுப்பான் என உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன்'(யோவான் 13:21) என்று யூதாசின் மனமாற்றத்திற்கு அழைப்பு கொடுக்கி றார்.

மீண்டும் அவனைக் காக்கும் முயற்சியில் இறங்குகிறார். "நீ செய்யவிருப்பதை விரைவில் செய்" என்று யூதாசின் கடின மனதைக் கரைக்கும் கடைசிக்கட்ட முயற்சியை மேற் கொள்கிறார். யூதாசிற்கு அவனைச் சுற்றிலும் இருளின் ஆதிக்கமேமேலோங்கி நிற்கிறது.

தன்னைக்காட்டிக் கொடுக்க இருக்கும் யூதாசின் மீதும் இவ்வளவு அன்பும்இரக்கமும் கொண்டுள்ளவரான எம் இயேசு எம்மை இழக்க ஒரு போதும் சம்மதிக்கமாட்டார்.எமக்காக சிலுவையில் விரித்த கரங்களோடு காத்திருக்கின்றார்.எத்தனை முறை காட்டிக் கொடுத்தாலும் மறுதலித்தாலும் எம் நல்வாழ்வுக்காக காத்திருக்கிறார்.ஒளியாம் அவருள் வருவோம்.


இயேசு பேதுருவின் உண்மையான நிலையை அறிந்தவர்.ஆகவே தான் இயேசு பேதுருவைப் பார்த்து " எனக்காக உயிரைக் கொடுப்பாயோ? நீ மும்முறை என்னைமறுதலிக்கும் முன் சேவல் கூவாது"(யோ 13:38) என் றார்.

பேதுரு தெரியவே தெரியாது என்றும் மறுதலித்தார். ஆயினும் பேதுரு தாம் செய்த தவறினை உணர்ந்து அதற்காக மனம் வருந்தி, உளம் நொந்து கண்ணீர்விட்டார். (மாற் 14:72). தவறுவது மனித இயல்பு, ஆனால் தவறை உணர்ந்து திருந் துவது மனிதருக்கு அழகு. இதையே நாம் பேதுருவிடம் காண்கிறோம். அவர் கோழையாக நடந்து கொண்டார். துன்புறுத்தப்பட்ட தம் குருவாகிய இயேசுவோடு தமக்கு உறவு உண்டு என ஏற்றால் தம் உயிருக்கும் ஆபத்து ஏற்படுமோ என்னும் அச்சத்தால் தான் அவர் இயேசுவைத் தமக்கு தெரியவே தெரியாது என மறுதலித்தார்.இன்று வாழ்கின்ற நாமும் இயேசுவை முழு மனத்தோடு நம்பிட அழைக்கபடுகின்றோம்.

ம. பிரான்சிஸ்,
கத்தோலிக்க சுதந்திர,
பத்திரிகையாளர்.

# சென்னையிலுள்ள இலங்கை தூதரகம் முன் ஆர்ப்பாட்டம்

## தங்கபாலு கைது



தமிழக மீனவர்கள் 4 பேர் கொல்லப் பட்டதைக் கண்டித்து சென்னையில் உள்ள இலங்கை தூதரகம் நேற்று காலை கண்டன

ஆர்ப்பாட்டம் நடத்திய தமிழக காங்கிரஸ் தலைவர் கே.வீ.தங்கபாலு கைது செய்யப் பட்டார்.

சென்னை டி.டி.கே. சாலையில் உள்ள இலங்கை தூதரகம் முன்பு தடையை மீறி பேரணி நடத்தியதால் பொலிஸார் அவரை கைது செய்தனர்.

அவருடன் தமிழ்நாடு காங்கிரஸ் சார்பில் ஆர்ப்பாட்டம் நடத்திய தொண்டர்களும் கைது செய்யப்பட்டனர். தமிழக மீனவர்களுக்கு எதிரான தாக்குதலை இலங்கை அரசு நிறுத் தாவிட்டால் தங்கள் போராட்டம் தொடரும் என்று தங்கபாலு எச்சரித்தார்.

முன்னதாக இந்த ஆர்ப்பாட்டம் குறித்து அவர் நேற்று முன்தினம் வெளியிட்ட அறிக் கையில், கடலில் மீன்பிடிக்க சென்ற தமிழக மீனவர்கள் 4 பேர் கரை திரும்பாத நிலையில் அவர்கள் உடல்கள் கடுமையாக தாக்கப்பட்டு கொடூரமான முறையில் கொல்லப்பட்டு தமிழக கடலோரங்களில் கண்டெடுக்கப்பட்ட சம்பவம் தமிழகத்தை மிகுந்த அதிர்ச்சிக்கு உள்ளாக்கி யுள்ளது. கண்மூடித்தனமாக, காட்டு மிராண் டித்தனமாக நடைபெற்றுள்ள இலங்கை படை யினரின் கொடூரம் தாங்கொணாத் துயரத்தில் நம்மை ஆழ்த்தியுள்ளது.

தொடர்ந்து இலங்கை படையினரின் கொடுமை தமிழக மீனவர்களுக்கு எதிராக நடைபெறுவதை தடுத்து நிறுத்தப்பட வேண் டும் என்று பிரதமர் மன்மோகன் சிங்கும் வெளியுறவுத் துறை அமைச்சர் எஸ்.எம். கிருஷ்ணாவும் இலங்கை ஜனாதிபதியை சந்தித்து பல முயற்சிகள் மேற்கொண்டனர்.

தமிழக அரசும் குறிப்பாக முதல்வர் கருணா நிதியும் நமது தோழமை கட்சியினரும் தமிழக மீனவர்கள் தாக்கப்படுவதை தடுக்க மத்தியில் உள்ள காங்கிரஸ் தலைமையிலான அரசு மேற்கொண்ட முயற்சிகளுக்கு துணை நின் றனர்.

பிரதமர் மன்மோகன் சிங் வெளியுறவுத் துறை அமைச்சர் எஸ்.எம்.கிருஷ்ணா, நிதி அமைச்சர் பிரணாப் முகர்ஜி ஆகியோர் பல் வேறு நேரங்களில் தொடர்ந்து இலங்கை அரசோடு இதற்கு தீர்வு காண முயற்சி எடுத் தனர்.


இலங்கை ஜனாதிபதி ராஜபக்ஷவும் பல் வேறு நேரங்களில் தொடர்ந்து உறுதி அளித் தும் தொடர்ச்சியாக சிங்கள படையினரின் வெறியாட்டம் நின்ற பாடில்லை. 4 மீனவர்கள் கொடூர கொலை அவர்களது உடல் அடுத் தடுத்து கரை ஒதுங்கிய நிலை தமிழ்நாட்டு மீனவர்கள் மத்தியில் ஏன் தமிழ் மக்கள் மத்தியில் மிகுந்த ஆற்றொணாத் துயரத்தில் நம்மை ஆழ்த்தியுள்ளது.

தமிழக மீனவர்கள் மீது இலங்கை அரசு படைகளால் நடத்தப்படும் கொலை குற்றங் கள் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும். இலங்கை அரசின் கபட நாடகத்துக்கு முற்றுப் புள்ளி வைக்க வேண்டும்.

மேலும் ஒரே ஒரு தமிழக மீனவர் கூட துன்புறுத்தலுக்கு ஆட்படுத்தப்படக்கூடாது. இலங்கை அரசுப் படைகளின் கொடுமைகளை தடுத்து நிறுத்த வேண்டும் என்று தங்கபாலு கூறியிருந்தார்.

(ஸ்ரீ-2)

## நடிகை நந்திதாதாஸ்க்கு செவாலியர் விருது



நடிகையாக இருந்து இயக்குநராக மாறி யவர் நந்திதாதாஸ். உள்ளூர் விருது முதல் வெளிநாட்டு விருதுகள் வரை பல பெற்ற நந்திதாவுக்கு மேலும் ஒரு கௌரவம் கிடைத் திருக்கிறது. இந்தியா-பிரான்ஸ் நாடுகளுக்கு இடையே சினிமவை மேம்படுத்தியதற்காக பிரான்ஸ் நாட்டின் மிக உயரிய விருதான செவாலியர் விருது வழங்கி நந்திதா தாஸைக் கௌரவித்துள்ளது பிரான்ஸ் அரசு.

தமிழில் அழகி, கன்னத்தில் முத்தமிட்டால், விஸ்வ துளசி போன்ற படங்களில் நடித்துள் ளார். தமிழ், மலையாளம், கன்னடம், தெலுங்கு, இந்தி, ஆங்கிலம், உருது என பல்வேறு படங்களில் நடித்துள்ளார். இவர் நடிப்பில் வெளி வந்த பயர், எர்த், பவந்தர் உள்ளிட்ட பல்வேறு படங்களில் நந்திதா தாஸிக்கு பெயர் பெற்று தந்தன.


நடிகையாக இருந்த நந்திதா ஃபிராக் படத்தில் மூலம் இயக்குநராகவும் அவதரித் தார். இவர் இந்தியாவின் பல்வேறுமாநில விருதுகளை பெற்றுள்ளதுடன் கொய்ரோ, மேட்ரிட் உள்ளிட்ட நகரங்களில் நடந்த விழாக் களிலும் விருது பெற்றுள்ளார்.

இந்நிலையில் அவருக்கு மேலும் ஒரு கௌரவத்தை வழங்கி இருக்கிறது பிரான்ஸ் அரசு. பிரான்ஸ் அரசின் மிக உயரிய விரு தான செவாலியர் விருது நந்திதாவுக்கு வழங் கப்பட்டுள்ளது.

இந்தியா-பிரான்ஸ் நாடுகளுக்கு இடையே சினிமாவை மேம்படுத்தியதற்காக இந்த விருது அவருக்கு வழங்கப்பட்டுள்ளது. டில்லியில் உள்ள பிரான்ஸ் தூதுரகத்தில் நடந்த நிகழ்ச் சியில் அந்த நாட்டுத் தூதர் ஜெரோம் போ னோஃபான்ட் இவ்விருதை நந்திதா தாஸ் சிற்கு வழங்கினார்.

விருதுவென்றது குறித்து நந்திதா கூறிய தாவது, ஒவ்வொரு முறையும் விருது பெறும் போது எனக்கு ஒரு புது அனுபவத்தை தருகி றது. என்னுடைய உழைப்புக்கு கிடைத்த அங் கீகாரமாக இதைகருதுகிறேன். மூன்று வரு டத்திற்கு முன்பே இவ்விருது கிடைக்க வேண் டியது. ஆனால் சில காரணங்களால் கிடைக் காமல் போய்விட்டது. இப்போது பெற்றிருப்பது மிகுந்த மகிழ்ச்சியை அளிக்கிறது. இவ்வாறு நடிகை நந்திதா தாஸ் கூறினார்.

(ஸ்ரீ-2)



## பாரதச் செய்திகள்

## தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் ஜெயலலிதாவை தாக்கிப் பேசவில்லை

### வடிவேலு பேட்டி



நகைச்சுவை நடிகர் வடிவேலுவின் தேர்தல் பிரசாரத்தில் தி.மு.க.வின் நட்சத்திர பேச்சாள ராக திகழ்ந்தார். அவர் கூட்டங்களுக்கு முன் னணி தலைவர்களுக்கு இணையாக மக்கள் திரண்டார்கள்.

பேச்சையும் ஆரவாரத்தோடு இரசித்தனர். பிரசாரத்தில் விஜயகாந்தையே கடுமையாக தாக்கி பேசினார்.

அ.தி.மு.க பொதுச் செயலாளர் ஜெயலலி தாவை எந்த கூட்டத்திலும் விமர்சித்து பேச வில்லை என்றார்.

இது குறித்து வடிவேலு அளித்த பேட்டி வருமாறு, தேர்தல் பிரசாரத்தில் எனது பேச்சை கேட்க பெரும் கூட்டம் கூடியது. மக்கள் அளித்த வரவேற்பு இனிமையான அனுபவமாக இருந் தது. அது என்னை உற்சாகப்படுத்தவும் செய்தது.

அ.தி.மு.க.வுக்கு சாதகமாக வரும் கருத்துக் கணிப்புகளை நான் பொருட்படுத்தவில்லை. தேர்தலில் உறுதியாக தி.மு.க. அமோக வெற்றி பெறும். கலைஞர் மீண்டும் முதல்வர் ஆவார். எனது தேர்தல் பிரசாரம் கலைஞருக்கு மகிழ்ச்சி அளித்துள்ளது.

கூட்டங்களில் ஜெயலலிதாவை தாக்கி பேசவில்லையே என்று கேட்கிறார்கள். தி.மு.க. அரசின் திட்டங்கள் பற்றி பிரசாரத்தில் பேசி னாலே போதும் என முதல்வரும் துணை முதல்வரும் என்னிடம் கேட்டுக்கொண்டனர்.

எனது பேச்சும் அதை ஒட்டியே இருந்தது. விஜயகாந்தை கடுமையாக தாக்கி பேசுவதற்கு சில காரணங்கள் உள்ளன. அவர் நடித்த படம் ஒன்றில் நான் காமெடி வேடம் செய்தேன்.

ஒரு காட்சியில் விஜயகாந்தை பார்த்து வருங்கால முதல்வர் என்று வசனம் பேச சொன்னார்கள். நான் அவ்வாறு பேச முடி யாது என்று மறுத்து விட்டேன். அன்று முதல் எங்களுக்குள் கருத்து வேறுபாடு இருந்து வருகிறது. எனக்கு நிறைய கொலை மிரட்ட ல்கள் வருகின்றன. அவர்கள் யார் என்று தெரியவில்லை. முதல் அமைச்சர் கலை ஞரிடம் இந்த மிரட்டல்கள் பற்றி கூறினேன். அவர் எனது வீட்டில் பொலிஸ் பாதுகாப்புக்கு ஏற்பாடு செய்துள்ளார் என்றார். (ஸ்ரீ-2)

## தேர்தல் ஆணையத்தின் நடவடிக்கைகள் தி.மு.க கூட்டணிக்கு எதிராக உள்ளது

### மு.க.அழகிரி தெரிவிப்பு



தேர்தல் ஆணையத்தின் அனைத்து நடவடிக்கைகளும் தி.மு.க கூட்டணிக்கு எதிராக உள்ளது என மத்திய அமைச் சரும் தி.மு.க தென்மண்டல அமைப்பாளருமான மு.க. அழகிரி கூறியுள்ளார்.

சென்னை விமான நிலையத்தில் செய்தியாளர்களின் கேள்விகளுக்கு மத்திய அமைச்சர் மு.க.அழகிரி பதில் அளித்தார்.

கேள்வி : தேர்தல் முடிவுகள் எப்படி அமையும்?

பதில்: தமிழகத்தில் தி.மு.க கூட்டணி 200 தொகுதிகளுக்கு மேல் வெற்றி பெறும்.

கேள்வி: தி.மு.க வன்முறையில் ஈடுபடுவதாக அ.தி.மு.க பொதுச் செயலாளர் ஜெயலலிதா அறிக்கை வெளியிட்டுள்ளாரே?

பதில்: எந்தக் கட்சிக்காரர்கள் காயம் அடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப் பட்டுள்ளார்கள் என்று நேரில் பார்த்து தெரிந்து கொள்ளலாம்.

கேள்வி: மதுரை மேற்கு தொகுதியில் மறுதேர்தல் நடத்துமாறு புகார் எழுப்பப்பட்டுள்ளதே?

பதில்: தேர்தல் ஆணையத்தின் எந்த முடிவுக்கும் நாங்கள் கட்டுப்படுவோம் என்றார். மேலும் பேசிய அவர் தேர்தல் ஆணையத்தின் அனைத்து நடவடிக்கைகளும் தி.மு.க கூட்டணிக்கு எதிராக உள்ளது என்றார். (ஸ்ரீ-2)

# DLF IPL ஐ.பி.எல் கொண்டாட்டம்

ஏப்பிரல் 8 முதல் மே 28 வரை

## துடுப்பாட்டத்தில் சோபிக்கவில்லை தோல்வி குறித்து வோர்ன் புலம்பல்

(கொல்கத்தா)

கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணிக்கு எதிராக துடுப்பாட்டத்தில் சோபிக்காததே தோல்விக்கு முக்கிய காரணம் என ராஜஸ்தான் றோயல்ஸ் அணித்தலைவர் ஷேன் வோர்ன் தெரிவித்துள்ளார்.

கோல்கத்தாவில் நேற்று முன் தினம் நடந்த ஐ.பி.எல் லீக் போட்டியில் கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணி 8 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் ராஜஸ்தான் ரோயல்ஸ் அணியை வீழ்த்தியது. இப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய ராஜஸ்தான் அணி 81 ஓட்டங்களுக்கு சுருண்டது.

இது குறித்து ராஜஸ்தான் அணித் தலைவர், பயிற்சியாளர் ஷேன் வோர்ன் கூறியதாவது,


தொடர்ந்து இரண்டாவது முறையாக கொல்கத்தா அணிக்கு எதிராக தோல்வி அடைந்தது வருத்தம் அளிக்கிறது. இப்போட்டியில் எங்கள் அணியின் துடுப்பாட்டம் மோசமாக இருந்தது. வீரர்கள் ஒரு சிலர் தேவையில்லாத ஷோட் அடித்து சொற்ப ஓட்டங்களில் வெளியேறி ஏமாற்றினர். இது பார்ப்பதற்கு குழந்தைகள் விளையாடும் கிரிக்கெட் போட்டியைப்போல இருந்தது.

ஆனால் இப் போட்டிக்கு முன் எங்கள் வீரர்களின் பயிற்சி சிறப்பாக இருந்தது. இருப்பினும் போட்டியில் எப்படி கோட்டைவிட்டோம் எனத் தெரியவில்லை. காயம் காரணமாக டிராவிட் பங்கேற்காதது பின்னடைவாக அமைந்தது. இவர் பெங்களூர் அணிக்கு எதிரான இன்றைய போட்டியில் நிச்சயம் விளையாடுவார் என எதிர்பார்க்கிறேன்.

கடந்த மூன்று போட்டிகளில் எங்கள் அணிக்காக விளையாடிய ரவீந்திர ஜடேஜா, போல் வல்தாரி, யூசுப்பதான், முனாப்படேல், அரோன் பின்ச் உள்ளிட்ட வீரர்கள் இம் முறை வேறு அணிகளில் உள்ளனர்.

இவர்கள் இம்முறை சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி வருகின்றனர். எங்கள் அணியில் உள்ள ஒரு சில வீரர்களைத் தவிர மற்றவர்கள் புதியவர்கள்எனவே பழைய வீரர்கள் புதியவர்களுக்கு முன்னுதாரணமாகத் திகழவேண்டும் என்றார்.

## டக்-வேத் லூயிஸ் முறையில் கொச்சி தஸ்கர்ஸ் அணி வெற்றி சென்னை சுப்பர் கிங்ஸ் சோகம்



(கொச்சி)

மக்குலமின் அதிரடியில் கொச்சி தஸ்கர்ஸ் அணி டக்-வேத் லூயிஸ் முறையில் 7 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் சென்னை சுப்பர் கிங்ஸ் அணியை வீழ்த்தியது.

இந்தியன் பிரிமியர் லீக் அமைப்பின் 10 அணிகள் மோதும் இருபது -20 கிரிக்கெட் தொடர் இந்தியாவில் நடைபெற்று வருகிறது.

இதில் நேற்று கொச்சியில் நடைபெற்ற 18 ஆவது போட்டியில் மஹேல ஜெயவர்த்தன தலைமையிலான கொச்சி தஸ்கர்ஸ் கேரளா அணியும் தோனி தலைமையிலான சென்னை சுப்பர் கிங்ஸ் அணியும் மோதின.

இப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற கொச்சி அணித் தலைவர் மஹேல ஜெயவர்த்தன முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தார்.

இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய சென்னை சுப்பர் கிங்ஸ் அணி 9 ஓவர்களில் 2 விக்கெட்டுக்களையிழந்து 65 ஓட்டங்களை எடுத்தபோது மழை காரணமாக ஆட்டம் நிறுத்தப்பட்டது.

இந்நிலையில் ஒரு மணி நேரத்திற்குப் பின் மழை விட மீண்டும் துடுப்பாட்டம் ஆரம்பமானபோது டக்-வேத் லூயிஸ் முறையில் போட்டி இரு அணிகளுக்கும் தலா 17 ஓவர்களாகக் குறைக்கப்பட்டது.

இதனடிப்படையில் தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய சென்னை சுப்பர் கிங்ஸ் அணி 17 ஓவர்கள் நிறைவில் 4 விக்கெட்டுக்களையிழந்து 131 ஓட்டங்களை எடுத்தது.

இதில் சுரேஷ் ரெய்னா 40 பந்துகளில் (5 பவுண்டரிகள், ஒரு சிக்ஸர் உட்பட) 50 ஓட்டங்களும் முரளி விஜய் 28, பத்திரிநாத் 19, தோனி ஆட்டமிழக்காமல் 14 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் ஆர்.பி.சிங், விஜேய் குமார், கோமிஸ் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டை வீழ்த்தினர்.

பதிலுக்கு டக்-வேத் லூயிஸ் முறையில் 17 ஓவர்களில் 135 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் துடுப்பெடுத்தாடிய கொச்சி தஸ்கர்ஸ் அணி 15 ஓவர்களில் 3 விக்கெட்டுக்களை மாத்திரமிழந்து வெற்றி இலக்கை அடைந்தது.

இதன் மூலம் கொச்சி தஸ்கர்ஸ் அணி டக்-வேத் லூயிஸ் முறையில் 7 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றது. இதில் பிரண்டன் மக்குலம் 33 பந்துகளில் (4 பவுண்டரிகள், 3 சிக்ஸர்கள் அடங்கலாக) 47 ஓட்டங்களையும் பார்த்தீவ் பட்டேல் 26 பந்துகளில் (4 பவுண்டரிகள், ஒரு சிக்ஸர் உட்பட) 34 ஓட்டங்களையும் ஹோட்ஜ் ஆட்டமிழக்காமல் 9, ஜடேஜா ஆட்டமிழக்காமல் 16, ஜெயவர்த்தன 16 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் அஸ்வின் 2 விக்கெட்டுக்களையும் பொல்லிங்கர் ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

இவ்வெற்றியின் மூலம் கொச்சி தஸ்கர்ஸ் அணி தான் விளையாடிய 4 ஆவது போட்டியில் 2 ஆவது வெற்றியைப் பதிவு செய்தது.

இப் போட்டியில் கொச்சி அணியின் வெற்றிக்கு திருப்புமுனையமைத்த மக்குலம் ஆட்டநாயகனாகத் தெரிவானார்.

## இலங்கை கிரிக்கெட் அணியின் புதிய தலைவர் டில்சான்!



இலங்கை கிரிக்கெட் அணியின் புதிய தலைவராக திலகரட்ன டில்சான் தெரிவு செய்யப்பட்டுள்ளார். துலிப் மெண்டிஸ் தலைமையிலான இலங்கைத் தேர்வுக்குழு நேற்று இத் தெரிவை மேற்கொண்டுள்ளது. இத் தெரிவுக்கு விளையாட்டுத் துறை அமைச்சரின் அங்கீகாரம் பெறவேண்டியுள்ளது.

இங்கிலாந்து சுற்றுலாவுக்கான இலங்கை அணிக்கு டில்சான் தலைமைதாங்கவுள்ளார்.

34 வயதான டில்சான் 66 டெஸ்ட் போட்டிகளிலும் 203 ஒருநாள் சர்வதேசப் போட்டிகளிலும் விளையாடியுள்ளார்.

இது குறித்து சிறிலங்கா கிரிக்கெட் (எஸ்.எல்.சி) வெளியிட்டுள்ள அறிக்கையில்,

இங்கிலாந்துக்கு எதிரான டெஸ்ட், ஒருநாள் மற்றும் இருபது-20 போட்டிகளில் பங்கேற்க இலங்கை அணி செல்கிறது. இந்த மூன்று வகை போட்டிகளுக்கும் அணியின் தலைவராக டில்சானை தேர்வு செய்ததில் எஸ்.எல்.சி பெருமைப்படுகிறது. அதேநேரம் துணைத் தலைவர் யார் என்பது குறித்து இன்னும் முடிவெடுக்கவில்லை. ஏனெனில் மத்யூஸ் இன்னும் காயத்தில் இருந்து முழுமையாக மீளவில்லை. இவ்வாறு அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

## புள்ளிப் பட்டியல்

| அணிகள் | போட்டி | வெற்றி | தோல்வி | சமனிலை | முடிபில்லை | புள்ளிகள் | நிகர ஓட்ட எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|---|
| கொல்கத்தா | 4 | 3 | 1 | 0 | 0 | 6 | +0.891 |
| புனே | 3 | 2 | 1 | 0 | 0 | 4 | +1.089 |
| மும்பை இந்தியன்ஸ் | 3 | 2 | 1 | 0 | 0 | 4 | +0.561 |
| கொச்சி | 4 | 2 | 2 | 0 | 0 | 4 | +0.044 |
| சென்னை | 4 | 2 | 2 | 0 | 0 | 4 | -0.097 |
| ராஜஸ்தான் ரோயல்ஸ் | 4 | 2 | 2 | 0 | 0 | 4 | -0.476 |
| கிங்ஸ் லெவின் பஞ்சாப் | 3 | 2 | 1 | 0 | 0 | 4 | -0.478 |
| டெக்கான் சார்ஜர்ஸ் | 4 | 1 | 3 | 0 | 0 | 2 | -0.113 |
| டெல்லி | 3 | 1 | 2 | 0 | 0 | 2 | -0.561 |
| றோயல் சலஞ்சர்ஸ் | 4 | 1 | 3 | 0 | 0 | 2 | -0.730 |

## துளித்துளியாய்...

**ஐ.பி.எல் தொடரில் இம்முறை 100 கோடி சேமிப்பு**

லலித்மோடிக்கு பின் ஐ.பி.எல் தலைவராக சிராயு அமீன் பொறுப்பேற்றுக் கொண்டார். ஐ.பி.எல் 4 தொடர் தற்போது வெற்றிகரமாக நடந்து வருவது குறித்து அவரிடம் கேட்கப்பட்டது.

அனைத்துப் போட்டிகளும் நல்ல முறையில் நடந்து வருகின்றன. தேவையில்லாத செலவுகள் குறைக்கப்பட்டுள்ளன. இதனால் மாதத்தில் ரூ.100 கோடி சேமிக்கப்பட்டுள்ளது என்றார்.

**மேற்கிந்தியத் தொடரில் மூத்த வீரர்களுக்கு ஓய்வு**

ஐ.பி.எல் தொடர் முடிந்ததும் ஜூன் முதல் வாரத்தில் இந்திய அணி மேற்கிந்தியத் தீவுகளுக்கு சுற்றுப் பயணம் செல்கிறது. அங்கு ஒரு இருபது-20, 5 ஒருநாள் போட்டிகள், 3 டெஸ்ட் போட்டிகளில் விளையாட இருக்கிறது. ஜூன் 4 ஆம் திகதி போட்டிகள் ஆரம்பமாகின்றன. இந்தத் தொடரில் இருந்து சேவாக், தோனி, டெண்டுல்கர், காம்பீர், சகீர் கான், ஹர்பஜன் சிங் ஆகியோர் ஓய்வு கேட்டுள்ளனர். எனவே யுவராஜ் சிங் அணித்தலைவராக நியமிக்கப்படலாம் என தெரிகிறது.

**ஹைடர் 25 இல் நாடு திரும்புகிறார்.**

பாகிஸ்தான் விக்கெட் காப்பாளராக இருந்த சுல்ஹார்னியா ஹைடர் தென்னாபிரிக்காவிற்கு எதிரான ஒருநாள் போட்டி கடந்த நவம்பர் மாதம் டுபாயில் நடந்த போது சூதாட்ட கும்பல் மிரட்டலுக்கு பயந்து லண்டனுக்கு ஓடிவிட்டார்.

அங்கு தங்கியிருக்கும் அவர் நாடு திரும்ப பாகிஸ்தான் அரசு அனுமதி அளித்துவிட்டது. இதைத் தொடர்ந்து எதிர்வரும் 25 ஆம் திகதி அவர் பாகிஸ்தான் திரும்புகின்றார்.

## இன்றைய ஆட்டங்கள்






ஒருங்கிணைப்புக் கூட்டத்திற்கான முன்னேற்ற பாட்டுக் கூட்டத்தில் கலந்துகொண்டோர்களை படங்களில் காணலாம்.

# நீதித்துறையாயினும், அலுவலகங்களாயினும் அனைவரும் சிறப்பாகப் பணியாற்றவேண்டும்

## வட மாகாண ஆளுநரின் செயலாளர் தெரிவிப்பு

மக்களுக்கு சேவை செய்யவே அரசாங்கம் எம்மை பதவிகளில் அமர்த்தியுள்ளது . நீதித்துறையாக இருப்பினும் அலுவலகங்களாக இருப்பினும் மக்களின் நலனைக் கருத்தில் கொண்டு நாம் பணிபுரிய வேண்டும் என வடமாகாண ஆளுநரின் செயலாளர் எஸ்.ரங்கராஜா தெரிவித்துள்ளார்.

வடமாகாண முகாமைத்துவ அபிவிருத்தி பயிற்சி நிறுவனத்தினால் நீதிமன்ற உத்தியோகத்தர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு நேற்று பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலக மண்டபத்தில் இடம்பெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், நிர்வாகத்திலுள்ளவர்கள் அர்ப்பணிப்புடன் சேவையாற்றும் போதுதான் அரசாங்கத்தின் மீது மக்களுக்கு நம்பிக்கையுடன் விருப்பமும் ஏற்படும். குறிப்பாக நீதித்துறையை பொறுத்தமட்டில் இதில் அதிகளவு அக்கறை காட்ட வேண்டும்.

எமது மாகாண சபையில் 15 ஆயிரம் பேர் முகாமைத்துவத் துறையில் பணிபுரிந்து வருகின்றனர். அவர்களுக்கு நான் கூறுவதும் இதுவே பொதுமக்களுக்கு உரிய முறையில் சேவையாற்றவேண்டும் என்பதே. நாட்டின் நிர்வாகத்தை இயக்குவது முகாமைத்துவத் துறையே. அதனை சிறந்த முறையில் வடிவமைத்துக் கொள்ள வேண்டும். இந்தப்பயிற்சியும் இதற்காகவே வழங்கப்பட்டுள்ளது. இலங்கையை பொறுத்த மட்டில் நீதிமன்றங்கள் உருவான காலம் தொட்டு இதுவரை இவ்வாறு செயலமர்வுகள் இடம்பெற்று சான்றிதழ் வழங்கப்பட்டது இல்லை.

இத்தகைய செயலமர்வுகள் மூலம் முகாமைத்துவ துறையை மேலும் வளர்த்துக் கொள்ள முடிவதோடு இதில் பங்கு கொள்பவர்களும் நீதித்துறை தொடர்பாக அதிகம் அறிந்து கொள்ளக் கூடியதாக இருக்கும் என்றார். (ச-5)

## ஐ.நாவின் அறிக்கை...

குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை ஐக்கிய நாடுகள் சபையின் நிபுணர்கள் குழுவின் அறிக்கைக்கு எதிராக குரல் கொடுக்க அனைவரும் அணிதிரள வேண்டுமென ஐக்கிய தேசியக்கட்சியின் இணைப் பிரதித்தலைவர் சஜித் பிரேமதாசா தெரிவித்துள்ளார்.

சர்வதேச நீதிமன்றத்தில் நாட்டின் படைவீரர்களை முன்னிலைப் படுத்துவதை தடுத்து நிறுத்த அனைவரும் இணைந்து குரல் கொடுக்க வேண்டும் என அவர் வலியுறுத்தியுள்ளார்.

ஐக்கிய நாடுகள் சபையின் நிபுணர்கள் குழுவின் அறிக்கை படைவீரர்களுக்கு எதிரான வகையில் காணப்படுவதாக அவர் கூறியுள்ளார். அத்துடன் சிறையில் தண்டனை அனுபவித்து வரும் ஜனநாயகத் தேசியக் கூட்டமைப்புத் தலைவர் சரத் பொன்சேகாவை விடுதலை செய்யப்பட வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார். (ச-5)

# கடவுச்சீட்டு அலுவலகம் வவுனியாவில் விரைவில்!

(கொழும்பு)

குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்தின்கடவுச்சீட்டு வழங்கும் பிராந்திய அலுவலகமொன்று மிக விரைவில் வவுனியாவில் திறக்கப்படவுள்ளது.

குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்தின் கொழும்பில் இயங்கும் கடவுச்சீட்டு வழங்கும் பிரதான அலுவலகத்தின் கிளைகள் தற்போதைக்கு மாத்தறை, அநுராதபுரம், கண்டி ஆகிய இடங்களில் இயங்கி வருகின்றன. அதில் அநுராதபுரத்தில் இருக்கும் கிளைக்கு மிகக் குறைந்தளவான வாடிக்கையாளர்களே வருகை தருகின்றனர். அத்துடன் அங்குள்ள வசதிகளும் மிகக் குறைவாக இருப்பதால் வடக்கு கிழக்கில் உள்ள மக்கள் கடவுச் சீட்டுக்களைப் பெற்றுக்கொள்ள கொழும்புக்கே செல்ல வேண்டியுள்ளது.

அதனை நிவர்த்தி செய்யும் பொருட்டு அநுராதபுரத்தில் இயங்கும் கிளையை மிகவிரைவில் வவுனியாவுக்கு இடமாற்ற தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதற்கான அனுமதி பாதுகாப்பு அமைச்சிடமிருந்து கிடைத்துள்ளது. அதன் மூலம் வட மாகாண மக்களுக்கு மிக இலகுவாக கடவுச்சீட்டுக்களைப் பெற்றுக்கொள்வதற்கான வழியேற்படும். (ச-5)

## நாய்களின்...

வட்டாரங்கள் தெரிவித்தன.

எனினும் மாணவர்கள் தமது எதிர்ப்பை வெளிப்படுத்துவதற்கு நாய்கள் ஊடான மாற்று வழியொன்றை கண்டுபிடித்ததாக கருதப்படுகிறது.

அந்நாய்களைக் கட்டுப்படுத்துவதற்கு பொலிஸார் மேற்கொண்ட முயற்சிகள் பலனளிக்கவில்லை. அவை வெல்லமடம பகுதியில் அலைந்து திரிந்ததாக மேற்படி வட்டாரங்கள் தெரிவித்தன. (ச-5)

## யாழில் அரசியல்வாதி...

குறித்த தகவல்களைப் படைத்தரப்பி னர்சேகரித்துள்ளதாகவும் அவர் விரைவில் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தின் முன் நிறுத்தப்படவுள்ளதாகவும் மேஜர் ஜெனரல் மகிந்த ஹத்துருசிங்க கூறியுள்ளார்.

யாழ்ப்பாணத்தில் பொலிஸுடன் இணைந்து படைத்தரப்பினர் ரோந்து மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகை மேற்கொள்ள ஆரம்பித்த பின்னரே அங்கு குற்றச் செயல்கள் குறைந்ததாகவும் அவர் குறிப்பிட்டார்.

பொது மக்கள் மற்றும் அவர்களின் பிரதிநிதிகளின் வேண்டுகோளின் பிரகாரமே படையினரைப் பாதுகாப்பு நடவடிக்கையில் ஈடுபடுத்தியதாகக் கூறிய மேஜர் ஜெனரல் மகிந்த ஹத்துருசிங்க கடந்தாண்டு ஓகஸ்ட் மாதம் மற்றும் செப்டெம்பர் மாதங்களில் கொள்ளை, கொலை, பாலியல் வல்லுறவு போன்ற குற்ற செயல்கள் அதிகரித்ததாலேயே படையினர் வீதிச் சோதனைகளை மீண்டும் மேற்கொள்ள நேரிட்டதாகவும் தெரிவித்துள்ளார். (ச-5)

# ஐ.நாவின் அறிக்கைக்கு...

அடக்கி, அடிமைப்படுத்தியதோடு, எத்தகைய சட்டபூர்வமான அதிகாரப் பகிர்வும் அவர்களுக்கு கிடைக்க விடாமல் தடுக்கும் வகையில் முறைமையாகவும், தொடர்ச்சியாகவும் அவர்களுக்கு எதிரான வன்செயல்களை கட்டவிழ்த்துவிட்டிருந்தது.

**பொதுமக்களுக்கு தீங்கிழைக்கப்பட்டது**

ஆயுதம் தரித்த போராளிகளுக்கு எதிரான இராணுவ நடவடிக்கையின் போது நிராயுதபாணிகளான தமிழ்ப் பொதுமக்களுக்கு தீங்கிழைக்கப்படாதிருப்பதையும், பாதுகாப்பப்படுவதையும் உறுதிசெய்வது இலங்கை அரசாங்கத்தின் கடமை என்பதை நாம் நிலைமாற்றமின்றி வலியுறுத்தி வந்துள்ளோம்.

எவ்வாறாயினும், இலங்கை அரசாங்கம் தொடர்ந்தும் மூர்க்கத்தனமாக பொதுமக்கள் வாழும் பிரதேசங்கள் மீது குண்டு வீசியும், கனரக ஆட்டிலெறி மற்றும் பல்குழல் றொக்கட் செலுத்திகளைப் பயன்படுத்தியும் தாக்குதல் நடத்தியதோடு,

ஆழமாக ஊடுருவும் அலகுகளைப் பயன்படுத்துவதன் மூலம் பல ஆயிரக்கணக்கான தமிழ் மக்களின் மரணத்தையும், பாரதூரமான காயங்களையும் விளைவித்து, இலட்சக்கணக்கான இத் தமிழ் மக்களை அவர்களின் வீடுவாசல்களிலிருந்து இடம்பெயர வைத்து, அவர்களின் வீடுகளையும், தொழில் உபகரணங்களையும் ஏனைய சொத்துக்களையும் நாசம் செய்து, அவர்களை நிர்க்கதி நிலைக்குத் தள்ளியது.

மேலும் இத்தகைய தமிழ் மக்களுக்கு உறைவிடம், உணவு, மருந்துகள், குடிதண்ணீர் மற்றும் ஏனைய அத்தியாவசியப் பொருட்கள் மறுக்கப்பட்டு, வைத்தியசாலைகள் மீதும், நிவாரண நிலையங்கள் மீதும் செல் தாக்குதல்கள் நடத்தப்பட்டு, யுத்தப் பிரதேசங்களில் வாழும் நிராயுதபாணிகளான தமிழ் மக்களின் பாதுகாப்புக்கோ, நலனுக்கோ, கௌரவத்திற்கோ எதுவித அக்கறையும் காண்பிக்கப்பாத வகையில் அவர்களின் இராணுவ நடவடிக்கைகளைச் செயற்படுத்தினர்.

நீதி முறை சாரா மரணதண்டனை நிறைவேற்றங்களும், வெள்ளைவான் மூலம் ஆட்களைக் கடத்தும் பயங்கரமும் குறைவின்றித் தொடர்ந்தன. இவையும் ஏனைய பயங்கரமான சம்பவங்கள் குறித்த அறிக்கைகளும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினால் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு உடனுக்குடன் அறிக்கைகளில் உள்ளடக்கப்பட்டு சம்பந்தமுற்ற சகலரினதும் கவனத்துக்கு கொண்டுவரப்பட்டது.

**ஐ.நாவும் கூட்டமைப்பும்**

சமீபத்தில் முடிபடைந்த யுத்தத்தின்போது நிராயுதபாணிகளான தமிழ் மக்களுக்கு நேர்ந்த கதி சம்பந்தமான உண்மைகளை ஐ.நா செயலாளர் நாயகத்திற்கான ஆலோசனைக் குழாம் சமர்ப்பித்த அறிக்கை உறுதிசெய்திருப்பதையும், இது, இச் சம்பவங்கள் நிகழ்ந்தவேளையில் நாம் நாடாளுமன்றத்தில் அறிக்கையிட்ட சம்பவங்களை மறுக்கமுடியாத வகையில் உறுதிப்படுத்தியிருப்பதையும் அவதானிக்கின்றோம்.

நம்புதகவுமிக்க சார்த்துதல்கள், அவை நிரூபிக்கப்பட்டால் சர்வதேச மனிதாபிமானச் சட்டத்தினதும், சர்வதேச மனிதவுரிமைகள் சட்டத்தினதும் பரந்த வீச்சிலான மிகப் பாரதூரமான மீறல்கள் இலங்கை அரசாங்கத்தினாலும் விடுதலைப்புலிகள் அமைப்பினாலும் புரியப்பட்டுள்ளன என்பதையும் அவற்றுள் சில யுத்தக் குற்றங்களும் மனித குலத்துக்கெதிரான குற்றங்களும் ஆகும் என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளன.

உண்மையில் யுத்தம் செய்யப்பட்ட முறை, யுத்தகாலத்திலும், சமாதான காலத்திலும், தனிநபர் கௌரவத்தைப் பாதுகாப்பதற்காக வடிவமைக்கப்பட்டுள்ள முழு அளவிலான சர்வதேசச் சட்டங்கள் மீதும் தொடுக்கப்பட்ட ஒரு பாரதூரமான தாக்குதல் ஆகும்.

விசேடமாக இக் குழாம் யுத்தத்தின் இறுதிப் படிநிலைகளோடு இணைவுற்ற வகையிலான நம்புதகவுள்ள சான்றிதழ்களை கண்டறிந்துள்ளதோடு இலங்கை இராணுவம் பாரிய மற்றும் பரந்த அளவிலான செல் வீச்சுக்களுடன் வன்னிக்குள் நடவடிக்கை ஆரம்பித்து பெரும் எண்ணிக்கையிலான பொதுமக்களின் மரணத்திற்குக் காரணமாக அமைந்ததையும் கண்டறிந்துள்ளது.

ஆலோசனைக் குழாம் இந்த நடவடிக்கை வன்னியின் சனத்தொகையாகிய சுமார் 3 இலட்சத்து 30 ஆயிரம் பொதுமக்களை தொடர் தொல்லைகளுக்கு ஆளாக்குவதாக அமைந்ததென்று தெரிவிக்கின்றது.

இக் காலத்தில் வன்னியின் சனத்தொகை சம்பந்தமான அரசாங்கத்தின் மதிப்பீடு 70 ஆயிரம் மாத்திரமேயாகும். நம்புதகவுடன் சார்த்துதல் செய்யப்படும். இந்த மீறல்கள் சம்பந்தமாகப் பாரதூரமான விசாரணைகளும் குற்றங்களுக்குப் பொறுப்பானவர்களுக்கு எதிரான வழக்குத் தொடரல்களும் அவசியமென்று ஆலோசனைக்குழாம் உறுதியாகத் தெரிவித்துள்ளது.

வகைப்பொறுப்பு சம்பந்தமான அரசாங்கத்தின் எண்ணப்பாடு சர்வதேசத்தர நியமங்களுடன் இணக்கமானதாக அமையவில்லை என்றும் ஆலோசனைக்குழாம் தெரிவித்துள்ளது. அரசாங்கத்தின் நடவடிக்கைகள் சர்வதேச எதிர்பார்ப்புகளுக்கு மிகவும் குறைவாக இடம் பெறுவதைத் தடுக்கவேண்டுமெனில் அரசாங்கம் இரு தரப்புகளும் புரிந்த மீறல்களைக் குறித்த சார்த்துதல்களுக்கு உண்மையாகவே தீர்வு காணவேண்டுமென்றும் போரில் பலியானவர்களின் உரிமைகளையும் கௌரவத்தையும் தனது வகைப் பொறுப்புக் குறித்த அணுகுமுறையின் நடுநாயகமாக வைத்தமைக்க வேண்டுமென்றும் ஆலோசனைக்குழாம் அரசாங்கத்தை வேண்டிக் கொள்கின்றது.

இச்சூழமைவில் குழாம் சில நடவடிக்கைகளை பரிந்துரைத்துள்ளது. இவை முழுமையாக செயலாளர் நாயகத்துக்கும் இலங்கை அரசாங்கத்துக்குமிடையில் வகைப் பொறுப்பு சம்பந்தமாக தொடர்ச்சியான ஆக்கபூர்வமான உரையாடலுக்காக ஒரு சட்டகத்தை வழங்குமென்று அது நம்புகின்றது.

ஆலோசனைக்குழாம் செய்திருக்கும் விதந்துரைப்புகளை நாம் வரவேற்பதோடு அவை நேர்மையாக நடைமுறைப்படுத்தப்படும் என்றும் நம்புகின்றோம்.

மிகவும் முக்கியமான நீண்டகால இனத்துவ தேசியவாத முரண்பாடுக்கான மூலகாரணங்கள் உள்ளடக்கப்பட்ட வகையில் கடந்த காலத்தின் பரந்த பாங்குகளை நேர்மையாகத் தேடியறிவதை அனுமதிக்கும் வகைப்பொறுப்புக்கு உகந்த சூழலொன்று தற்போது இல்லையென்பதையும் ஆலோசனைக்குழாம் அவதானித்துள்ளது.

மனித உரிமைகள் மதிக்கப்படும் வெற்றிவாதத்திலிருந்து அடிப்படையான முறையில் விலகி இலங்கையின் இனத்துவபன்மைத்தன்மை தேசத்தின் எதிர்காலத்துக்காக தமிழ் மக்களை ஓர் அடித்தளமாக ஏற்றுக்கொள்வது உள்ளடங்கலாகதன் சகல மக்களுக்கும் பூரணமான உள்ளடக்கத்துடன்கூடிய குடியுரிமை என்பவற்றை அங்கீகரிக்கும் வகையிலான ஓர் அரசியல் தீர்வுக்கான ஓர் உண்மையான அர்ப்பணிப்புணர்வுடன்கூடிய ஒரு திறந்த சமூகத்தைக் கட்டியெழுப்புவது நோக்கிய காத்திரமான படிகள் இதற்கு அவசியப்படும்.

தனது பங்குக்கு தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு இலங்கையின் இனத்துவப்பன்மைத் தன்மையை அங்கீகரிக்கும் மற்றும் அதன் சகல மக்களினதும் பூரண உள்ளடங்கலான குடியுரிமையை அங்கீகரிக்கும் தமிழ் மக்களை நாட்டில் நிரந்தரமான சமாதானம் மற்றும் ஸ்திர நிலைக்கான அடித்தளமாக ஏற்றுக் கொள்வதை உள்ளடக்கும் ஓர் உண்மையான அரசியல் தீர்வை ஈட்டிக்கொள்வதற்கு எப்பொழுதுமே அர்ப்பணிப்புணர்வைக்கொண்டு வந்திருப்பதோடு தொடர்ந்தும் அத்தகைய அர்ப்பணிப்புணர்வைக் காண்பிக்கின்றது.

ஆகவே இந்தச் சந்தர்ப்பத்தை நழுவவிடவேண்டாமென்றும் இலங்கையின் சகல மக்களும் உண்மையான ஜனநாயகம் சமத்துவம் மற்றும் நீதியின் பயன்களை அனுபவிக்கக்கூடிய வகையில் ஓர் ஆக்கபூர்வமான செயல்முறையில் ஈடுபடுமாறும் இலங்கை அரசாங்கத்தை வேண்டிக்கொள்கின்றோம் என்றுள்ளது. (ச-5)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 19.04.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.